கல்கி

KALKI 16.7.2000 ரூ. 5.00



"சினிமாவுக்கு ரெடியில்லை!"

— மம்தா

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

பவர்ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

முதலீடுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள்

காலம்	முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS)			திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - I)		
	வழங்கப்பட உள்ள ஆண்டு வட்டி விகிதம்		அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்)	முதிர்வுத் தொகை ரூ. 5,000/-த்திற்கு	ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வருவாய் விகிதம்	அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்)
	மாதத்திற்கு	ஆண்டிற்கு				
12 மாதங்கள்	–	10.59%	ரூ. 47,000/-	ரூ. 5,551/-	11.02%	ரூ. 45,000/-
24 மாதங்கள்	–	11.10%	ரூ. 45,000/-	ரூ. 6,224/-	12.24%	ரூ. 38,000/-
36 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 7,155/-	14.37%	ரூ. 31,000/-
48 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 8,061/-	15.31%	ரூ. 27,000/-
60 மாதங்கள்	12.00%	12.12%	ரூ. 41,000/-	ரூ. 9,085/-	16.34%	ரூ. 24,000/-

திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - II)

காலம்	குறைந்த அளவு டெபாசிட் ரூ.	முதிர்வுத் தொகை ரூ.	ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வட்டி விகிதம்	அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்) ரூ.
60 மாதங்கள்	550/-	1,000/-	16.34%	23,650/-

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648, ஃபேக்ஸ் : 044-4982894 மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in
Visit us at : www.tnpowerfinance.com / www.tninfrafinance.com

[illegible] தேதியிட்ட [illegible] முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

ஒரு நேயரின் கோபக் கடிதம்!

ஒன்றல்ல, இரண்டல்ல - இந்த வாரம் கல்கியின் (2.7.2000) கட்டுரைத் தலைப்புகள் - ஆங்கிலம் கலந்தவை - தற்கால நடப்பில் சொல்லப்போனால் 'தமிங்கிலீஷ்' பிரயோகங்கள் - கிட்டத்தட்டப் பதினொன்று அல்லது அதற்கு மேலும் கண்டுபிடித்தேன். ஓரளவு வேதனையும் மிகவும் கலக்கமும் அடைந்தேன். விவரங்கள் :-



ஷூட்டிங் ஸ்பாட் (படப்பிடிப்பு தளம்)

வி.ஐ.பி. விருப்பம் (பிரபலங்கள் விருப்பம்)

ஆவி, கொலை, அம்மன் கதைகளுக்கு 'நோ' (ஆவி, கொலை, அம்மன் கதைகளில் நடிப்பதில்லை)

ஒரு ஸ்பூன் ஜெர்மனி அரை ஸ்பூன் ஸ்விட்சர்லாந்து (ஒரு தேக்கரண்டி ஜெர்மனி அரை தேக்கரண்டி சுவிட்சர்லாந்து)

கேம்ப் கிரண் (கிரணின் முகாம்)

கோபம், ஸ்டாக், ஏறுது (கோபம் கையிருப்பு அதிகரிக்கிறது!)

ஸ்டாலினா, நோ அட்மிஷன் (ஸ்டாலினா, அனுமதி இல்லை)

மினரல் வாட்டர் விற்பதா மெட்ரோவாட்டரின் வேலை? (கனிமநீர் விற்பதா சென்னைக் குடிநீரின் வேலை?)



லியோ சர்ட் (சிங்கச் சட்டை)

'பாஸ்' ஆன தாஸ்! (முதலாளியாக மாறிய தாஸ்)

ஃபாருக் பாணி ஷாக் ட்ரீட்மெண்ட் (ஃபாருக் பாணி அதிர்ச்சி வைத்தியம்)

டூப், ரீல், மாய்மாலம் - எங்கே காணலாம்? (பொய், பெரியபொய், மிகப்பெரிய பொய் எங்கே பார்க்கலாம்?)

கம்ப்யூட்டர் புரமாகிறது காஞ்சிபுரம்! (கணினிபுரமாகிறது காஞ்சிபுரம்)

• கொடுவேரி

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

"பெரிய ஜோக்"



"பா.ம.க. மதில் மேல் பூனையாக அமர்ந்திருக்கிறது. எந்தக் கூட்டணியில் அதிக இடங்கள் கிடைக்கிறதோ அந்தக் கூட்டணியில் சேர்ந்து விடும் என்ற பேச்சுகள் பலமாக இருக்கும் நிலையில் 'தமிழகத்தின் இரண்டாவது பெரிய கட்சி பா.ம.க. என்று டாக்டர் ராமதாஸ் சொல்லியிருப்பது பெரிய ஜோக்" என்கிறார் புதிதாக துவங்கப்பட்ட காமராஜ் ஆதித்தனார் கழகத் தலைவர் டாக்டர் எஸ்.சுரேஷ். "உண்மையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு பா.ம.க. மூலம் இரண்டரை சதவீத வாக்குகள்தான் கிடைத்தது. இந்த உண்மை கலைஞர், வை.கோ., இல. கணேசன் ஆகியோருக்கு நன்கு தெரியும். 1996ல் முப்பத்தைந்து சட்டமன்றத் தொகுதிகளில்தான் பா.ம.க. பத்தாயிரம் வோட்டுகளுக்கு மேல் வாங்கியிருந்தது. அதே தொகுதிகளில் 1999ல் அ.தி.மு.க. அதிக வோட்டு வாங்கியிருப்பதிலிருந்து பா.ம.க. செல்வாக்கு பாதாளத்தில் இருப்பது புலப்படும்" என்று சொல்கிறார் சுரேஷ்.

- கௌசி

ஒளியை ஓவர்டேக் செய்யும் ஒளி! (ஒளியை முந்தும் ஒளி!)

இதெல்லாம் என்ன? சுமிதான் பிடிவாதக் காரி. மாற்ற, திருத்த முடியாதவள். திருத்திக் கொள்ளாதவள் - நீங்களுமா? ஏன் கூடிய வரை தமிழில் தலைப்புகள் தரக் கூடாது? "கல்கி" பார்த்தால் ரத்தக் கண்ணீர் வடிப் பார். நிற்க.

11-6-2000 இதழ் அட்டையில் "மாயா, பார்க்கா, சப்பாணி" என்று ஒரு தலைப்பு. என்ன இழவு தலைப்பு இது? மொத்தத்தில் கையறு நிலைதான் மிஞ்சுகிறது.

அன்பன்

கொடுவேரி,

கோவை-38

அன்புள்ள வாசகர்களே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வாசகர் கொடுவேரி பட்டியலிட்ட தலைப்புகளுக்குப் பக்கத்தில் பிராக்கெட் - மன்னியுங்கள் - அடைப்புக் குறிக்குள் அவர் எதிர்பார்க்கும் தூய தமிழ் தலைப்புகளையும் கொடுத்துள்ளோம். உங்கள் எதிர்பார்ப்பு என்ன? கீழ்க்கண்ட அபிப்பிராயச் சீட்டை பூர்த்தி செய்து 22.7.2000 தேதிக்குள் அனுப்புங்கள். அபிப் பிராயச் சீட்டு அனுப்பும் வாசகர்களுள் பத்து பேருக்கு (குலுக்கல் முறை தேர்வுதான்) அமரர் கல்கியின் 'மூன்று மாதம் கடுங்காவல்' என்ற நூல் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.


கொடுவேரி தமிழுக்கு ஆதரவு ☐ ஆதரவு இல்லை ☐

தேர்வு செய்யும் கட்டத்தில் ✔ குறி இடவும்.

பெயர் ....

விலாசம் ....

....



ம.தி.மு.கவின் ஈரோடு மாநாட்டில் 'தனி ஈழ' முழக்கமிட்டுவிட்டு மறுநாளே சப்தம் போடாமல் டெல்லி வந்த ராமதாஸ், பிரதமர், அத்வானி, ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோரைச் சந்தித்து திடீர்ப் பரபரப்பை ஏற்படுத்தினார். அவர் எங்கு தங்கியிருக்கிறார்? யாரைச் சந்திக்கிறார் போன்ற விஷயங்களெல்லாம் பரம ரகசியமாக வைக்கப்பட்டது! நெருக்கமானவர்களிடம் கூட மூச்சு விடவில்லை. பிரதமரைச் சந்தித்த பின் மாலை வரை ரகசியமாக இருந்த ராமதாஸ், பிறகு அனைத்துப் பத்திரிகைகளுக்கும் ஒரு அறிக்கையை ஃபேக்ஸ் செய்தார். அதில், அறுபத்து ஒன்பது சதவிகித இடஒதுக்கீட்டை சட்டபூர்வமாக்க பாராளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத்தொடரில் மசோதா ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமரிடம் சொன்னதாகக் கூறப்பட்டிருந்தது. ஆனால் இது இல்லையாம் விஷயம்!

பிரதமரிடம் ராமதாஸ் வேண்டுகோள்!



'தனி ஈழம்' என்பது எங்கள் கட்சியின் நிலை, ஆனால் மத்திய அரசின் ஒட்டு மொத்த முடிவை ஆதரிப்போம்' என்று பிரதமரை 'ஜில்'லிட வைத்த ராமதாஸ், அதே மூச்சில் கருணாநிதியையும் வாழப்பாடியையும் கொஞ்சம் அடக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம்! பிரதமரும் 'நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று சொன்னதாக அகமகிழ்ந்திருக்கிறாராம் ராமதாஸ்!

● தேசிய மாநாட்டுக் கட்சியின் காஷ்மீர் சுயாட்சித் தீர்மானத்தை எதிர்பார்த்தபடியே மத்திய அமைச்சரவை நிராகரிக்க, அன்று டெல்லியில் இருந்த ஃபாரூக் அப்துல்லாவுக்குப் பயங்கர டென்ஷன். பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கு முன்பே அமைச்சரவை முடிவின் பிரதி ஒன்று ஃபாரூக்குக்குக் கொடுக்கப்பட, தமக்குத் தெரிந்த பத்திரிகையாளர்களிடமெல்லாம் இன்னின்ன கேள்விகளைக் கேளுங்கள் என்று அட்வைஸ் செய்தாராம். அமைச்சரவையின் முடிவைத் தெரிவிக்க வந்த மத்திய அமைச்சர் பிரமோத் மகாஜனை ஏகப்பட்ட கேள்விக் கணைகள் வந்து தாக்க, சமாளிக்க முடியாமல் நெளிந்தார் அவர். விஷயம் அத்வானி காதுக்குச் சென்றது. அன்று மாலையே அவரும் பத்திரிகையாளர் கூட்டத்தைக் கூட்டி, சுயாட்சித் தீர்மானத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் புட்டுப் புட்டு வைத்து, அது எப்படி பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று விளக்கினார். 1974-ல் தி.மு.க. அரசு ராஜமன்னார் கமிஷன் விசாரணைக்குப் பிறகு கொண்டு வந்த சுயாட்சித் தீர்மானத்தை மத்திய அரசு நிராகரித்ததைச் சுட்டிக்காட்டினார் அத்வானி. 'இதுக்கும் தமிழன்தான் முன்னோடி பாத்தீங்களா?' என்றார் கூட்டத்திலிருந்த ஒரு தமிழக அதிகாரி!

● சோனியாவை எதிர்த்து காங்கிரஸ் தலைவர் பொறுப்பிற்குப் போட்டி விடுவதாக இருந்த ராஜேஷ் பைலட்டின் மரணத்திற்குப் பிறகு காங். தலைகள் எதுவும் சோனியாவை எதிர்க்காது என்று கூறப்படுகிறது. 'மூத்த தலைவர்' என்று தம்மை அழைத்துக் கொள்ளும் பிரணவ முகர்ஜி கூட போட்டி போட மாட்டார் என்று தெரிகிறது. இதனால் ஏகக் குஷியில் இருக்கிறார் சோனியா! இதையடுத்து தமக்கு வேண்டிய தலைவர்களை மாநிலங்களில் தலைவராக்க இருக்கிறாராம். தமிழகத்தைத் தொடர்ந்து மே. வங்கம், உ.பி., அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் தலைமைகள் மாறலாம் என்கிறது ஜன்பத் வட்டாரம். ''ஆனால், 'சோனியாவுக்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. தன்னிஷ்டப்படி மாநில தலைவர்களை மாற்றினால் இன்னும் கடுமையான எதிர்ப்பு இருக்கும் என்கிறார்கள் சில காங்கிரஸ் தலைவர்கள்!

— இந்திரப்ரஸ்தன்

ஜெ.வுக்கு வந்த மூன்று லட்சம் டாலர்!

— பணம் எப்படி அனுப்பப்பட்டது?

— யாரால் அனுப்பப்பட்டது; எதற்காக?

— சூடு பிடிக்கிறது விசாரணை!

ஜெயலலிதாவுக்கு அனுப்பப்பட்ட மூன்று லட்சம் அமெரிக்க டாலர் பற்றி சி.பி.ஐ வழக்கு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. 1996ல் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ் வழக்குப் பதிவு செய்யப்பட்டாலும் விசாரணையில் எந்தவித மான முன்னேற்றமும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டது.

1998ல் அம்மா தயவில் வாஜ்பாய் அரசு அமைந்ததில் கிட்டத்தட்ட 'கோமா' நிலைக்குத் தள்ளப்பட்டது இந்த வழக்கு. 1999ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தி.மு.க அரசின் 'அழுத்தம்' காரணமாக வழக்குக்கு 'ஆக்ஸிஜன்' கொடுக்கப்பட, கடந்த மே மாதம் சி.பி.ஐ இணை இயக்குனர் இங்கிலாந்தில் உள்ள சானல் தீவுகளுக்கு விசாரணைக்காக விசிட் அடித்தார்.

இப்போது, யாரால் பணம் அனுப்பப்பட்டது; எதற்காக அனுப்பப்பட்டது; எப்படி அனுப்பப்பட்டது போன்ற விவரங்கள் சி.பி.ஐக்குக் கிடைத்திருக்கின்றன. இந்த வழக்கு சம்பந்தமாக, தொழில் அதிபர் எம்.ஏ.எம். ராமசாமி மற்றும் கட்டட காண்ட்ராக்டர் கே.டி.பி. மேனன் என்பவரது வீடு மற்றும் அலுவலகங்களில் சி.பி.ஐ அதிரடி ரெய்டு நடத்தி முக்கிய ஆவணங்களைக் கைப்பற்றியிருக்கிறது. கே.டி.பி. மேனன் சென்ற வருடம் இறந்துவிட்டார்.

இந்த வழக்கு விவரம்தான் என்ன? பழசைக் கொஞ்சம் பார்ப்போம். 1991ம் ஆண்டு மே மாதம் அம்மா ஆட்சிக்கு வருகிறார். அதே ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் தேதி சானல் தீவிலிருக்கும் கிரிண்ட்லேஸ் வங்கியில் மூன்று லட்சம் அமெரிக்க டாலருக்கு அம்மா பெயரில் ஒரு டிமாண்ட் டிராப்ட் (எண்: 0201014З) எடுக்கப்படுகிறது. இந்தக் காசோலை சென்னை கனரா வங்கியில் உள்ள அம்மா கணக்கில் 1992, ஜனவரி 22ம் தேதி வரவு வைக்கப்படுகிறது.

இந்த மூன்று லட்ச அமெரிக்க டாலரின் அன்றைய மதிப்பு ரூபாய் 77,52,591.

கிட்டத்தட்ட இதே கால கட்டத்தில் அதாவது 1991ம் ஆண்டு டிசம்பர் 19ம் தேதியிட்டு இரண்டு லட்சம் அமெரிக்க டாலருக்கான டிமாண்ட் டிராப்ட் (எண்:085346) பரோடா வங்கி, துபாய் கிளையில் சசிகலா பெயரில் எடுக்கப்பட்டது. இதன் அன்றைய மதிப்பு ரூபாய் கணக்கில் 51,47,955. இந்தப் பணம் சென்னையில் உள்ள கனரா வங்கியில் சசிகலா கணக்கில் 1991ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரவு வைக்கப்பட்டது.

அமெரிக்க டாலர் ஜெ.வுக்கு வந்த விவரம் வெளிப்பட்டது எப்படி?

1992–93ம் ஆண்டுக்கான வருமான வரி கணக்கில் ஜெயலலிதாவே இந்த வரவைப்



பற்றி தெரிவித்திருந்தார். 1991ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து 1992ம் ஆண்டு மார்ச் வரை மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்திருந்தது. இந்தத் திட்டத்தின்படி, தாமாக முன் வந்து வருமானம் பற்றிய கணக்குகளைச் சமர்ப்பிப்பவர்கள், வெளி நாட்டிலிருந்து தங்களுக்குக் கிடைக்கும் வருமானத்திற்குக் கணக்கு காட்ட வேண்டாம் என்று விதிவிலக்குத் தரப்பட்டது.

அதன் அடிப்படையில், மூன்று லட்சம், அமெரிக்க டாலர் தமக்கு யார் அனுப்பியது' என்பதைத் தாம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லியிருந்தார் ஜெயலலிதா. ஆனால் வருமான வரித் துறையோ 'இந்தச் சலுகை சாதாரண மனிதர்களுக்குப் பொருந்துமே தவிர அரசு பதவியில் இருக்கும் முதல்வருக்குப் பொருந்தாது' என்று கூறி அதை வருமானமாகக் கணக்கிட்டு வரி மதிப்பீட்டைச் செய்தது. அது மட்டுமல்லாமல் பணத்தை வெளிநாட்டிலிருந்து அனுப்பியவர் என்.ஆர்.ஐதானா? என்றும் விசாரிக்க மாநில அரசுக்குக் கடிதம் எழுதியது. ஏனென்றால், வெளி நாட்டில் வாழும் இந்தியர் பணத்தை அனுப்பியிருந்தால் தான் வருமான வரி துறையின் சலுகைகளை அனுபவிக்க முடியும்.

வருமான வரித் துறையின் புகாரைப் பெற்றுக் கொண்ட தமிழக அரசு, வெளி நாட்டிலும் விசாரிக்க வேண்டியிருந்ததால் சி.பி.ஐ.யிடம் தெரிவித்தது. பின்னர் சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தது.

சென்னையில்



• எம்.ஏ.எம். ராமசாமி



• ப்ரேம்

மேனன் வீட்டைச் சோதனையிட்டதில் முக்கியமான இரண்டு கடிதங்கள் சிபிஐக்குக் கிடைத்தன. ஒன்று கிரிண்ட் லேஸ் வங்கிக்கு அம்மா பெயரில் டிராப்ட் எடுக்க மேனன் எழுதிய கடிதம். மற்றொன்று அந்த டிராப்ட்டை இணைத்து அம்மாவுக்கு மேனன் அனுப்பிய கடிதம். சானல் தீவு வங்கியில் இருந்த மேனன் கணக்கில் நான்கே மாதங்களில் மூன்று லட்சம் டாலரும் போடப்பட்டு, எடுக்கப்பட்டு இருக் கிறது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்தப் பணத்தில் 2.4 லட்சம் டாலர் எம்.ஏ.எம். ராமசாமி (சென்னை முகவரி) என்பவரது அக்கவுண்டில் இருந்து மேனன் கணக்குக்கு மாற்றப்பட்டிருந் ததுதான்! மேனன் டிராப்ட் எடுத்து அம்மாவுக்குக்



"இந்த ரியல் எஸ்டேட்காரங்க விக்கிற மனை சிட்டியிலிருந்து ரொம்...ப தூரத்தில இருக்குன்னு நினைக்கிறேன்."

"எதை வச்சு சொல்றீங்க?"

"மனையைப் பார்வையிட வருகிறவர்களுக்கு பாஸ்போர்ட், விசா ஏற்பாடு செய்து தரப்படும்னு விளம்பரம் பண்ணியிருக்காங்களே!"

— டி.என். சத்யா முருகவேல்

கொடுத்திருக்கிறார்.

இப்போது சி.பி.ஐ முன் உள்ள கேள்விகள்: சானல் தீவு வழியாக அம்மாவின் கறுப்புப்பணம் வெள்ளையாக்கப்பட்டதா அல்லது தொழிலதிபருக்குச் செய்யப்பட்ட சலுகைகள் காரணமாகக் கொடுக்கப்பட்ட லஞ்சப் பணமா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களும் விரைவில் கிடைத்துவிடும் என்று விசாரணையைத் துரிதப்படுத்தியிருக்கிறது சி.பி.ஐ.

ஆனால் தொழிலதிபர் எம்.ஏ.எம். ராமசாமியோ தமக்கு சானல் தீவில் வங்கிக் கணக்கே கிடையாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார். இதற்கு மறுபுறமாக அந்தத் தொழிலதிபருக்கு அம்மா ஆட்சியில் கிடைத்த சலுகைகளை சி.பி.ஐ பட்டியலிடுகிறது. தமிழ்நாடு துறைமுகங்களில் நிலக்கரி இறக்கும் ஏஜெண்ட் பொறுப்பு, கடற்கரையை ஒட்டிய எம்.ஆர்.ஜி நகரில் சுற்றுப்புறசூழல் விதிகளுக்கு மாறாக பல அடுக்கு மாடிகள் (ஏழு பிளாக்குகள்) 45 கிரவுண்டில் கட்ட அனுமதி கொடுத்தது, பல் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி என்று சலுகைகள் நீள்கின்றன.

வளர்ப்பு மகனுக்குத் திருமணம் நடந்தது தொழிலதிபரின் நிலத்தில்தான்!

இப்போது சசிகலாவுக்கு அனுப்பப்பட்ட பணத்தைப் பற்றி தீவிரமாக விசாரணை மேற்கொண்டிருக்கிறது. அதிலும் ஜெயலலிதா விவகாரத்தைப் போன்று நடந்திருக்குமானால் பாக்கியிருக்கும் ஒன்றிரண்டு முடிச்சுகளும் அவிழும் என்று சி.பி.ஐ கருதுகிறது. துபாயில் இது பற்றி விசாரிக்க சி.பி.ஐ அதிகாரிகள் சென்று இருக்கிறார்கள்.

இந்த விவகாரத்தில் அடிபடும் மேனன் என்பவர் சென்னையைச் சேர்ந்தவர்தான். சில காலம் வெளிநாட்டிலும் வசித்திருக்கிறார். அவருக்கு எட்டு மகன், மகள்கள். தயாரிப்பாளராகவும் நடிகராகவும் இருக்கும் ப்ரேம் என்பவர் அவரது மூன்றாவது மகன்.

மேனனைப் பற்றி விசாரிக்க செயிண்ட் மேரி சாலையில் வசிக்கும் பிரேமைச் சந்திக்கச் சென்றோம். நாம் சென்ற சமயம் வீட்டிற்குள்ளேயே ஷூட்டிங் நடத்திக் கொண்டிருந்தார் ப்ரேம். அவரைச் சந்திக்க வேண்டும் என்று சொன்னவுடன் அவரது உதவியாளர் ஆண்டனி என்பவர் விஷயம் என்ன வென்று விசாரித்துவிட்டு "இது பற்றி ப்ரேம் ஏதும் சொல்ல மாட்டார். பெரியவர் இறந்து போய்விட்டார். நீங்கள் இதற்கு மேல் எதுவும் கேட்காதீர்கள் என்று முடித்துக்கொண்டார்.

டாலர் விவகாரம் ஸீரியஸ் ஆவதைப் பற்றி அம்மா வட்டாரம் சிறிதும் கவலை கொள்ளாமல் இருக்கிறது. "இந்த வழக்கிலெல்லாம் தண்டனை இருக்காது. அபராதம்தான் இருக்கும்" என்கிறார் அ.தி.மு.க. பிரமுகர்களுக்கு ஆஜராகும் ஒரு வழக்கறிஞர். ஆனால் சி.பி.ஐ.யோ "அவருக்கு வந்தது லஞ்சப் பணம் என்பது நிரூபிக்கப்பட்டால் தண்டனை கடுமையாக இருக்கும்" என்கிறது. டான்ஸி வழக்கில் 'கையெழுத்தே என்னுடையதல்ல' என்று அதிரடி அடித்த ஜெ., டாலர் வழக்கில் என்ன சொல்வார் என்று யாராலும் ஊகிக்க முடியாது. ஒருவேளை எனக்கு சென்னை வங்கியில் கணக்கே கிடையாது. கருணாநிதிதான் என் பெயரில் கணக்குத் துவங்கி டாலரை அதில் போட்டு, பொய் வழக்கு சுமத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறார்' என்று கூடச் சொல்லலாம்!

— தில்லப்பா

"காமர்ஸ் புத்தகம் வாங்கறதுக்காக கோடம்பாக்கத்துல உள்ள ஒரு புக்ஷாப் போனேன். அந்தக் கடையில நின்னுட்டிருந்தப்போ நிலா டீ.வியிலயிருந்து வந்தாங்க. 'உங்க ஃப்ரெண்டுக்கு எதுவும் மெசேஜ் சொன்னீங்கன்னா சொல்வோம்'னாங்க. சரின்னு சொன்னேன். அப்புறம் உங்களுக்குப் பிடிச்ச சினிமா பாட்டு கேளுங்களேன்னாங்க. எனக்குப் பிடிச்சப் பாட்டெல்லாம் நான் கேட்க கேட்க அது இல்லை, இது இல்லைன்னாங்க. எனக்குக் கடுப்பாயிடுச்சு. சண்டை போட்டேன். பிறகு அவங்க கொடுத்த லிஸ்ட்ல இருந்து வேண்டா வெறுப்பா ஒரு பாட்டைச் சொன்னேன். அப்பதான் அந்த நிகழ்ச்சியைப் பண்ணியவர், 'இவ்வளவு நல்லா பேசறீங்களே... நீங்க ஏன் காம்பயரிங் பண்ணக் கூடாது'ன்னு கேட்டார். அட்ரஸ் வாங்கிட்டுப் போனார். ரெண்டு மூணு நாள்ல நிலா டீ.வியை மூடியாச்சுன்னாங்க! நம்ம மூஞ்சிய டீ.வியில பார்க்கலாம்னா இப்படியாயிட்டுதேன்னு நொந்துகிட்டிருந்தேன். அடுத்த ரெண்டு மாசத்துல ஜெயா டீ.வியில இருந்து லெட்டர் வந்தது. இங்க கொடுத்த அட்ரஸ் அங்க எப்படி போச்சுன்னு தெரியலை. போனேன். கேமரா டெஸ்ட் எதுவும் இல்லாம நேரடியாவே புரோக்ராம் பண்ணச் சொல்லிட்டாங்க."

– ஜெயா டீ.வியின் டிபன் ரெடி மம்தா, ஏற்ற இறக்க



ஆக்ஷன்களுடன் குழந்தைக்குப் பாட்டி கதை சொல்வது மாதிரி தமது டீ.வி. என்ட்ரி கதையைச் சொன்னார்.

தற்போது வைஷ்ணவா கல்லூரியில் பி.காம் படித்து வரும் இந்த மம்தா பஸ்ஸில் போனால் தாய்க்குலங்கள் கேள்வி கேட்டுக் குதறி எடுத்து விடுகிறார்களாம்.

"முந்தாநாள் டீ.வியில பண்ணினியேம்மா, அதுல எவ்வளவு

சினிமாவுக்கு ரெடியில்லை!

— மம்தா

மாவு போடணும், எண்ணெய் எவ்வளவு? டேஸ்ட்டா இருக்குமான்னு ஏகப்பட்ட கேள்விகள். இதுக்குப் பதில் சொல்றதுக்குள்ள வாழ்க்கையே வெறுத்துப் போயிடுது. என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் ஏண்டி டீ.வியில வர்றே. இப்ப பாரு நாங்களும் சேர்ந்து அவஸ்தை படறோம்பாங்க. வீட்டுக்கு வந்தா ஃபோன். ஒருத்தர் ஒரு நாள் ஃபோன் பண்ணி உங்க டிபன்ரெடி நிகழ்ச்சி வர்ற நேரம் என் மனைவி வேற எந்த வேலையும் செய்ய மாட்டேங்கிறாம்மா...ங்கிறார்" என்றவர், "ஒரு விஷயம் தெரியுமா... கொஞ்சம் காதைக் கொடுங்க, நான் சமையல் விஷயத்துல கொஞ்சம் அப்படி இப்படித்தான்' என்று டமாரென ரகசியத்தை உடைத்தார்.

மம்தா டீ.வி நிகழ்ச்சியில் செய்து காட்டிவிட்டு வீட்டிலும் வந்து செய்து பார்த்த பதார்த்தம் மோதகம்-கொழுக்கட்டையாம்!

'வீட்ல அம்மா, அக்கா, அப்பா மூன்று பேரும் என் நிகழ்ச்சி பற்றிய விமர்சகர்கள். இதை அப்படிப் பண்ணியிருக்கலாம், இப்படிப் பண்ணியிருக்கலாம்ங்கறதை அக்கா சொல்வா. அவளுக்கு நான் காம்ப்யரிங் பண்ற 'நேயர் நேரம்' ரொம்ப புடிக்கும்" என்கிறார்.

'காலேஜ் படிச்சுட்டே காம்ப்யரிங் பண்றது கஷ்டமாயில்லையா?'

"இதிலென்ன கஷ்டம்... வாரத்துல ஒரு நாள், ரெண்டு நாள் ஷூட்டிங் இருக்கும். அன்னைக்கு மட்டும் 'கட்'டடிச்சா போச்சு('கட்'டடிக்காமல் காலேஜா!)" என்கிறார் கூலாக.

இவருடைய தற்போதைய ஒரே பிரச்னை காலேஜ் மாணவர்கள்தான். "கிண்டல் தாங்க முடியலைங்க. மம்தா குல்கர்னிங்கறாங்க, இந்தப் பெயரை வச்சு கானா பாட்டு வேற.... குல்கர்னிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கு? பேஜார் பண்றாங்க" என்கிறார்.

திடீர் சினிமா வாய்ப்புகூட வந்ததாம். பார்த்திபனுக்கு ஜோடியாக நடிக்க வந்த வாய்ப்பை மறுத்திருக்கிறார்.

"வீட்டுக்கு வந்த மகாலட்சுமியை வேண்டாம்னு சொல்லிட்டீங்களே?"

"மகாலட்சுமியா...? நீங்க வேற...! இப்பவே பொது இடத்துல நடக்க முடியலை. சினிமாவுக்குப் போய்ட்டா கேட்கவே வேண்டாம். யாருக்கு வேணும் இது. இப்ப இருக்கிற நிம்மதிகூட போய்விடும்" என்கிறார் தெளிவாக!

— அப்பு

அட்டை, வண்ணப்படம்: ஐரிஸ்


திடீர்ப் பூசாரிகள்!

காச் மூச்

"நமது சென்னை மாநகர மேயர் ஸ்டாலின் புதிது புதிதாக பாலங்கள் கட்டுகிறார். சாலைகளைச் செப்பனிடுகிறார். மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் சென்னை நகரில் ஆங்காங்கே நடைபாதைகளில் புற்றீசல் போலப் பெருகி வரும் திடீர் கோயில்கள் மீது மாநகராட்சியின் நடவடிக்கை தீவிரமாகப் பாயாமல் இருப்பது வருத்தமாயிருக்கிறது. 'சாவி'யா இப்படிச் சொல்வது என்று பலருக்கு வியப்பாக இருக்கலாம். நான் கடவுள் பக்தி நிரம்ப உடையவன். பூஜைகள் செய்பவன். என் சொந்த ஊரில் (மாம்பாக்கம்) கோவிலைப் புதுப்பித்து மதில்சுவர் கட்டித் தரலாம் என்று திட்டமிட்டிருக்கிறேன். அது வேறு விஷயம். ஆனால் பொது மக்களுக்கு இடைஞ்சலாக இருக்க – அது ஆண்டவனாகவே இருந்தாலும், உரிமையில்லை என்று நினைப்பவன் நான்.

இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் தான் அது கோயில். புதிதாக பல அடுக்கு மாடி வீடுகள் ஒரு இடத்தில் கட்டப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த வளாகத்தில் ஒரு சிறிய கோயில் அமைந்தால் தப்பில்லை.

ஆனால் சென்னையில் என்ன நடக்கிறது? போகிற போக்கைப் பார்த்தால் ஒவ்வொரு பிளாட்பாரத்திலும் ஒரு பிள்ளையார் கோயில் 'தோன்றி' விடும் போலிருக்கிறது. விநாயக சதுர்த்தி நேரங்களில் இந்த 'திடீர்ப் பூசாரிகளின் கூத்து அடேயப்பா! வீடு வீடாகப் போய் காசு வசூலிப்பதும், ரோட்டில் போகிறவர்களைத் தொடர்ந்து கொண்டே போய் உண்டியல் குலுக்குவதும், சினிமாப் பாட்டு கச்சேரி வைப்பதும், ஒலிபெருக்கிகளை அலற விட்டு அக்கம் பக்கத்தவர்களின் தூக்கத்தைக் கெடுப்பதும் எனக்குக் கோபம் கோபமாக வருகிறது.



— சாவி

நான் வெளிப்படையாகவே சொல்கிறேன். நடைபாதைகளில் புதிய கோயில் கட்ட, அது எந்தக் கோயிலாக இருந்தாலும் இனி அனுமதி தரக் கூடாது. திடீர்ப் பூசாரிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்காக எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் நான் 'ஜே' போடத் தயார்.

மீண்டும் சொல்கிறேன், எனக்குப் பிள்ளையார் மீது கோபமில்லை. பிள்ளையாரை வைத்து பிஸினஸ் பண்ணுகிறவர்கள் மீது தான்.

— ராணிமைந்தன்





உங்களுக்கு பிடித்தமான காரை
நீங்களே தேர்ந்தெடுங்கள்.
மற்றதை எங்களிடம் விட்டு விடுங்கள்.

உங்கள் விருப்பத்திற்கேற்ற காரை நீங்கள் வாங்க.

KVB வழங்கும்

ப்ளக்ஸி மொபைல்

மேலும் விபரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள KVB கிளைகளை அணுகுங்கள்.

KVB

துவக்கம் 1916

தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

பதிவு மற்றும் மத்திய அலுவலகம், கரூர் – 639 002.

இணையத் தொடர்புக்கு www.kvb.co.in

நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி


A.D. நவநீதன்
சேர்மன்



சென்னைத் திருவொற்றியூரில் உள்ள அந்தத் தெருவின் பெயரே வித்தியாசமானது. அதைவிட அந்த தெருவின் முதல் வீட்டில் வசித்து வரும் அறுபது வயது நாராயணன்- ஜெயலட்சுமி தம்பதி முற்றிலும் வித்தியாசமானவர்கள் -இப்படியொரு தகவலைக் கேள்விப் பட்டதும் புறப்பட்டோம்.

திருவொற்றியூர் கிராமத் தெருவில் இவர்களது வீட்டை அடைந்தபோது பிற்பகல் மூன்று மணி. கதவு இல்லாத வீடு. செங்கற்களைக் கொண்டே சின்னச் சின்ன ஜன்னல்கள். சிமெண்ட் பூச்சுடன் நிற்கும் வெளிச் சுவர். இருபதுக்கு பத்து நீள அகலமுள்ள ஒரே நீண்ட அறை. அதிலேயே சின்னதாய் ஒரு சமையல் அறை. இதுதான் ஒட்டு மொத்த வீடு.

தரையில் பாய் விரித்து படுத்திருந்த முதியவர், அரவிந்தரைப் போல வெள்ளை தாடியுடன் இருந்தார். இடுப்பில் காவி வேஷ்டி. கொஞ்சம் தள்ளி அவரது துணைவியாரும் தூங்கிக் கொண்டிருக்க, கூடவே அவர்களது குழந்தைகள்! (அவர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்). நான்கு வெள்ளை நிற நாய்கள். இரண்டு அரக்கு நிறம்.



ஒன்று சாம்பல் நிறம். எல்லா நாய்களுமே நல்ல உறக்கத்தில் இருந்தன. ஒரு நாய் பெரியவரின் வயிற்றுப் புறம் படுத்து கிடக்கிறது... மற்றொரு நாய் மடங்கிப் படுத்திருந்த அம்மையாரின் கால்களை தலையணைபோல் பாவித்து படுத்திருக்க, இருவருக்கும் நடுவில் இரண்டு நாய்கள். ஒருநாய் நாற்காலி ஒன்றில் உடலைச் சுருட்டியபடி படுத்திருந்தது. அதன் மேல் பூனை ஒன்று! வீட்டின் இடது மூலையில் வைக்கப்பட்டிருந்த நீண்ட மரச்சட்டம்

மெக்கானிக்

ஒன்றில் அமர்ந்திருந்த ஒற்றைக் கழுகு கண்களை அசைத்து நம்மை அப்படியும் இப்படியும் பார்த்தது. அறை முழுக்க பலவித மோட்டார் சைக்கிள்களின் உதிரிப் பாகங்கள்!

இதற்கு நேர் எதிராக ஒரு பெரிய சைஸ் ஆர்மோனியப் பெட்டி, ஒரு தம்பூரா, ஒரு வயலின் என்று சில மென்மையான இசைக் கருவிகள் கொஞ்ச இடத்தை பவ்யமாய் பிடித்துக் கொண்டிருந்தன. இப்படி நாம் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தபோது, கால்களில் பஞ்சுபோல் ஏதோ உரச, திடுக்கிட்டு குனிந்து பார்த்தால், வரிசையாய்



ஐந்து பூனைக் குட்டிகள்! பூனைகளின் சத்தம் கேட்டு, பதிலுக்கு கீ...கீ... என்று கிளிகளின் கத்தல். கூண்டில் இரண்டு கிளிகள் இருந்ததை அப்போதுதான் பார்த்தோம். இவர்கள் என்ன விலங்குகள் காப்பகம் நடத்துகிறார்களா? என்று வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தபோது, கிளிகளின் சப்தத்தில் பெரியவர் எழுந்தார். கொஞ்ச நேரத்தில் அந்த வீடே விழித்துக் கொண்டது.

"திருவொற்றியூர் வந்து குடியேறி நாற்பது வருடங்கள் ஓடியே விட்டது. கிட்டதட்ட முப்பது வருடங்கள் ஒரு முழு நேர மெக்கானிக்காக இருந்தேன். என்னிடம் தொழில் பழகியவர்கள் பெரிய மெக்கானிக்குகளாக இருக்கிறார்கள். மெக்கானிக் தொழில் போதும் என்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு விட்டுவிட்டேன்" என்ற டி.கே. நாராயணனைப் பற்றி திருவொற்றியூரின் எந்த மூலையில் நின்று கொண்டு 'மெக்கானிக் சாமியார்' என்று கேட்டாலும் சொல்லிவிடுகிறார்கள். இப்போது நாராயணன் கர்நாடக இசையைப் பயிற்றுவிக்கும் இசை ஆசிரியர். வயது வித்தியாசமின்றி ஐந்து வயது முதல் ஐம்பது வயதுக்காரர்கள் வரை மூன்று 'பேட்ச்'சாக இவரிடம் இசையைக் கற்றுச் செல்கிறார்கள். கட்டணமாக யாரிடமும் எதுவும் கேட்பதில்லை. கொடுப்பதை வாங்கிக் கொள்கிறார்.

"மெக்கானிக் தொழிலில் பணம் கிடைத்தது. ஆனால் ஆத்ம திருப்தி இல்லை. சிறுவயது முதலே இசைமீது தனிக்காதல் உண்டு. என் மனைவி ஒரு பாடகி. இதய நோய் காரணமாக இப்போது பாடுவதில்லை. எங்களை இணைத்ததே இந்த இசைதான். எனவே இசையை சொல்லித்தரவேண்டும் என்று நினைத்தேன். மியூசிக் அகாடமியிலும் மேலும் சில வித்வான்களிடமும் இசையைப் பயின்றேன்" என்கிறார்.

இத்தனை நாய்கள், பூனைகள், கழுகு, கிளிகள் என்று இந்தச் சிறிய வீட்டில், ஒரே படுக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களே இது எப்படி சாத்தியமாயிற்று?

"இந்த நாய்களும், பறவைகளும் பேசுவதில்லையே தவிர, நம்மிடம் அத்தனை அன்பும், அறிவும் கொண்டவை. தொடக்கத்தில் ஒரு பெண் நாய்தான் வளர்க்கத் தொடங்கினேன். அது நிறைய குட்டிகளைப்

சாமியார்!





போட்டது. இப்படித்தான் நாய்கள் பெருகின. ஒருமுறை மூன்று நாய்கள் ஒரே நேரத்தில் குட்டி போட்டதால், இருபத்தேழு குட்டிகள் வீடு முழுக்க திரிந்து கொண்டிருந்தன" என்றவர் நாற்காலியில் படுத்திருந்த ஒரு நாயைக் காட்டினார்.

"இந்தக் குட்டிகளின் தகப்பன் இது. பத்து வயது ஆகிவிட்டது. இவனைச் செல்லமாக 'தத்தி' என்று கூப்பிடுவேன். இப்போது இரண்டு கண்ணும் தெரியாது. இந்த வீடு இவனுக்கு பழக்கப்பட்டது என்பதால் தத்தி, தத்தி போய் வருவான்... பார்வைக்காக நானும் பார்க்காத வைத்தியமில்லை" என்றார்.

கொழு கொழுவென்றிருந்த இரண்டு நாய்களுக்கு கப்பு, ருக்கு என்று இவரது இசை மாணவர்கள் பெயர் சூட்டி அழைக்கிறார்களாம். பெரியவரோடு பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென வெளியே ஓடிய ருக்கு, ஒரு பூனைக் குட்டியைத் தனது வாயால் கவ்வி வந்து வீட்டிற்குள் போட்டது. நமக்கே ஆச்சர்யம். "பூனையோ பூனைக் குட்டிகளோ வெளியே போவது நாய்களுக்குப் பிடிக்காது. உடனே ஓடிப்போய் பொய்க்கடி கடித்து, உள்ளே தூக்கி வந்துவிடும். காரணம் பாசம்தான்" என்கிறார்.

"நான் மெக்கானிக்காக இருந்தபோது எனது உதவியாளன் எடுத்து வந்த பறவை இந்தக் கழுகு. மின்சார டிரான்ஸ்ஃபார்மரில் அடிபட்டுக் கிடந்த இதை, என்னிடம் கொண்டு வந்து சேர்த்தான்" என்றவரிடம் விலங்குகள் மீது இத்தனை அன்பு வைத்திருக்கும் நீங்கள் கிளிகளை மட்டும் கூண்டில் அடைத்து வைக்கலாமா என்றோம். "இந்தக் கிளிகள் குஞ்சுகளாக இங்கு வந்தன. இறக்கைகள் வளர்ந்ததும் மரங்கள் உள்ள பகுதியில் விட்டுவிட்டு வந்தேன். ஆனால் நான் வீட்டிற்கு வந்து சேர்வதற்குள் அவை வந்து விட்டன. எங்களை விட்டுப் போக மறுக்கின்றன. இப்போது இவையெல்லாம் எங்களின் குழந்தைகள்" என்று முடித்தார்.







வெகு அபூர்வமாக, மனிதர்களைப் போலவே, சில நாய்களுக்கும் முகவெட்டு அமைந்து விடுமாம்! (உல்டாவாகவும் சொல்லலாமோ?) அதற்கு அத்தாட்சி இங்கேயுள்ள ஒப்பீடு.

தகவல்: எம்.
நன்றி: **டெக்கான் கிரானிகிள்**

நாய்கள் தொடங்கி கழுகு, கிளிகள் எல்லாவற்றுக்கும் நெய்சாதம்தான் உணவாம்! தங்களோடு வாழ்ந்து இறந்து போகும், நாய்கள், பூனைகளை வீட்டிற்கு அருகிலேயே புதைத்துவிடும் இவர்களுக்குத் தெருவாசிகளால் எந்த தொந்தரவும் இல்லை. இத்தனை குழந்தைகள் இருப்பதை நினைத்து பெருமைப்படும் இந்த ஆதர்ச தம்பதி தங்களின் பெயர் சொல்ல ஒரு குழந்தை இல்லாதது பற்றி கொஞ்சமும் கவலைப் படவில்லை.

— ஆர்.சி. ஜெயந்தன்
படங்கள்: **வெங்கடேஷ்**



தற்காலிகம்!

“ஏய் சின்னப் பொண்ணு... விறுவிறுன்னு மாவை ஊத்துமே... டேய் பாண்டி... சட்னித் தூக்கை ஐஸ் பொட்டிலேர்ந்து எடுத்தாடா... ஏ காளியா... தும் ப்ளேட்'ஸப் ஜல்தி ஸாஃப் கரோ (தட்டுகளை சீக்கிரமா கழுவு)...'' கையிலிருந்த சிசுவை, அருகிருந்த மரத்தில் ஒரு துணியைக் கட்டித் தூளியாக்கி, அதில் விட்டவாறே, சுற்றி நின்றவர்களிடம் ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தாள் தேவயானி.

அது மும்பையின் இதயப் பகுதியான தாதரின் படு பிஸியான மார்க்கெட். அங்கே தான், ரயில்வே ஸ்டேஷனின் மிக அருகிலான திருப்பத்தில், கடை போட்டிருந்தாள் தேவயானி. ஆறு ரூபாய்க்கு சாதாவும், பத்து ரூபாய்க்குக் கெட்டிச் சட்னியுடன் கூடிய மசாலா தோசையு மாய் வாரி வழங்கி, அந்தப் பகுதியின் "தோசை நாயகி" ஆகியிருந்தாள்.

அடுப்பின் மேல் நீண்ட சதுர வாக்கிலிருந்த கல்லைப் போட்டு, போக்குக்கு எண்ணெய் காட்டி, நீரை நன்றாகத் தெளித்து, மாவைச் சின்னக் கிண்ணத்தால் அள்ளி ஊற்றி, அதன் கீழ்ப் பகுதியாலேயே மெல்லிசான வட்டங் களாக விஸ்தரித்து, ஒரே சமயத்தில் பத்துப் பன்னிரண்டு தோசைகளை மொறு மொறு வென்று உருவாக்கும் கலையில் அவள் பிஎச்டி. பெற்றிருந்தாள் என்றால், மகள் சின்னப் பொன் னும் மகன் பாண்டியனும் டாக்டரேட்டே வாங்கி விட்டனர். இன்னும் இரண்டு எதிர்கால தோசை வல்லுனர்கள் ஸ்கூலுக்குப் போயிருந்த னர். காளியா இவர்களுடன் ஒண்டிக் கொண்ட அனாதை. கடைசி (அதாவது தற்காலிகமாக) உருப்படி, தூளியில் உறங்கிக் கொண்டிருந்தது. அதன் தகப்பனுக்கு, இந்த ப்ளாட்ஃபாரக் கடையின் சுமுக ஓட்டத்துக்கு, பார்க்க வேண்டி யவர்களைப் பார்த்து, கொடுக்க வேண்டியதைக் கொடுக்கும் பி.ஆர்.ஓ. வேலை!

எல்லாம் நன்றாக நடந்தது. கொஞ்ச காலம் முன்பு வரை! எங்கிருந்தோ வந்து சேர்ந்தார் அந்தப் புதிய வார்டு ஆபீசர். 'பொது மக்களின் நண்பன்' என்று சொல்லிக் கொண்டு, இவர்களுக்குக் காலனாய்! கண்மண் தெரியாமல் எல்லாவற்றையும் இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தார். இந்தப் பகுதிக்கு 'வார்னிங்' கொடுத்து ஒரு வாரமாகி விட்டது!

தேவயானியும் ஒரு வாரமாக அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டி ருந்தாள்; "படுபாவி... எப்போ வருவானோ... வந்தான்னா முக்கியப்பட்டது எல்லாத்தையும் 'டக்'குனு அள்ளிக்கினு ஓடியாரணும்... என்ன?'' முன்கூட்டியே எச்சரித்து வைத்திருந்தாள்.

அந்த கபதினம் இன்று வந்தே விட்டது! வியாபாரம் சூடுபிடித்துக் கொண்டிருக்கை யில்..."ஏய்... காடி ஆயா" (வண்டி வந்துடுத்து) என்று குரல்கொடுத்தவாறே யாரோ ஓடினார் கள். அவ்வளவுதான்.

அடுப்பை அணைத்து, மாவுத் தூக்கை மூடி, எச்சில் ப்ளேட்களைக் கோணியில் திணிக்...


"ஏய் சலோ..." உறுமிக் கொண்டு வந்தது டிமாலிஷன் ஸ்குவாட்! வண்டியை அப்படியே தள்ளிக் கொண்டு போயிற்று. "ஐயோ... பாவி... விடுடா" பின்னாடியே ஓடினாள் தேவயானி. சின்னப் பொண்ணு நைசாக மாவுத் தூக்கை இழுக்க... காளியா இரண்டு அடியுடன் தட்டு களையும் எடுத்துக் கொண்டு ஓட... பாண்டி, சில்லறை டப்பாவுக்காகப் போராடுகையில்... அக்கம் பக்கத்துக் கடைக்காரர்கள் போலீஸ் மீது கல்லெறிய... "நாசமாப் போறவனே..." தேவயானி சாபமிட... ஒரே களேபரம். அத்தனை பேரையும் வேனில் அள்ளிக் கொண்டு போனார்கள்.

தூளியில்...

அப்படியே படுத்துக் கிடந்தது குழந்தை!

ஜெயஸ்ரீ ராஜ்

One & Only





2000 ஜூலை 16
விக்ரம ஆடி 1
மலர் : 58
இதழ் : 51

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



காஷ்மீர் முதல்வரின் கர்ஜனை!

ஃபாரூக் அப்துல்லாவின் சுயாட்சி கர்ஜனை நாடு முழுவதையும் தட்டி எழுப்பிவிட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.


காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைத்து நிலைகளிலும் அவரவர் இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும் அரசியல் சார்புக்கும் ஏற்ப அப்துல்லாவுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தனித்தமிழ் ஈழ ஆதரவாளர்கள் ஃபாரூக்கின் நிலை தங்களுக்குப் பலம் சேர்ப்பதாகக் கருதுகிறார்கள்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிற கட்சிகள், சுயாட்சி என்பது பிரிவினைக்கு வழிவகுத்துவிடும் என்று விமர்சிக்க, 'நாங்கள் கேட்பது பிரிவினை அல்ல' என்கிறார் அப்துல்லா. ஆனால், அதே மூச்சில், 'இந்தியத் தேர்தல் கமிஷனும் உச்சநீதிமன்றமும் எங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது' என்றும் கூறுகிறார்! அவர் கோருகிற சுயாட்சி, ஏதோ ஒப்புக்கு பாரதத்துடன் இணைந்திருப்பதான ஒரு பாவலாவாகத்தான் உள்ளது.

சுயாட்சி, பிரிவினை, கூடுதல் அதிகாரம் என அவர் இவ்வாறு குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்க, வாஜ்பாய் அமைச்சரவை கூடி அவசர அவசரமாக ஃபாரூக் அப்துல்லாவின் கோரிக்கையை நிராகரித்திருக்கிறது.

அக் கோரிக்கை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று முதலில்



கூறியவர்தான் பிரதமர். ஆனால் கட்சி மட்டத்திலும் பஜ்ரங் தள் போன்ற அமைப்புகளிடமிருந்தும் எழுந்த எதிர்ப்புக்கும் தாக்குதலுக்கும் பயந்து பல்டியடித்து, அமைச்சரவையைக் கூட்டி விட்டார். அமைச்சரவையும் ஏகமனதாக அப்துல்லாவின் தீர்மானத்தை நிராகரித்துவிட்டது.

அப்துல்லாவின் கோரிக்கையில், தேர்தலை உத்தேசித்த அரசியல் நோக்கு பளிச்சிடுகிறது என்றால் அமைச்சரவையின் முடிவில் அநியாயமான அவசரமும் சர்வாதிகாரப் போக்கும் தென் படுகின்றன.

ஃபாரூக் அப்துல்லாவின் கோரிக்கைகள் எல்லாமே நியாயமானவை அல்ல; ஆனால் மிகவும் கவனமாக அலசி ஆராயப்படவேண்டியவை.

ஜம்மு பகுதி, காஷ்மீர், லடாக் என உணர்வுரீதியாக மூன்று பாகங்களாகி விட்டது ஜம்மு காஷ்மீர் மாநிலம்.

இவற்றுள் லடாக், சுயாட்சி கோரும் அப்துல்லாவை விட்டு விட்டு பாதுகாப்பாக இந்திய யூனியன் பிரதேசமாகி விடவே விரும்புகிறது! இதில் ஃபாரூக் அப்துல்லாவுக்குச் சம்மதமில்லை; ஆனால் காஷ்மீர் சுயாட்சி பெற்று ஏறத்தாழ சுதந்தர நாடாகத் திகழ வேண்டும் என்கிறார். தனக்கொரு நியாயம்; லடாக்கியருக்கு வேறு நியாயம்!

ஆக, ஃபாரூக் அப்துல்லாவின் திடீர் சுயாட்சி கோரிக்கையானது அரசியல்ரீதியான சாதுர்ய நடவடிக்கைதான். காஷ்மீரின் அந்தஸ்து, கௌரவம் குறித்து வேறு யாரைக் காட்டிலும் தமக்கு அக்கறை அதிகம் என காட்டிக் கொள்வதற்காக எழுப்பப்படும் கோரிக்கை!

இந்தத் தருணத்தில் ஃபாரூக் இப்படி ஒரு கோரிக்கை எழுப்புவதில் பேரபாயம் இருக்கிறது.

காஷ்மீர் மீதான இந்தியாவின் பிடி தளர்வதற்காகவே காத்திருக்கும் பாகிஸ்தான், அப்பகுதியில் தனது செல்வாக்கை அதிகரித்து ஊடுருவலை மேலும் ஊக்குவிக்கும். நேரடி ஆக்கிரமிப்பு கூட நிகழலாம்.

தற்போது பாகிஸ்தானில் நடப்பது எதற்கும் துணிந்த ராணுவ ஆட்சி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதே சமயம், காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த நாள் முதலாகவே நேருஜி போன்றோர்



காஷ்மீரிகளுக்குக் கொடுத்த பல வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன என்பதையும் மறந்துவிடலாகாது. அதன் விளைவாகவே அங்கு மீண்டும் மீண்டும் பிரச்னைகள் எழுகின்றன. இதை உத்தேசித்தே அரசியல் சாசன 370வது பிரிவின் கீழ் காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது.

'காஷ்மீருக்கு மட்டும் சிறப்பு அந்தஸ்தா?' என்ற எதிர்ப்புக் குரல் எப்போதுமே இருந்துவந்த போதிலும் பி.ஜே.பி., பிரதானமாக அங்கம் வகிக்கும் ஓர் ஆட்சியில் அது வலுத்திருக்கிறது. அப்துல்லாவின் சுயாட்சிக் குரல் ஓங்கி ஒலிப்பது இதற்கு எதிரொலியாகத்தான். ஃபாரூக் அப்துல்லாவின் தேசிய மாநாடு கட்சி மத்திய அரசிலும் அங்கம்வகிப்பதால் பிரச்னை முற்றிலும் அரசியல்மயமாகி விட்டிருக்கிறது.

இந்த அரசியல் அலைகளின் இடையில் காஷ்மீர் மக்களின் உணர்வுகள் மூழ்கடிக்கப்பட்டு விட்டன.

காஷ்மீர் சுயாட்சி விஷயம் குறித்து நாடாளுமன்றத்திலோ அல்லது நாடு தழுவிய அளவிலோ அனைத்துக் கட்சிக்காரர்களும் ஆளாளுக்குக் கருத்துத் தெரிவிப்பதால் ஒரு புண்ணியமும் இல்லை. இதனால் பிரச்னைகள் அதிகரிக்குமே தவிர, குறையாது. அம்மாநில மக்கள் எத்தகைய ஆட்சி அமைப்பை விரும்புகிறார்கள் என்பதை அவர்களிடையே வாக்கெடுப்பு நடத்தி அறிவதுதான் சரியான தீர்வாக அமையும்.

மக்களுடைய கருத்தை அறியாமல் தலைவர்களால் திணிக்கப்படும் தீர்வுகள் பலன் தராது. வாக்கெடுப்பின் விளைவான மக்கள் தீர்ப்பு ஒருவேளை மத்திய அரசின் கருத்துக்கு மாறுபட்டதாக இருப்பினும் விட்டுக்கொடுப்பது தலைகுனிவாகி விடாது. மாறாக, எளிதாகவும் கௌரவமாகவும் பெருந்தன்மையாகவும் அமையும்.

தீவிரவாதிகளின் கொடூரம் ஒருபுறம் அரசியல்வாதிகளின் சுயநலன் மறுபுறம் என்று சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படும் காஷ்மீர் மக்களுக்கு விடிவு காலம் பிறக்க மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்துவது ஒன்றே வழி. ○

டைடல் பார்க்

சென்னையில் மிக உயரமானது எல்.ஐ.சி. கட்டடம்தான், என்றிருந்த நிலையை மாற்றி விட்டது தரமணியில் எல்காட்டும் டிட்கோவும் சேர்ந்து உருவாக்கியிருக்கும் டைடல் பார்க். உயரத்தில் மட்டுமல்ல, நோக்கத்திலும் இங்கு உருவாக்கப்பட்டிருக்கும் உலகத் தரம் வாய்ந்த வசதிகளாலும் ரூபாய் முன்னூற்று முப்பது கோடி முதலீட்டில் கட்டப்பட்டுள்ள டைடல் பார்க்கை கடந்த ஜூலை - நான்காம் தேதி பிரதமர் வாஜ்பாய் திறந்து வைத்தபோது மணி இரவு எட்டு நாற்பத்தைந்து!

சபாஷ்! சரியான போட்டி என்று சொல்லும்படி பெங்களூர், ஹைதராபாத் உள்ளிட்ட அனைத்து தகவல் தொழில்நுட்ப நகரங்களையும் மிரட்டியிருக்கும் டைடல் பார்க், இத்துறையில் ஆரோக்கியமான போட்டிக்கு வழிவகுத்து விட்டது. "தொடக்கத்தில் தமிழக அரசு தூங்கி விட்டது. ஆனாலும் டி.சி.எஸ்., இன்ஃபோசிஸ், பென்டஃபோர் போன்ற நிறுவனங்கள் சொந்தக் காலில் நின்று முன்னேறி, குறையைப் போக்கின. ஆனால் இன்று மாநில அரசே இத்துறையில் மாபெரும் சக்தியாக விஸ்வரூபம் எடுத்து விட்டது. இனி தெற்காசியாவின் மிகப் பெரிய கம்ப்யூட்டர் சக்தியாக தமிழகம் மாறுவதை தடுக்க முடியாது என்கிறார், சென்னையைச் சேர்ந்த ஒரு மென்பொருள் பொறியாளர். இவரது கருத்தை உறுதி செய்திருக்கிறது டைடல் பார்க்.

கிராம பஞ்சாயத்து அலுவலகம் வரை கம்ப்யூட்டர் மயம் தவிர்க்க முடியாத ஒன்றாகி வருகிறது. கம்ப்யூட்டர் மூலம் செய்யப்படும் எந்தப் பணிக்கும், கணிப்பொறி வல்லுனர்களால் உருவாக்கப்படும் அந்தந்தத் துறைக்கேற்ற மென்பொருட்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய மென்பொருட்களைத் தயாரிக்க உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளே



அமெரிக்காவுக்கு டாட்டா!

முதல் தேவை. மாசற்ற சூழ்நிலை. உறுதி செய்யப்பட்ட மின்சாரம். தங்குதடையற்ற குளிர்சாதன வசதி, அதிவிரைவு தொலைத் தொடர்பு, அரசின் உடனடி ஒத்துழைப்பு இவை இருந்து விட்டால் போதும். இந்த வசதிகள் அனைத்தையும் உருவாக்கி, உலகத்தரம் வாய்ந்த (Most sophisticated facility for IT) ரெடிமேட் அலுவலகங்களை விற்கிறது அல்லது குத்தகைக்கு விடுகிறது டைடல். தொண்ணூறு சதவீத அலுவலகங்கள் விற்று விட்ட நிலையில், நிறுவனங்கள் எந்த நேரத்திலும் எலுமிச்சை டீ குடித்தபடி ஹாயாக மென்பொருள் உருவாக்கத்தில் ஈடுபடலாம்.

டைடலில் அப்படி என்னதான் உலகத் தரம்வாய்ந்த வசதிகள்?

இரண்டாயிரத்து ஐந்நூறு கார்களை ஒரே நேரத்தில் நிறுத்த இரண்டு கட்ட பார்கிங் தள வசதி தவிர மொத்தம் பன்னிரண்டு தளங்கள். ஒரு தளத்தில் 4585 சதுர அடி தொடங்கி 89,000 சதுர அடி வரை சிறு,



நடுத்தர, பெரிய அலுவலகங்கள் தொடங்க, சுமார் பத்து லட்சம் சதுர அடிகள் பரப்பில் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தங்கு தடையற்ற மின்சாரம் வேண்டி நூத்து பத்து கிலோ வாட் அனல் மின்நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. இதன் முக்கிய அம்சம் மின் உற்பத்தியில் ஐம்பது சதவீதத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளும் கேப்டிவ் பவர் வசதி கொண்டது. பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்து உலகிலேயே மூன்றாவது பெரிய தெர்மல் மின் திட்டம் இது. முழுவதும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப் பட்டுள்ள சென்ட்ரலைஸ்டு ஏர்கண்டிஷன், சூரிய வெப்பத்தைத் திருப்பி அனுப்பும் டபுள் கிளாஸ் பொருத்தப்பட்ட, வெளிப்புற இரைச்சல்களை அனுமதிக்காத அதிநவீன கண்ணாடிச் சுவர்கள். இங்கு நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள் அனைத்தும் கணிப்பொறி மூலம் தானியங்கி முறையில் செயல்படும் வசதி. கட்டடத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல நகரும் படிக்கட்டுகள், லிப்டுகள், உயர்நுட்ப பாதுகாப்பு வசதிக்காக மின்னணு அடையாள அட்டை, இருபத்து நான்கு மணி நேர குளோஸ்சர்க்யூட் கண்காணிக்கும் டீவி, இவை எல்லாவற்றையும்விட டைடல் பார்க்கைப் பராமரிக்கும் பொறுப்பை ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் கையில் ஒப்படைத்தாகி விட்டது.

எல்லாம் சரி, மென்பொருள் தயாரிப்பிற்கு அடிப்படைத் தேவையான தகவல் தொடர்பிற்கு என்னென்ன வசதிகள்? அந்தப் பட்டியலும் நீள்கிறது. அதிவிரைவு இன்டர்நெட், ஈமெயில் வசதிகள், வீடியோ கான்பரன்சிங், செயற்கைக்கோளுடன் நேரடித் தொடர்பு கொள்ள மோட்டர் டிஷ்ஆன்டனா, நாலாயிரம் இணைப்புகளைக் கொண்ட தனியொரு தொலைபேசி இணைப்பகம். வங்கிகள் ஏடிஎம் சென்டர்கள் அத்தனையும் ரெடி. சாஃப்ட்வேர் தயாரிப்பது மூளையோடு சம்பந்தப்பட்ட வேலை என்பதால், அவ்வப்போது ஏற்படும் மன இறுக்கத்தை வெளியேற்றவும், கொஞ்சம் வயிற்றுக்கு ஈயவும் இங்கே வழிவகைகள் ஏராளம்.

ஹெல்த் கிளப், நீச்சல் குளம், நட்சத்திர உணவகங்கள், தொழிலதிபர்கள், ஏற்றுமதியாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் என டைடலுக்குப் படையெடுக்கும் அனைவரும் தங்கி ஆலோசிக்க பிஸினஸ் சென்டர், குடில்கள், அறுநூற்று ஐம்பது பேர் ஒரே நேரத்தில் அமரக்கூடிய மாநாட்டு அரங்கம், பன்னாட்டு பயண ஆலோசனை சேவை, சர்வதேச கொரியர்கள், குறிப்பாக டைடல் தொடர்பான அத்தனை விவரங்களையும், கணிப்பொறித் திரையில் கையால் தொட்டு அறிந்து கொள்ளக்கூடிய 'டச் ஸ்கிரீன் ஹெல்ப் டெஸ்க்' என்று இதயத்தைத் தொட்டு இழுக்கும் வசதிகள். இத்தனை வசதிகளோடு இருப்பிடம் மட்டும் சரியாக அமையாவிட்டால்...? அதையும் கவனமாகவே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இத்தனை அடிப்படை கட்டுமான வசதிகளோடு செயல்படத் தொடங்கியிருக்கும் டைடல் பார்க்கிற்கு கம்ப்யூட்டர் நிபுணர்கள் எங்கிருந்து கிடைப்பார்கள்? தமிழகத்தில் அதற்கு பஞ்சமே இல்லை! மாநிலத்தில் உள்ள நூற்றி ஐம்பது பொறியியல் கல்லூரிகள் ஆண்டுதோறும் ஐம்பதாயிரம் கம்ப்யூட்டர் இன்ஜினியர்களை உருவாக்குகின்றன. தவிர ஆப்டெக், நிட் என்று சர்வதேச தனியார் நிறுவனங்கள். இதுவும் போதாது என்பதால் வரும் 2008-ம் ஆண்டில் பள்ளிகளில் இருந்து வெளியேறும் அனைத்து மாணவர்களும் கம்ப்யூட்டர் படித்தவர்களாக இருக்க வேண்டும் என முடிவு செய்து, தமிழகத்தில் உள்ள 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கம்ப்யூட்டர் அறிவியல் பாடத்தைத் தொடங்க உள்ளோம் என்று டைடல் தொடக்க விழாவில் முதல்வர் அறிவித்திருக்கிறார். தொடக்க நிலையிலேயே டைடல் பார்க் வெற்றி பெற்று விட்டதால் இரண்டாவது டைடல் பார்க் திட்டத்தை விரைவில் செயல்படுத்த இருப்பதாகவும் முதல்வர் உறுதி அளித்திருப்பதால் இனி அமெரிக்காவுக்கு வேலை தேடிச் செல்ல வேண்டிய நிலை இருக்காது என்கிறார்கள்.

– லியோ

படங்கள் : ஐரிஸ்

"இன்ஷுரன்ஸ் தொழிலைத் தனியார் மயமாக்குவதற்குத் தலைவர் ஆதரவா, ஆச்சர்யமாயிருக்கே!"

"ஆமா, தனியார் மயமானால் அரசியல் கூட்டணியைக்கூட இன்ஷ்யூர் பண்ணலாம்னு சொல்றாங்களாம்!"

– தஞ்சை தாமு



எல்லாம் வேகமாக, திரையில் காட்சிகள் நகருவதைப் போன்று, புத்தகத்தின் பக்கங்களை காற்று புரட்டினதைப் போன்று ஒவ்வொன்றும், ஒவ்வொன்றும் விசேஷமாக நடந்து விட்டது. ஒவ்வொன்றும் விசேஷம்தான். கால் மெட்டி முதல், கழுத்து தாலி வரைக்கும்... மூக்குத்தியைத் தவிர. தூண்டில் முள்ளில் மீனின் வாயும் செவிளும் மாட்டிக் கொண்டு உயிருக்கான போரில் துடிதுடிக்கிற சோகம், வேதனை வசுமதிக்குள் புகுந்து கொண்டது. மூக்குத்தியா. தூண்டில் முள்ளா?

வீட்டில் கட்டிக் குழந்தை மாதிரி வெட்கம் செய்யாமல் பயம் புரியாமல், கோபம் காட்டாமல், பசி அறியாமல், துயரம் தெரியாமல் ஆடி, பாடி, ஓடி விளையாடிக் கொண்டிருந்த வசுமதிக்குத் திடீர் திருமணம்.

பதினைந்து தினங்களுக்கு முன் பக்கத்து வீட்டு சைலஜாவோடு வீடியோ கேம்ஸில் கவனமாக மூழ்கி, மனம் சர்க்கரை மாதிரி கரைந்து கொண்டிருந்த போது பணியிலிருந்து வீட்டிற்கு வந்த அப்பா "சரோஜா! வசுமதிக்கு ஒரு கிராக்கி வருதுடி" என்று உயர்ந்த கனீர் குரலை, குச்சியால் முதுகை தட்டின மாதிரி போட., வீடியோ கேம்ஸை அப்படியே போட்டுவிட்டு சுழன்று வந்தவள்தான்...

"என்னங்க சொல்றீங்க திடுதிப்புன்னு...?" அம்மா திகைப்போடு கேட்டாள்.

"நானும் எதிர்பார்க்கலை சரோஜா. மத்தியானம் கோபாலனை எதேச்சையா சந்திச்சேன். கோபாலன் யார்னு தெரியுமா? ட்ரெயினிங்ல எனக்கு திக் ஃப்ரெண்டு. அவனோட பையன் கல்யாணத்துக்கு ஆயிட்டிருக்கான். பையனும் டிபார்ட்மெண்ட்டுதான். சௌத் பக்கமா சப்-இன்ஸ்பெக்டரா இருக்கானாம். குடும்பம் தொழில்னு பேசிட்டிருக்கும்போது, பேச்சு எங்கெங்கோ போய் கடைசில பிள்ளைங்க கல்யாணத்துல வந்து நின்னுட்டது. நாளைக்கே பெண் பார்க்க வர்றாங்களாம். 'உன் பொண்ணைக் கேட்டுதான் கல்யாணம் பண்ணணுமாடா கடத்திட்டே போயிடுவேன்'னு சொன்னான். டிபார்ட்மெண்ட்காரனே இப்படிப் பேசினா எப்படின்னேன்..." அப்பாவுக்கு நீண்ட இடைவெளிக்குப் பிறகு நண்பனைச் சந்தித்து பேசின இன்ப அதிர்வுகள்...

ஆடுவதை, பாடுவதை, ஓடுவதை தன்னாலே நிறுத்திக் கொண்டாள். இனம் புரியாத வெட்கமும், பயமும் இரத்தத்தில் புதிதாய்ப் பாய்ந்து கொண்டன. பசிக்கவில்லை. ஏன்? எப்படி? பொம்மையின் வயிற்றிலிருந்து சாவியைப் பிடுங்கி கிணற்றில் போட்டுவிட்ட மாதிரி! இனிமேல் சாவி கிடைக்கப் போவதில்லை. யாரும் தேடப் போவதில்லை.

சொல்லி வைத்த மாதிரியே கடத்தல் கும்பல் டாடா சுமோவில் வந்து மறுநாள் இறங்கி, ஆப்பு தங்களுக்குப் பதில் பழம், தேங்காய் ஏந்திக் கொண்டு நுழைந்தது.

"சரோஜா! புள்ளை புடிக்கிறவங்க வந்துட்டாங்க..." என்றார் அப்பா, சந்தோஷத்தின் மேலடுக்கிலிருந்து.

"புள்ளை புடிக்க வரலைடா தடியா. என் புள்ளையைத் தாரவார்த்துட்டு போலாம்னு வந்திருக்கேன்."

ஆறடிக்குக் குறையாத உயர பிள்ளை. நீல நிறத்தில் முரடான ஜீன்ஸ் பேண்ட், வெள்ளையில் மிருதுவான கதர்ச் சட்டை. போலீஸ் துறையில் இளம் அதிகாரியாக இருக்கிற கல்லான உடம்பையும், வீட்டிற்கு அன்பான குழந்தையாய் இருக்கிற மலரான மனத்தையும் உடைகள் கண்ணாடியாய்க் காட்டின கதவிடுக்கில்.

எல்லோருக்கும்



நாராயணி கண்ணகி

காப்பி தரும்போது நெஞ்சம் எப்படி அடித்து கொண்டது. அந்த அவஸ்தையை வசுமதியால் எப்படிச் சொல்ல முடியும்? இதயம் பம்பரமாய்ச் சுழன்றது என்றா, பட்டமாய்ப் பறந்தது என்றா, பந்தாய்த் துள்ளியது என்றா? என்ன, என்ன சொல்ல முடியும்?

தன்னுள் என்னென்னதான் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ள முடியாமல் தவித்தாள். ஒன்பது உணர்ச்சிகளும் ஒருங்கே சேர்ந்தபடி முறுக்கி எடுக்கிற ஒரே தருணம்.

மாப்பிள்ளையின் அம்மா மட்டும் உள்ளே வந்தாள். என்ன செய்வது என்றே புரியவில்லை வசுமதிக்கு. நிற்பதா, ஓடி மறைவதா, தலை கவிழ்வதா, வணங்குவதா, பேசுவதா?

''என்னடா படிச்சிருக்கே ராஜா?'' என்று ஆண் பிள்ளையிடம் பேசுவதைப் போன்று பேசிய மரு அம்மாவின் கொஞ்சல் பிடித்திருந்தது.

"பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி."

"ஓ... நைட்ரிக் ஆஸிட், சல்ஃபூரிக் ஆஸிட் உனக்குத் தெரியும்."

வசுமதியின் முகத்தை மரு அம்மா வெறித்துப் பார்த்தபோது



வெட்கம் மற்ற உணர்ச்சிகளைக் காட்டிலும் அதிகமாயிற்று. ஒரு நொடி தைரியம் கூட்டி அந்தம்மாளின் முகத்தை ஏறிட்டாள். முகம் தெரியவில்லை ராணுவ பீரங்கி மாதிரியான மூக்கின் இருபுறமும் அணிந்திருந்த டாலர்தான் தெரிந்தது. அவ்வளவு பெரிய மூக்குத்திகள்.

நடு கூடத்தில் அவர்கள் செலவிட்ட வார்த்தைகள் உள் அறைகளுக்கும் பறந்து வந்தது.

"எத்தனை சவரன் செய்றீங்க?'' மூக்கு டாலர்கள் மின்னிற்று.

காதில் வாங்கிய வசுமதி திடுக்கிட்டாள். இதென்ன வியாபார அசிங்கம்?

''ஏய் ராஜேஸ்வரி என்ன கேட்கிற?'' "நீ இப்படிப் பேச மாட்டியே......!"

''தப்பா கேட்கலையே......"

முற்போக்கான கதைகளின் நாயகி மாதிரி ஓடிப்போய் "எனக்கு இந்த மாப்பிள்ளை வேணாம்'' என்று அறிவிக்க வேண்டுமென தோன்றியதே தவிர, என்று, எவள், நிஜத்தில் அப்படி அறிவித்திருக்கிறாள்? என்றும் தோன்ற, பொம்மையாகவே இருந்தாள். சாவி தொலைத்த பொம்மை!

"நீ ஏன்டா டென்ஷனாகுற... அவங்க தப்பா கேட்கலையே... இதெல்லாம் பார்மாலிட்டிஸ். நான் நூத்தியொரு சவரன் பொண்ணுக்கும், பதினொரு சவரன் பையனுக்கும் செய்றேன்'' என்று அப்பா கடைசிப் பூட்டு போட்டார்.

"நூத்தியொரு சவரனா! யாருக்கு வேணும் நீங்களே வைச்சுக்குங்க."

''என்ன ராஜேஸ்வரி

உனக்குப் பைத்தியமா? நீ இப்படி பேச வேண்ணு தெரிஞ்சிருந்தா சம்பந்தம் பேச இங்கே கூட்டி வந்திருக்க மாட்டேன்."

"இப்போ நான் என்ன தப்பா பேசிட்டேன்? போலீஸ் ட்யூட்டியை ஸ்டேஷன்ல வைச்சுக்குங்க... வீட்டுக்குள் வேணாம். பெரிசா மிரட்டறீங்களே. நூத்தியொரு சவரன் வேணாம்னு சொன்னேன். தப்பா? என் கிட்ட நகை இல்லையா, பீரோவுல தூங்கறதை யார் மாட்டிக்க போறாங்க...? ஒத்தை சவரன் வேணாம்னு சொன்னேன். ஆனா, ஒரே ஒரு வேண்டுகோள். மொத்த பேரையும் முட்டாளாக்கி விட்டோம் என்கிற பெருமிதத்தோடு கூறினாள் டாலர் மூக்கு அம்மா.

இப்படியும் ஒரு பூச்சாண்டி விளையாட்டு இருக்கிறதா? அனைவரும் பெரு மூச்சு விட்டார்கள்.

வசுமதிக்கு அடி வயிற்றிலிருந்து என்னவோ எழுந்து சுழன்றது.

''இப்படித்தாண்டா கைலாசம் உன் தங்கச்சி. முப்பது வருஷமா அவளோட நான் படறேன் பாரேன். அம்மா தாயே என்ன வேண்டுகோள் அது சொல்லிடேன்."

''பாப்பாவுக்கு மூக்கு குத்தணும். குண்டு மணி எடையாவது மூக்குல மூக்குத்தி இருக்கணும்."

அப்புறம் நீண்ட நேரம் மூக்குத்தி கதைகள் பேசினார்கள். 'பெண்ணிற்கு மூக்குத்திதான் அழகு. எது இல்லையென்றாலும் மூக்குத்தி தான் முக்கியம்' என்று அம்மாவும், 'எனக்கு எட்டு வயசிலேயே மூக்கு குத்தினாங்க. அது ரொம்ப மேல குத்திட்டதால அதை துத்த வைச்சிட்டு மறுபடியும் சரியா குத்தினாங்க. இப்பவெல்லாம் ஆச்சாரிகிட்ட போக வேண்டியதில்லை. டாக்டரே காது மூக்கு குத்திடறார்' என்று வருங்கால அம்மாவும்.

வசுமதிக்கு மூக்கு வலிக்கிற மாதிரி இருந்தது. 'அய்யோ! மூக்கு குத்தணுமா?' அதென்னவோ சிறு வயதிலிருந்தே மூக்குத்தி என்றால் பயமளித்தது.

மூக்குத்தி பற்றியே நினைப்பு அரித்தது. 'மூக்கு வலிக்காதா அய்யோ! பரீட்சை பேப்பரை கோத்து பஞ்ச் பண்ணி, தடிமனான நூலை மாட்டி கட்டி விடுகிற மாதிரி தேவையா?"

ஆப்பிரிக்க பழங்குடி பெண்கள் சைக்கிள் டயர் அளவிற்கு மூக்கில் தொங்க விட்டுக் கொள்வதை எப்போதோ பத்திரிக்கையில் படித்ததை இப்போது நினைக்க வாந்தி வந்தது.

எந்த பெண்ணைப் பார்த்தாலும் பார்வை அவர்களின் மூக்கை நோக்கியும் மூக்குத்தியை நோக்கியும் ஓடிற்று. கோயிலுக்குப் போன போதும் அம்பாளின் மூக்குத்தியைத்தான் தரிசித்தாள்.

வீட்டிற்குப் பத்து பாத்திரம் தேய்க்க வரும் கமலா காது ஓட்டையிலும், மூக்கு ஓட்டையிலும் வெறும் வேப்பங்குச்சி சொருகி இருந்தாள். இதற்கு முன் மூக்குத்தி போட்டிருந்த ஞாபகம் வர "கமலா ஆயா உனக்கு மூக்குத்தி இல்லையா?" என்றாள்.

''இருக்குடா மகராசி! பள்ளிக்கூடம் போயிருக்கு. புரியலை, மார்வாடி கடைல அடமானம் வைச்சிருக்கேன்."

''அடமானமா, மூக்குத்தியையா?'' ஆச்சர்யமாய்க் கேட்டாள்.

வீட்டு மனை வாங்குவதற்குப் பணம் போதாமல் அப்பா ஒரு முறை நகைகளைக் கொண்டு போய் வங்கியில் ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய்க்கு அடகு வைத்ததும், இரண்டு மாதத்தில் மீட்டு வந்ததும் ஞாபகத்திற்கு வந்தது. அதெல்லாம் உபயோகத்தில் இல்லாமல் பீரோவில் உறங்கிக் கொண்டிருந்த நகைகள்.

"கமலா ஆயா! எதுக்கு மூக்குத்தியை அடகு வைச்சே?" என்றாள் துக்கமான ஆர்வத்தில்.

"எல்லாத்துக்குமே அதான இருக்கு. நூறு ரூபா கொடுத்து அதை வாங்கறதுக்கே எவ்வளோ சிரமம்? ஆஸ்பத்திரி போறதுனாலும் சாப்பாட்டுக்கு இல்லன்னாலும், சினிமாவுக்குப் போறதானாலும் காசு பண்ண இருக்கிற ஒரே ப்ராப்பர்ட்டி மூக்குத்திதான். மூக்கா மாசம் மார்வாடிகிட்ட இருக்கிறதால எப்பவும் புதுசா பளிச்சினு இருக்கும், முப்பது ரூபாய்க்கு

''வறட்சியால பாதிக்கப்பட்ட கிராமத்துக்குப் பீரங்கி போட போறாங்களே, எதுக்கு?''

''போர்க்கால நடவடிக்கை எடுக்கணும்கிறதைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டாங்க போலிருக்கு!''

— வந்தவாசி பா. ஜெயக்குமார்.



மேல எவன் தர்றான்?'' கமலா பாட்டு படித்தாள்.

வசுமதிக்கு ஆச்சர்யமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. கம்ப்யூட்டர் யுகத்தில், அடகு வைத்தால் முப்பது ரூபாய் மட்டும் வருகிற ஒரே சொத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் இருக்கிறார்களா?

அடுத்து மூக்குத்தியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் கமலா ஆயாவின் ஏழ்மை நினைவில் வந்து கட்டது.

அம்மா ஜுவல்லரி போய் ஏழு மூக்குத்தி வாங்கி வந்தாள். அதில் வைரம் பதித்ததும் ஒன்று. மின்னும் ஒற்றை கல்லிற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய். கமலா ஆயாவின் மூக்கிலிருந்த வேப்பங்குச்சியே மனத்தில் நின்று குத்தியது. வெல்வெட் டப்பாக்களில் புதைந்திருந்த ஏழு மூக்குத்திகளும் ஏழு வேப்பங் குச்சிகளாய் தோன்றின.

"கொஞ்சம் கூட வலிக்காது வசு. மூக்குக்கு மேல ஸ்பிரிட்டை தடவி குத்திடறாங்க. வலியே தெரியாது'' என்று கெஞ்சி அழைத்தாள் அம்மா. வசுமதி அழுது மறுத்து விட்டாள். அவளுக்கு மூக்கில் ஓட்டை போடுவது பிடிக்கவே இல்லை. மரப்பலகையில் தச்சர் துளைத் திருகி ஆணி, ஆப்பு திணிக்கிற மாதிரி.

நாட்கள் சடக் சடக்கென்று வேகமாய்ப் பறக்கிற இரயில் பெட்டிகள் மாதிரி நகர்ந்து விட்டன, திருமண நாளைக் கோத்துக் கொண்டு.

அழகு நிலையத்திற்கு அழைத்துப் போய் அலங்காரம் செய்தபோது மணிக் கணக்கில் பொம்மையாய் உட்கார்ந்திருந்தது அவஸ்தையாக இருந்தது. மூக்குத்தி போல் தெரிகிற க்ளிப் ஒன்றைச் சொருகி விட்டார்கள். மூக்கு முள்வேலியில் சிக்கிக் கொண்டதோ என்கிற மாதிரி சிரமம் அனுபவித்தாள். அதில் பதித்திருந்த கண்ணாடி கற்களின் ஒளி, கண்களைக் கூச வைத்து, கண்ணீர் வர வைத்தது.

கண்ணாடி கொண்டு வந்து முகத்துக்கு நேரே காட்டினார்கள்.

''பாரேன் உன் முகத்துக்கு மூக்குத்தி எவ்ளோ அம்சமா இருக்கு. பூவின் மீது பட்டாம்பூச்சி உட்கார்ந்த மாதிரி."

"எனக்கு உறுத்தலா இருக்கே... பாதத்திலிருந்து உச்சி வரைக்கும் அலங்காரம் பண்ணிட்டிருக்கேன். ஆனா கவனம் மூக்கு மேல மட்டும்தானே இருக்கு. மூக்கு என்னவோ தப்பு செய்து, அதுக்கு என்னவோ தண்டனை தந்துட்ட மாதிரி இருக்கு."

"அதுக்குதான் காலா காலத்துல அதைச் செஞ்சிடணும். குழந்தைல காதைப் பஞ்ச் பண்ணும்போதே மூக்கையும் பஞ்ச் பண்ணி இருக்கணும்.'' யாரோ சொல்ல மூக்கு வலித்தது.



"என் கணவர்கிட்ட அதிர்ச்சி ஏற்படும்படியான செய்தி ஏதும் சொல்லக்கூடாதுன்னு டாக்டர் கேட்டுக்கிட்டாரு..."

"அதனால...?"

"ஃபைனான்ஸ் கம்பெனில ஜாயிண்டா போட்டிருந்த பணத்துல பாதி திருப்பிக் கொடுத்துட்டாங்கன்றதை அவர்கிட்ட சொல்லாமலே இருந்துட்டேன்!"

— சக்தி சரவணன்

'அத்தனைப் பெண்களும் மூக்குத்திக்கு ஆசையாகி, ஓட்டைப்போட்டுக் கொள்பவர்கள்தான். எனக்கு மட்டும் ஏன் பிடிக்கவில்லை?' காரணம் தெரியாமல் வேதனை.

அதி விமரிசையாக திருமணம் முடிந்தது.

"மூக்கு குத்தவே இல்லையா உனக்கு?'' மின்னலடிக்கும் புதிய அம்மா வருத்தமாய்க் கேட்டாள்.

"வேணாம் அத்தை."

"இந்த விஷயத்துல நான் விடமாட்டேன்."

''ஆசாரியை வீட்டிற்கே வரவழைத்து மூக்கை குத்தியே விட்டாள். மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள், வசுமதி!

''மாட்டுக்கு மூக்கணாங்கயிறு போல பொண்ணுக்கு மூக்குத்தி அவசியம் இருக்கணும்'' என்று கூறியபோதுதான் துளைப் போட்டது மூக்கில் அல்ல, நெஞ்சில் என்று வலித்தது.

"உங்கப்பா நூத்தி ஒரு சவரன் போட்டு என்னத்துக்கு? நான் போட்ட குண்டுமணி மூக்குத்திலதான் லட்சணமே இருக்கு'' என்றபோது உயிரும் வலித்தது.

'எங்கம்மா கூட ஏழு மூக்குத்தி வாங்கி வைச்சிருக்கா... எனக்குப் பிடிக்கலை' என்று சொல்ல தோன்றிற்று.

"ரொம்ப வலிக்குதா வசு, மூக்கு?" என்று கேட்டான் சப்-இன்ஸ்பெக்டர், படுக்கையில்-காதலிலிருந்தோ, காமத்திலிருந்தோ.

"இல்லை" என்றாள்.

வலி நெஞ்சத்தில்தானே?

ஒரு ஸ்பூன் அரை ஸ்பூன்

பக்கிங்ஹாம் கனாலின் இலேசான என்லார்ஜ்மென்ட் போல் ஜெர்மானிய நகரங்களில் ரைன் நதி ஓடியதாகக் குறிப்பிட்டது நினைவிருக்கும். அந்த விமர்சனத்தைக் கண்டு ரோசம் பொங்கப் பாய்ந்து, நீர் வீழ்ச்சியாகச் சரிந்து சுழல்களும் சுழிகளுமாக அந்நதி ஓடுவதை ஜெர்மனி-ஸ்விட்சர்லாந்து எல்லையில் பார்க்க முடிந்தது.

ஆற்றின் போக்கிலே ஒரு திடீர் வளைவு. வளையும் கட்டத்தில் உயரமான ஒரு தூண் பாறை. அதைச் சுற்றி பிளந்தோடி செங்குத்தான சரிவில் 180 அடி உயரத்திலிருந்து கண்ணைத் திறந்து கொண்டு குதித்து. கட்டில்லாத சுதந்தரத்துடன் 175 மீட்டர் அகலப் பாறை பரப்பில் இங்கே பாய்கிறது ரைன்.



• ஆற்றின் போக்கிலே திடீர் வளைவு!

ஹோவென்ற இரைச்சலுடன் முகத்தில் மென்மையாக முத்தமிடும் நீர்த் திவலைகள். இயற்கையின் சுதந்தரானந்தமும் அதைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படும் மனித முகங்களுமாக அந்த இடமே ஓர் அழகிய சுழலில் சிக்குண்டு தத்தளிக்கிறது.

ஆரம்ப பரவசம் சற்றே அடங்கியதும் அத்தனைபேரும் போட்டோ எடுத்துக் கொள்கிறார்கள்.

"மேலேயிருந்து கீழ் வரைக்கும் ஃபுல்லா வருதா...?"

"இருங்க, உங்களை நான் எடுக்கறேன்... என்னது ஃபிலிம் தீர்ந்துடுத்தா...? என் கேமராவுல எடுத்துடலாம். அப்புறம் போஸ்ட்ல அனுப்பிடறேன். உங்க கார்டு குடுங்க...."



• இறங்கி வந்து படுத்துக் கொண்ட வானம்! - ஜெனீவா ஏரி.

5 ஜெர்மனி; ஸ்விட்சர்லாந்து!

சீதா ரவி

"வெயிட்! வெயிட்... இன்னொன்று எடுத்துடலாம். செஃப்டிக்கு..."


– அழகின் ஆவேசத்தை நிரந்தரப்படுத்தி வீட்டுக்குக் கொண்டு போகும் அல்ப ஆசையில் நூற்றுக்கணக்கான காமெராக்கள் கிளிக் கிளிக்கென்று இயங்கிக் கொண்டேயிருக்கின்றன.

ஒரு போஸ்ட்கார்ட் சைஸ் போட்டோவில் அடங்கும் அழகா அது? பி.சி.ஸ்ரீராம், சந்தோஷ் சிவன், இன்னும் பெயர் தெரியாத ஹாலிவுட் சினிமாடோகிராஃப்பர்ஸ் என்று படா படா பேர்வழிகளின் அசையும் காமெராக்களுக்குள் கூட முழுமையாகக் கொள்ளாத அழகு!

ஆனால் அதை அனைத்துக் கோணங்களிலும் கண்டு ரசிக்கவும் படகில் ஏறி, பாயும் நதிக்கு மிக அருகே சென்று திகில் கொள்ளவும் நடுவே நிற்கும் தூண் பாறை மீது ஏறி நின்று நோக்கவும் பாதுகாப்பான வசதிகள் செய்து வைத்திருக்கிறார்கள்.

இந்த ஏற்பாடுகளில் தொழில்நுட்பத்துடன் அழகுணர்ச்சியும் சேர, ஏறத்தாழ நதியோடு கைகோத்து நடக்கும் அனுபவம் நமக்குச் சாத்தியமாகிறது.

நேர் எதிரில் நின்று அருவியைக் கண்டு களித்த பின், வலப்



• ஆல்ப்ஸ்



புறம் சென்று படகில் ஏறி திக்திக்கென்று நெஞ்சுமோதுமளவுக்கு நெருங்கி ரசிக்கலாம். அல்லது இடது பக்கமாகத் திரும்பி நதியை ஒட்டி அமைந்துள்ள காங்கிரீட் பாதையில் நடக்கலாம்.

சமதளத்தில் நடக்கையில் மின்னிச் சுழலும் அதன் தளுக்கு தெரிகிறது. கான்க்ரீட் ஒற்றையடிப் பாதையில் சற்றே உயர ஏறினால் பாறையைச் சுற்றி வளைந்து வெளிப்படும் அருவியின் விளையாட்டுத்தனமும் இன்னும் கொஞ்சம் உயரத்துக்குப் போனால் நதி அருவி



யாக மாற தன்னை அர்ப்பணித்துச் சொரியும் கட்டமும்; அதற்கும் மேலே அந்தச் சரணாகதி நோக்கி அது மூச்சிரைக்க ஓடி வரும் மோகனக் காட்சியும்.... அதற்கும் மேலே குறுக்காகச் செல்லும் பாலத்திலிருந்து பார்த்தால், முன்னும் பின்னும் புரள்கின்ற ஜல சாம்ராஜ்யமும்... அந்தப் பிரதேசத்தையே ஆட்சி செய்யும் ஈரக் காற்றும் அதைப் பதப்படுத்தித் தரும் இதமான வெய்யிலும் கரையோர மரங்களின் வான் பார்த்த மௌனமும், அவற்றில் வாழும் குருவிகளின் ஓயாத சலனமும்... வர்கவல் ரியாலிடி யுகத்திலும் பிடித்தெடுத்து வடிக்க முடியாத இயற்கை களியாட்டம்!

காதல் ஜோடிகளும், அங்கங்கே சில குடும்பங்களும், பஸ் பஸ்ஸாக அந்நிய நாட்டவரும் வந்து, இருந்து, கண்டுகளித்து வியந்து கொண்டே......யிருக்கிறார்கள். அருவியும் விழுந்து கொண்டே.........யிருக்கிறது.

தயங்கி, நின்று திரும்பி விடைபெறுவதெல்லாம் இயலாத காரியமென்பதால் பார்வையைப் பிய்த்தெடுத்து திசைதிரும்பி, மீண்டும் பேருந்தில் ஏறி பயணம் தொடர வேண்டியிருக்கிறது.

ஸ்விட்ஸர்லாந்து எல்லைக்குள் நுழைந்தபோது, ''பாஸ்போர்ட்களைத் தயாராய் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்கள். பரிசோதனைக் கட்டத்தில் பஸ் நின்றபோதுதான் களைப்பில் மூடிக் கொண்ட கண்கள் திறந்தன. ஒரே நிமிடம்தான்–''போகலாம்''– மீண்டும் புறப்பட்டு விடுகிறது பஸ்.

''பாஸ்போர்ட் பரிசோதனை...?''

''அவசியமில்லைன்னு சொல்லிட்டாங்க... உலகமே நம்பிக்கைலதானே சுழலுது...''

நம்பிக்கையை நம்புவதுகூட கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. அதுவும் ஸ்விட்சர்லாந்துக்குள் நுழைய விசா வாங்குவதற்குப் பட்ட பாட்டை எண்ணிப் பார்த்தபோது...

சென்னையிலிருந்து மும்பைக்கு கொரியரில் அனுப்பப்பட்ட பாஸ்போர்ட் காணாமல் போனதும்; பின்னர் கொரியர் அலுவலகத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டதும்; டிராவல் ஏஜெண்டுகள் மிகக் கடைசி நிமிஷத்தில் அதை கான்சலேட்டுக்கு அனுப்பியதும், பயணம் புறப்பட இரு தினங்களே மிச்சமிருக்கையில் அது ஸ்விஸ் விசா முத்திரையிடப்பட்டு கைக்கு வந்து சேர்ந்ததும்– அந்த டென்ஷனில் மூன்று தினங்கள் நாசமானதும்...!

அந்தக் கசப்பையெல்லாம் ஒரு ஸ்விஸ் சாக்லேட் புன்னகையால் துடைத்தெறிந்து விட்டனர் அந்த செக்போஸ்டில். சந்தோஷ

டமார செவிடு!

நெருக்கடி நிலை அமலில் இருந்த நேரம். போலீஸால் தேடப்பட்ட ஒருவர், சென்னையிலிருந்து கன்யாகுமரி எக்ஸ்பிரசில், நாகர்கோவில் செல்கிறார். ரயில் புறப்பட சில நிமிடங்கள் இருக்கிறது. திடீரென்று நாலு போலீஸ் அதிகாரிகள் ஏறுகிறார்கள். அந்த நபருக்கு கிலி பிடித்துக் கொள்ள, டென்ஷன். வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வண்டி புறப்படுகிறது.

போலீஸ் அதிகாரிகள், ஒவ்வொருவராக விசாரிக்கிறார்கள். கடைசியாக போலீசால் தேடப்பட்டு வந்த அந்த தலைமறைவு நபரை நெருங்குகிறார்கள்.

''நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' என்று போலீஸ் கேட்க, ''இந்த வண்டி காலை எட்டரைக்கு திருநெல்வேலி போகும்'' என்று பதில் சொல்கிறார்.

''அதைக் கேட்கலை; எந்த ஊருக்குப் போறீங்க?''

''வழக்கமா இந்த ரயில் தாமதமாப் போகாது.''

''என்ன ஊர்!'' உரக்கக் கேட்கிறார் போலீஸ் அதிகாரி.

''திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்கு பஸ் இருக்கு.''

இந்த ரீதியிலேயே பதில் சொல்லவும், நொந்து போகிறார்கள் போலீஸ் அதிகாரிகள்.

''இந்த ஆளு டமார செவிடு போல! இவரோடு என்ன பேச்சு? நம் தொண்டைதான் காயும்'' என்று ஒரு அதிகாரி சொல்ல, தலைமறைவு ஆசாமி ஒரு அசட்டு சிரிப்பு சிரிக்க, அதிகாரிகள் அந்த இடத்தை விட்டு நகர்கின்றனர்.

திடீர்ச் செவிடு ஆன அந்த தலைமறைவு நபர் இந்து முன்னணி தலைவர் இராம. கோபாலன்!

தகவல்: **மௌலி**

மாகக் கையசைத்து தங்கள் நாட்டுக்குள் அழைத்துக் கொண்டனர்.

ஷாஃப்ஹாசன் என்ற நகருக்கருகே ரைன் நீர் வீழ்ச்சியை மூச்சு முட்ட ரசித்து விட்டு ஸ்விஸ் தலைநகர் பெர்ன் நோக்கிச் செல்லும் பாதையில் பயணம் செய்கிறோம். வயல் வெளிகளும் வீடுகளும் அவற்றின் அலங்காரமும் இது ஜெர்மனி அல்ல ஜெர்மனி அல்ல என்று மெள்ள கிசுகிசுத்துக் கொண்டே வந்து திடீரென்று இது ஸ்விட்சர்லாந்து என்று உரக்க அறிவித்தன. பச்சைப் புல்தரையில் கறுப்பும் வெளுப்பும் கலந்த மாட்டு மந்தைகள் பொட்டு வைத்தன. உயர்ந்து நிற்பதற்கு பதில் அகன்று நீண்டு நின்றன ஸ்விஸ் பாணி பண்ணை வீடுகள். அவற்றின் பக்கவாட்டில் பால் பதனிடும் ஃபாக்டரிகள், கையைப் பிடித்துக் கொள்ளும் குழந்தைபோல் ஒட்டிக் கொண்டு நின்றன. வீட்டு ஜன்னல்களில் பூத்த மலர்களின் நிறங்களில் அழுத்தமும் அடர்த்தியும் பனீரிட்டது. அடர் ஊதா, ஆழ்ந்த சிவப்பு, அறைத்த விழுது மஞ்சள் என்று பறைசாற்றும் நிறங்கள். அங்கங்கே புல் பண்ணைகள், மலர்ப் பண்ணைகள் விதைப் பண்ணைகள்.

தலைநகர் பெர்ன் நோக்கிச் செல்லும் பாதையிலிருந்து பிரிந்து, வெய்லோனா என்ற மலைவாச ஸ்தலத்துக்குப் போகையில் வலப் புறத்தில் அது தெரிந்தது.

எத்தனை நான்தான் மேலே இருப்பது என்று வானம் அலுத்துப் போய், கீழே இறங்கி வந்து மல்லாந்து படுத்துக் கொண்டது போன்ற அகண்ட நீலப் பரப்பு.

"இது மான்ட்ரீக்ஸ் (Montreaux) நகரம். நீங்கள் பார்ப்பது லேக் ஜெனீவா... இந்த ஏரி இங்கேயிருந்து ஜெனிவா நகரம் வரை போகிறது."

இயற்கையின் ஓரவஞ்சனைக்கு இந்த தேசம் முழுக்க சாட்சிகள். விக்கித்துப் போகச் செய்யும் அந்த ஏரியைத் தாண்டி (போட்டோவுக்கு நிறுத்தக்கூட நேரமில்லை) வெய்லோனா நோக்கி விரைகிறோம்.

இடது பக்கத்தில் பிடித்து வைத்த பிள்ளையார் போல் முதலில் சின்னதாக ஆரம்பிக்கும் ஆல்ப்ஸ் மலைத்தொடர் மெள்ள மெள்ள பெரிதாகி விசுவரூபமெடுத்து வானத்தை முட்டி நிற்கிறது. கொஞ்சமாக அங்கங்கே மண் கலந்த அழுக்கு வெண்மையில் முதலில் தெரியும் பனிப் படர்வு போகப் போகத் தூய்மையுற்று அடர்ந்து பிரகாசிக்கிறது.

சியான் நகரம்- பாட்டிகளும் அத்தைகளும் சுற்றிலும் உட்கார்ந்து திருஷ்டி கழித்து விளையாடும் குழந்தையாக நாற்புறமும் மலைகள் கொஞ்ச, நடுவிலே சுகித்துக் கொண்டிருக்கிறது அந்த சின்ன நகரம்.

அதைக் கடந்து ஒரு மலைப் பாதையில் ஏறுகிறது பஸ். குறுகலான பாதைதான். எதிர்ப்புறம் இன்னொரு பஸ் வந்தால் கவனமாகத்தான் நின்று போக வேண்டும். திராட்சைத் தோட்டங்களும், செர்ரி மரங்களும் அடர்ந்த மலைச் சரிவுகள் தாண்டி வெய்லோனாவை அடையும்போது பொழுது சாய்ந்து விட்டது.

பனிக்காலத்தில் பனிச்சறுக்குப் ப்ரியர்களின் புகலிடமாகும் 'ஸ்கி ரிசார்ட்'. ஹோட்டல் அறையின் பால்கனியிலிருந்து பார்த்தால் சாம்பிளுக்குத் தெரியும் ஆல்ப்ஸ் சிகரம், வெளியே வெட்ட வெளியில் புல்தரைக்குப் போகும்போது கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு இடமும் வலமுமாக அகண்டு நிற்கிறது. அஸ்தமன சூரியனின் இளஞ்செந்நிறம் பட்டு அடங்கிப் போன செளந்தர்ய வெண்மை! ஆயிரமாயிரம் ஆண்டுகளின் உத்பாதங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் கம்பீரம். பார்க்கும்போதே எழும் பாதுகாப்புணர்வும் புலன்களைக் கடந்து நெஞ்சை நிறைக்கும் பிரம்மாண்டமும்... தொழச் செய்கின்றன.

மெளன சங்கீதத்தில் முழுகியிருக்கும் மலைகளுக்குப் போட்டியாக ஒரு ஒற்றைக் குருவி எங்கோ மரங்களில் மறைந்தபடி ஓயாமல் பாடுகிறது. எந்த பிரம்மாண்டத்தைக் கண்டும் மிரளாத அந்த தன்னம்பிக்கை கீதம் நாங்கள் போய்ச் சேர்ந்த பின்மாலை ஏழு மணி அளவில் ஆரம்பித்து, ஒன்பதரைக்கு வானத்து முதல் நட்சத்திரமும் சமதளத்தில் தெரிந்த சியான் நகரின் மின் விளக்குகளும் மினுக்கும் வரை தொடர்ந்தது. 'டுட் டுட் டுட்டு...' என்ற ஒரே பாடல்தான்... ஆனால் தளராத குரல்; அதில் குன்றாத உற்சாகம்.

இத்தனை உற்சாகமும் கைப்பிடித்து மனத்தை வழிநடத்தும் இயற்கை அழகும் மனிதனைக் கட்டிப் போடுவதில்லை.

ஹோட்டல் பேஸ்மென்டில் டிஸ்கோ நடக்கிறது. செவி கிழிக்கும் சிந்தடிக் சங்கீதம் நோக்கி கூட்டம் நகர்கிறது. இருபது இருபத்திரண்டு வயது இளைஞன் அடிவயிற்றிலிருந்து குரலெடுத்து மைக்கில் அலறுகிறான். விரகத்தை மொத்தமாக குத்தகை எடுத்துக் கொண்டு ஆடும் மிக அழகான அந்தப் பெண்ணுக்கு முப்பது வயது இருக்கலாம். கறுத்து மின்னுகின்ற அவன் உடலைத் தழுவியிருக்கும் ஆடையும் வெண்ணிறம்தான்- ஆல்ப்ஸ் சிகரங்களைப் போர்த்தியிருக்கும் பனியின் அதே வெண்மை. நிறங்களுக்கு அர்த்தம் கற்பிப்பது மனம்தானே!

(தொடரும்)

● நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது எளிது, ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பதுதான் அரிது.
-கீதே
தகவல்: பா. குணா

"இனிமே ஹாக்கி ஹாக்கி ஹாக்கிதான்!"

பெட்டிங், புகார், விசாரணை கமிஷன் என்று கிரிக்கெட் நொந்து நூலாகிக் கிடக்க, சப்தம் போடாமல் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று கலக்கி வந்திருக்கிறது இந்திய சப்-ஜூனியர் ஹாக்கி டீம்! இந்த டீமில் இடம்பெற்ற ஜெகத்ஜோதி, சரவண குமார், ரஜினிகாந்த் என்ற மூன்று வீரர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். வெற்றிக் களிப்பில் மிதந்து கொண்டிருந்த ஜெகத்ஜோதியை சென்னை ஆதம்பாக்கத்திலுள்ள அவரது வீட்டில் சந்தித்தோம்.



"எங்க அண்ணன் தென்னவன் ஹாக்கி பிளேயர். அவரைப் பின்பற்றித்தான் நானும் ஹாக்கிக்கு வந்தேன். ஒய்எம்சிஏ ஸ்கூல்ல படிச்சுக்கிட்டே அங்கேயே ப்ராக்டீஸ் பண்ணினேன். அப்போ பதினான்கு வயசுக்குட்பட்டோருக்கான தென்மண்டல ஹாக்கி போட்டி பெங்களூர்ல நடந்தது. அதுக்கு நான் தேர்வானேன். என்னோட ஆட்டத்தைப் பார்த்துட்டு கோச் ரமேஷ் பத்தானியா, ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியாவுல சேரச் சொன்னார். சேர்ந்தேன். பயிற்சி கொடுத்தாங்க. பிறகு ஸ்கூல் லெவல்ல தென்மண்டலத்துக்கான கேப்டனா இருந்தேன். இந்த நேரத்துல ஆசிய கோப்பை சப்ஜூனியர் ஹாக்கி போட்டிக்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டாங்க. இந்தியா முழுவதும் நான்கு மண்டலமாப் பிரிச்சு இருநூற்றி ஐம்பது பேருக்குப் பயிற்சி கொடுத்தாங்க. இதுல சிறப்பான பதினெட்டுப் பேரைத் தேர்ந்தெடுத்தாங்க. அதுல நானும் ஒருத்தன்ங்கறது சந்தோஷமா இருக்குது" என்று சின்னதாய்ப் புன்னகைத்து விட்டு அம்மாவைப் பார்க்கிறார்.



• அம்மாவும் அண்ணனும்

"எப்பப் பார்த்தாலும் மட்டையைத் தூக்கிகிட்டுத்தான் அலைவான். அதுக்கான அங்கீகாரம் இப்பத்தான் கிடைச்சிருக்கு" என்கிறார் மகனின் தலையை வருடியபடி அவரது அம்மா.

"திறமை இருந்தால்தான் மேல வர முடியும்னு சொன்னாலும் நான் வந்ததுக்குக் காரணம், இந்திய ஹாக்கி சம்மேளனச் செயலாளர் ஜோதிக்குமரன், கோச்சுகள் அலெக்ஸாண்டர், சந்தோஷ், ஸ்டேடியம் இன்சார்ஜ் ஸ்டீபன், ஆதம்பாக்கம் ஹாக்கி கிளப்பைச் சேர்ந்த அடைக்கலநாதன் இவங்க எல்லாரும்தான்" என்றவரிடம் "போட்டி எப்படி இருந்தது?" என்றோம்.

"மொத்தம் எட்டு அணிகள். நாங்க எந்த அணியிடமும் தோற்கலை. நல்லா போராடி ஜெயிக்க வேண்டிய அணியாக பங்களாதேஷ் டீம் மட்டும்தான் இருந்தது" என்றார்.

நல்ல ப்ளேயரா ஆகணும்ங்கறதுதான் என் லட்சியம். மனசுல லட்சியத்தை வைச்சுட்டு சும்மா இருக்க முடியுமா? அதான் தீவிரமான ப்ராக்டீஸ்ல இறங்கிட்டிருக்கேன். இனிமே எல்லாமே ஹாக்கி, ஹாக்கி, ஹாக்கிதான்!" என்கிறார் ஹாக்கி மட்டையை உருட்டியபடி!

— ஏக்ஜி

படங்கள் : ஐரிஸ்

பிரச்னை

காப்பி பொடி காலி
மாட்ச் ஃபிக்ஸிங்
மறுபடியும் இங்கிருந்து
மாறுகண் பெண்
உலக அழகி
ஜப்பானில் குளோனிங்
நவாஸ் ஷெரீஃப் தூக்கு?
வவுச்சர் போடவில்லை
கவிஞர்களுக்குள் அடிதடி
நாற்பத்து மூன்று டிகிரி வெயில்
டோட்டல் உதைக்குது
குடைச்சலில் மண்டை பிளக்க
நிற்கிற என்னை
இடித்துக் கொண்டு ஓடுகிற
ஆடையற்ற என் குழந்தைகள்
விடாமல் விரட்டுகிறார்கள்
கரப்பான் பூச்சியை.

— வசந்த் செந்தில்



வெளிநாடுகளில் வாழும் பிரெஞ்ச் குடியுரிமை பெற்றவர்களின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவுக்கான தேர்தல் ஜூன் 18ம் தேதி புதுச்சேரியில் நடந்திருக்கிறது. போட்டியிட்ட ஐந்து அணிகளில் முகமது முஸ்தபா தலைமையிலான அணி வெற்றி பெற்றிருக்கிறது. இத்தேர்தலை யடுத்து முகமது முஸ்தபாவை சந்தித்தோம் புதுச்சேரியில்.

''பிரெஞ்சு வெளி விவகாரத்துறை அமைச்சருக்கு உயர்மட்ட ஆலோசனைக்குழு ஒண்ணு இருக்கு. இந்தக் குழுவுக்கு மக்களால் நூற்றிஐம்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படறாங்க. இவங்க எல்லாருமே வெளிநாடுகள்ல வாழற பிரெஞ்சு குடியுரிமைப் பெற்றவங்கதான். மக்களவைக்கான பன்னிரண்டு உறுப்பினர்களை இவங்க தேர்ந்தெடுப்பாங்க. எங்க கோரிக்கைகளை மாநிலங்களவையில் இவங்கதான் பேசறாங்க.

''இந்தியாவுல டெல்லியிலும், புதுச்சேரியிலயும் இதற்கான தேர்தல் ஆறு வருஷத்துக்கு ஒரு தடவை நடக்குது. காரைக்கால், மாஹே, ஏனாம், புதுச்சேரி, தமிழ்நாடு, கேரளாவைச் சேர்ந்த பிரெஞ்ச் குடியுரிமை பெற்றவங்க 5749பேர் புதுச்சேரியில நடந்த தேர்தல்ல எங்களைத் தேர்ந்தெடுத்திருக்காங்க. எங்க தேர்தல் சட்டப்படி நாங்க பிரசாரம் பண்ணக் கூடாது. துண்டு அறிக்கைவிடக் கூடாதுன்னு நிறைய விதிகள் இருக்கு. ஆனா எதிர் அணிக்காரங்க இதையெல்லாம் செஞ்சாங்க. அதையும் மீறி மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்காங்க.

''மொத்தம் ஐந்து அணிகள் போட்டியிட்டோம். ஒரு அணிக்கு நான்கு பேர். இதில் யாராவது ஒருத்தர் இறந்துட்டாலோ, அல்லது ராஜினாமா பண்ணிட்டாலோ மத்த இரண்டு பேர் நேரிடையா அந்தப் பொறுப்பை ஏத்துக்கணும். இதுக்காக இடைத்தேர்தல் எல்லாம் நடத்த மாட்டாங்க.

• லொமோத்தே ஏசையா



''எங்க அணி சார்பா நான், லொமோத்தே ஏசையா, கிளேரோன் நோயே, எழிலன் சுப்பராயன்னு நான்கு பேர். இதுல கிளேரோன் நோயேங்கிற பெண் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதும் இதுதான் முதல் முறை" என்று படபடவென்று பேசிய முஸ்தபாவிடம் இத்தேர்தலில் வென்றதன் மூலம் நீங்கள் என்னென்ன செய்ய முடியும்? என்றோம்.



• கிளேரோன் நோயே

''பிரான்சுல வாழற மக்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அதே உரிமை எங்களுக்கும் தரப்படணும். அப்புறம் எங்களுக்கான சலுகைகள்... இவற்றை மீட்கப் போராடணும். பிரான்சுல பதினாறு வயதுக்குட்பட்டவங்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் இருக்கு. ஆனா இங்க நாங்க பணம் கொடுத்துதான் குழந்தைகளைப் படிக்க வைக்கிறோம். இங்க இருக்கிற எங்கள் குழந்தைகளுக்கும் இலவச கல்வி வேணும்னு கேட்கிறோம்'' என்றவரிடம் ''இந்தியாவுல இருந்துட்டு இப்படிக் கேட்பது சரிதானா?'' என்றால் சீறுகிறார். ''பிரெஞ்ச் அரசியல் சட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் பிரெஞ்ச் குடி மக்களுக்கு இலவசக் கல்வி அளிக்காதேன்னு சொல்லலையே!

புதுவை

''என்னைப் பாருங்க. நான் பிரெஞ்ச் விமானப் படையில இருபத்தி ஒன்பது வருஷம் லெப்டினன்ட் கர்னலா வேலைப் பார்த்திருக்கேன். எனக்கு வர்ற பென்ஷன்ல மெடிக்கல் இன்சூரன்ஸ், அந்த வரி, இந்த வரின்னு பிரெஞ்ச் அரசாங்கத்துல ஏகப்பட்ட வரிகள் பிடிச்சுக்குறாங்க. எங்ககிட்ட வரி வாங்குறவங்க எங்க தேவையைப் பூர்த்தி செய்யணுமில்லையா?'' என்கிறார்.

அறுபது வயதுக்கு மேற்பட்ட, வருமானமில்லாத வயதான



• முகமது முஸ்தபா

வர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித் தொகை ஐந்நூறு பிராங்குகளிலிருந்து அறுநூறு பிராங்குகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கல்வி உதவித் தொகைப் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பு வருமானம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று தனது சாதனைகளின் நீண்ட பட்டியலையும் தருகிறார் முஸ்தபா.

ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் பிரான்ஸில் நடக்கும் பொதுக்குழுக் கூட்டத்திற்கு இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். இந்தக் கூட்டத்தில் இவர்களின் கோரிக்கை குறித்துப் பேசுவார்களாம். வருடத்தில் நான்குமுறை கமிட்டிக் கூட்டமும் நடக்குமாம். இதிலும் தங்கள் கோரிக்கையை வைக்க வேண்டும். பிறகு வெளிவிவகாரத் துறை அமைச்சருக்கு அனுப்பப்பட்டு, ஆலோசித்து நிறைவேற்றப்படும்.

"இந்தப் பதவிக்கு ஊதியம் ஏதும் கிடையாது, கௌரவம் மட்டும்தான். இதுக்குத் தான் இத்தனை போட்டி" என்று சொல்லும் முஸ்தபா ஒரு பிஸினஸ் மேன். இவர் இன்னொரு பிரச்னையையும் சொல்கிறார்.

• எழிலன் சுப்பராயன்



"புதுச்சேரியில் வாழும் ஓய்வு பெற்ற பிரெஞ்ச் ராணுவத்தினர், இந்திய-பிரெஞ்ச் ஒப்பந்தப்படி, பணம் கட்டாமல் பாஸ்போர்ட் பெறவோ, புதுப்பிக்கவோ அனுமதிக்கப்பட்டு வந்தாங்க. திடீர்னு இந்த உதவி நிறுத்தப்பட்டிருக்கு. ஏன் எதுக்குன்னு தெரியலை. இதைப் பெற போராடிட்டு இருக்கோம்.

பிரெஞ்ச் பார்லிமெண்ட்?

"பிரெஞ்ச் குடியுரிமை பெற்றிருக்கிற பாதி பேருக்கு அவங்களோட சட்டம் தெரியலை; உரிமை தெரியலை, சலுகை தெரியலை. நாங்கதான் அவங்களுக்கு இதை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கு" என்கிறார்.

ஜான்பியேர் கான்தேகிரி. இவர் பிரெஞ்ச் பாராளுமன்றத்தில் புதுச்சேரி சார்பான நியமன உறுப்பினர். பிரான்சில் வாழ்பவர். இவரும் அவ்வப்போது புதுச்சேரிக்கு விசிட் அடித்து பிரெஞ்ச் மக்களின் தேவைகளை நேரில் கேட்டுச் செல்வாராம்.

"பிரெஞ்ச் மாநிலங்களவை நியமன உறுப்பினர் பதவிக்கு புதுச்சேரியைச் சேர்ந்த எவரும் இதுவரைத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது ஒரு குறையாக இருக்கிறது. இந்தக் குறையைப் போக்கும் முயற்சியில் இறங்கிக் கொண்டிருக்கிறோம். விரைவில் இந்த முயற்சி நிறைவேறும்" என்கிறார் 'செவாலியே தெ லொர்த்தர் நசியோனால் துாய் மெரித்' என்ற பிரெஞ்சு ஜனாதிபதி விருது பெற்றுள்ள இந்த முஸ்தபா!

— சலாம்ஜி

அடுத்து எந்தப் பொருளை விற்பது என்று அவனும், அவளும் யோசித்தார்கள். கண்ணில் பட்ட அத்தனை பொருட்களையும் விற்றாயிற்று. செலவுக்கேற்றபடி தன்னால் ஏன் சம்பாதிக்க முடியவில்லை என்று அவன் யோசித்தான். இந்த யோசனை எப்போதும் சுய இரக்கத்தில்தான் கொண்டு போய் விடும்.

"இந்தாங்க... இதை முதலில் வித்து வீட்டுக்காரன் மூஞ்சில எறிங்க" என்றாள் அவன் மனைவி அந்த மூக்குத்தியை அவன் கையில் கொடுத்தவாறு. "அம்மாவின் மூக்குத்தி. அரை கிராம் இருக்கும்" என்றாள்.

எப்போதாவது அம்மா மூக்குத்தியைக் கழற்றி வைத்திருக்கலாம். அப்படியே மறந்துமிருக்கலாம். இல்லை பிற்காலத்தில் மகனுக்குப் பணக்கஷ்டம் வந்தால் எடுத்துக் கொள்ளட்டும் என்று வைத்திருப்பாளோ? அம்மாவின் ஞாபகமாய் உள்ள எல்லாப் பொருளையும் விற்றாயிற்று. அநேகமாய் இது அம்மாவின் ஞாபகத்தை சுமந்து கொண்டிருக்கும் கடைசிப் பொருளாய் இருக்கலாம்.

அம்மா இறந்து போய் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அம்மா அணிந்திருந்த செயினை தனக்கு தந்து விடுவார்கள் என்று அவன் மனைவி நினைத்தாள். தங்கை வந்து எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

"எங்க அம்மா செயினை உனக்கு எதுக்குக் கொடுக்கணும்?" என்றாள். இவனுக்கு அதனால் ஆத்திரம்.

"உங்கம்மாவுக்குக் கடைசி காலத்துல அவளா சோறு போட்டா? வந்து செயினை வாங்கிட்டுப் போயிட்டா?" என்று பொருமினாள்.

"விடு... அம்மாவே இல்லைன்னு ஆனதுக்கப்புறம் இந்த செயின் மட்டும் என்னத்துக்கு?" என்றான்.

"சம்பாதிக்கத் துப்பு இல்லைன்னாலும் வேதாந்தத்துக்குக் குறைச்சல் இல்லை" என்பாள்.

"மூக்குத்தி நல்லாத்தான் இருக்கு" என்றான். அவள் மூக்குக் குத்தி இருக்கவில்லை. குத்தியிருந்தால் இதை அணிந்திருக்கக்கூடும்.

"புதுசுன்னு சொல்லி நல்ல விலைக்குக் கேளுங்க" என்றான்.



யோகி



இவள் அழுத்தித் துடைப்பதால் மட்டும் புதுசாகி விடுமா?''

அவன் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான். வீட்டுக்காரரின் தலை வாசல் பக்கம் தெரிந்தது. ''என்னப்பா, பதினைஞ்சு தேதி யாச்சு. இன்னும் வாடகை கொடுக்கலை? பஸ் ஸுக்கு அஞ்சு, அஞ்சும் பத்து ரூபாய் செலவு பண்ணி வரவேண்டியிருக்கு. வெட்டிச் செலவு. வாடகையை வாங்கித் தான் நாங்க சோறு திங்கணும். தெரியாதா தம்பி உனக்கு?'' என்றார்.

சங்கடத்துடன் நகர்ந்தான். மூக் குத்தி பையில் இருந்தது. அம்மாவே பைக்குள் உட்கார்ந்திருக்கிற மாதிரி. அம்மாவின் எல்லாப் பொரு ளையுமே விற்று விட்டோம். இந்த மூக்குத்தியையும் விற்க வேண்டுமோ என்று யோசித் தான். விற்க மனசில்லை. வீட்டுக்காரரைச் சமாளிக்க முடியாதா என்ன? அப்படியே அரைமணி நேரம் ஊர் சுற்றி விட்டு வந்தான், வீட்டுக்கு.

''என்ன எடை இருந் தது? எவ்வளவு ரூபாய்க் குப் போச்சு?'' மனைவி கேட்டாள். என்ன பொய் சொல்வது என்று யோசித் தான். சட்டென்று ஒரு பொய் வந்தது.

''அது கவரிங் காம். போய்க் கொடுத்ததுமே ஒரு மாதிரியா பார்த் தார். கவரிங்கை தங் கம்னு சொல்லிட் டுன்னு சங்கடப்பட் டார்'' என்றான். அவள் நம்புவாளோ.. மாட்டாளோ என்று பயந்தான்.

''அதானே பார்த் தேன்... தங்கமா இருந்தா உங்கம்மா உங்க தங்கச்சிக்குக் கொடுத் திருக்க மாட்டாங்க..?'' என்று சமையலறைக்குள் நுழைந்தாள். அவனுக்கு விற்றே இருக்கலாம் போல் வலித்தது.



வி.ஐ.பி. விருப்பம்

ஏ.சி. சண்முகம்

கிட்டாமல் போன சட்டம்!

என்னுடைய இரண்டு விருப்பங்கள் நிறைவேறாமலேயே போய் விட்டன. எனது சொந்த ஊர் ஆரணி. பள்ளிப் படிப்பை அங்கேதான் முடித்தேன். உறவினர்கள் பலர் அரசியலில் இருந்தனர். அதனால் இயல்பாகவே பொது வாழ்க்கையின் மேல் ஒரு நாட்டம் இருந்தது. வேலூர் கலைக் கல்லூரியில், இளங்கலை இரண்டாம் ஆண்டு படிக்கும்போதுதான் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வைத் துவக்கினார். அதில் என்னை இணைத்துக் கொண்டேன். மாவட்ட மாணவர் அ.தி.மு.க. அமைப்பாளராக நியமனம் செய்தார் எம்.ஜி.ஆர். மாவட்டம் முழுவதும் சென்று பொதுக் கூட்டங்களில் பேசினேன்.

இளங்கலை முடித்து விட்டு சென்னை சட்டக் கல்லூரியில் சேர வேண்டுமென்பது என் ஆசை. அப்போதெல்லாம் சட்டக் கல்லூரிக்கு நுழைவுத் தேர்வு கிடையாது. சட்ட அமைச்சர் அலுவலகத்தின் சிபாரிசுகளுக்கேற்ப தேர்வு நடக்கும். நான் சிபாரிசு பிடித்தும் எனக்கு இடம் கிடைக்கவில்லை. அதற்குச் சொல்லப்பட்ட ஒரே காரணம், 'நான் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவன்' என்பதுதான். வரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை சட்டக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்ற எனது விருப்பம் இப்படித்தான் நிறைவேறாமல் போனது.

அதே போல் நான் சட்டப் பேரவை தேர்தலுக்கு நிற்கும் போது, ஆரணியில் அரசு கலைக் கல்லூரி கொண்டு வருவேன்' என்று வாக்குறுதி கொடுத்தேன். பொறுப்பில் இருந்த ஐந்து வருட காலம் போராடிப் பார்த்தேன், முடியவில்லை. கொள்கை அடிப்படையிலும், நிதி நிலை காரணமாகவும், புதிய கல்லூரிகள் திறப்பதை அரசாங்கம் விரும்பவில்லை என்று காரணம் சொல்லப்பட்டது. பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக வந்த போதும் கல்லூரிக்காகப் போராடினேன். தனியார்கள், கல்விக் கூடங்கள் திறக்க தாராள அனுமதி கொடுக்கப்படுவதால் அரசுக் கல்லூரிகள் அமைப்பது நிறுத்தி வைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். பத்து வருட காலம் போராடியும் அரசுக் கல்லூரியை ஆரணியில் என்னால் கொண்டு வர முடியவில்லை. (பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பு முடிந்து பத்து வருடங்கள் கழித்து எனது சொந்தச் செலவில் ஆரணியில் கல்லூரிகளை உருவாக்கினேன் என்பது வேறு விஷயம்!)

— ரமா

படம் : ராஜன்



பதின்மூன்றாம் அத்தியாயம்


குந்தவை கேட்ட வரம்

ஜோதிடரின் வீட்டுக்குள் பழுவேட்டரையர் பிரவேசித்தபோது அங்கு உண்மையாகவே குந்தவைப் பிராட்டியும் வானதியும் இருந்தார்கள்.

ஈழத்து ராணியைப் பொழுது விடிந்ததும் காணாததிலிருந்து குந்தவையின் மனம் அமைதியை இழந்துவிட்டது. அதே சமயத்தில் பூங்குழலியும் காணாமற் போனது அவளுடைய கலக்கத்தை அதிகமாக்கிற்று. முதன்மந்திரி அநிருத்தரைப் பார்க்கச் சென்றாள். அச்சமயத்தில் அங்கே அருள்மொழிச் சோழனைப் பற்றிச் செய்தி வந்திருந்தது. நாகைப் பட்டினத்தில் அடித்த புயலின் காரணமாக அவன் வெளிப்பட நேர்ந்ததென்றும், திரளான மக்கள் கூடி அவனை வெற்றி முழக்கத்துடன் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்கள் என்றும் அறிந்தாள். குந்தவையின் பரபரப்பு எல்லையைக் கடந்துவிட்டது. இதனால் ஏதோ விபரீதம் வ்ரப்போகிறது என்று கருதினாள். பொன்னியின் செல்வனை வழியில் சந்தித்துப் பேசித் தஞ்சையில் நடந்ததையெல்லாம் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினாள். அவன் பெரும் ஜனக்கூட்டம் புடை சூழத் தஞ்சைக் கோட்டையில் பிரவேசிக்க விரும்பினால், பழுவேட்டரையரின் படை வீரர்கள் அவனைத் தடுத்து நிறுத்த முயலுவார்கள். இதற்கிடையில் பூதி விக்கிரம கேசரி தென் பிரதேசத்துப் படைகளுடனே கொடும்பாளூர் வரைக்கும் வந்துவிட்டார் என்று தெரிய வந்திருந்தது. இரண்டு படைகளும் தஞ்சைக்கருகில்

அமரர் கல்கி

மோதிக் கொள்ளும்படி நேரிடலாம். அதனால் தந்தையின் உள்ளம் புண்படும் என்பது நிச்சயம். அதனால் அவருடைய உயிருக்கே அபாயம் நேர்ந்து விடலாம். மேலும் என்னென்ன விளையுமோ, யாருக்குத் தெரியும்? புயற்காற்றின் காரணமாகக் குடிமக்களின் உள்ளங்கள் கொந்தளித்துக்கொண்டிருக்கின்றன. ஏதாவது ஒரு வியாஜம் ஏற்பட வேண்டியதுதான். சோழ நாடே அழியும்படியான பெரும் உள்நாட்டுக் கலகம் மூண்டு





விடக் கூடும். பிறகு அதை நிறுத்துவது எப்படி? வந்த பின்னர் நிறுத்த முயலுவதைக் காட்டிலும் முன்னாலேயே தடுக்கப் பார்ப்பது அவசியம் அல்லவா? இல்லாவிடில் இத்தனை காலமும் செய்த முயற்சியெல்லாம் வீணாகி விடுமே? ஆதலின் அருள்மொழிச் சோழனை வழியிலேயே சந்தித்துப் பழையாறையில் சிறிது காலத்துக்கு நிறுத்திக் கொள்ள வேண்டும். கடம்பூரிலிருந்து பெரிய பழுவேட்டரையரையும் தருவிக்க வேண்டும். அருள்மொழிக்கு இராஜ்யம் ஆளும் ஆசை இல்லை என்பதை அவருக்குத் தெரிவித்து, அவருடைய சம்மதம் பெற்ற பிறகுதான், தஞ்சைக்கு அவனை அழைத்துப் போக வேண்டும்...

இவ்விதம் தனக்குள் சிந்தித்து முடிவு செய்துகொண்டு, தந்தையிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் அன்னையிடமும் அநிருத்தரிடமும் மட்டும் சொல்லிவிட்டு இணைபிரியாத வானதியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். பழையாறைக்குப் போகுமுன்பு குடந்தை ஜோதிடரை இன்னொரு தடவை பார்த்து விட விரும்பினாள். கவலை அதிகம் ஏற்படும்போது வருங்காலத்தைப் பற்றி ஜோதிடம் பார்த்து அறிய விரும்புவது மனித இயல்பு அல்லவா?

வழக்கம் போல் அம்மன் கோவிலுக்கு அருகில் ரதத்தை விட்டு விட்டு ஜோதிடர் வீட்டுக்குள் புகுந்தாள். ஜோதிடரிடம் அவளுடைய கவலையைத் தெரிவிக்கத் தொடங்கிச் சிறிது நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் வீட்டு வாசலில் ஏதோ தடபுடல் நடைபெறும் சத்தம் கேட்டது. முக்கியமாக, பழுவேட்டரையரின் ஹுங்காரம் அவளுக்கு ரோமாஞ்சனம் உண்டு பண்ணியது. அந்த மாதிரி கம்பீரமாக ஹுங்காரம் செய்யக் கூடியவர் பெரிய பழுவேட்டரையர் ஒருவர்தான். தடுக்க முயன்ற ஜோதிடரின் சீடனைத் தள்ளி விட்டுப் பழுவேட்டரையர் உள்ளே வருவதாகக் காணப்பட்டது. அவர் எப்படி, இங்கே வந்தார்? எதற்காக வருகிறார்? அதுவும் இந்த வேளையில்...?

ஆகா! ஒருவேளை ஜோதிடம் கேட்கத்தான் வருகிறார் போலும்! அவர் ஜோதிடருடன் பேசுவதைக் கேட்டால் ஒருவேளை அவருடைய மனத்தில் உள்ள எண்ணங்கள் தெரியக்கூடும். இராஜ்யத்துக்கும் இராஜகுலத்துக்கும் பெரிய நெருக்கடி நேர்ந்திருக்கும் இச்சமயத்தில் பெரிய பழுவேட்டரையரின் மனப்போக்குத் தெரிந்தால் எவ்வளவோ செளகரியமாயிருக்கும். அதைத் தெரிந்துகொள்ள இப்போது ஒரு சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது. மேலும், தானும் வானதியும் அங்கு இருப்பதைப் பார்த்தால், அவர் என்ன எண்ணிக் கொள்வாரோ என்னமோ...? ஏன்? தவறாகத்தான் எண்ணிக் கொள்வார்! சந்தேகமில்லை. ஆகையால் அவர் கண்ணில் படாமல் மறைந்திருப்பதுதான் நல்லது...

குந்தவை, ஜோதிடரிடம் ஜாடையினால் தனது நோக்கத்தைத் தெரிவித்துவிட்டு வானதியையும் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அவசரமாக அடுத்த அறைக்குள்ளே சென்றாள்.

அவர்கள் புகுந்த அறையின் கதவு சாத்தப்பட்ட தட்சணமே பழுவேட்டரையர் உள்ளே பிரவேசித்தார். பரபரப்புடன் எழுந்து நின்று கும்பிட்ட ஜோதிடரை உற்றுப் பார்த்துவிட்டுச் சுற்றுமுற்றும் நோக்கினார். அவர் முகத்தில் வியப்புக்கும் ஏமாற்றத்துக்கும் அறிகுறி தென்பட்டது. இது ஒரு கண நேரந்தான். உடனே சமாளித்துக்கொண்டு, "ஜோதிடரே! நான் யார் தெரிகிறதா? தனாதிகாரி பெரிய பழுவேட்டரையனேதான்! ஏன் இவ்வாறு பேந்தப் பேந்த விழிக்கிறீர்? அவ்வளவு உருமாறிப் போயிருக்கிறேனா? உம்மால் எனக்கு ஒரு முக்கியமான காரியம் ஆக வேண்டியிருக்கிறது. ஒரு பெரிய உதவி நீர் எனக்குச் செய்ய வேண்டும். முதலில், சாப்பிடுவதற்கு ஏதேனும் இருந்தால் கொண்டு வாரும். ரொம்பப் பசியாயிருக்கிறது. சாப்பிட்டுக்கொண்டே சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்" என்றார்.

ஜோதிடர் தட்டுத் தடுமாறி, "ஐயா! இந்த ஏழை எளியவனால் தங்களுக்கு என்ன பெரிய உதவி தேவையாயிருக்க முடியும்? இந்தக் குடிசையைத் தேடித் தாங்கள் வந்தது என் முன்னோர் செய்த பாக்கியம். தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி விருந்து அளிக்க என்னால் இயலாது. ஆனாலும் இந்தக் குடிசையில் உள்ளவையெல்லாம் தங்களுடையவை தான். தயவு செய்து அமருங்கள். நின்றுகொண்டிருக்கிறீர்களே? தங்களைப் பார்த்தவுடனே திடுக்கிட்டுப் போனேன். அதனால் தங்களைத் தக்கபடி வரவேற்று உபசரிப்பதற்குத் தவறி விட்டேன். ஆகா! இந்த எளியவனுடைய குடிசையில் தாங்கள் அமருவதற்குத் தகுதியான ஆசனம்கூட இல்லை. பெரிய மனசு செய்து அந்தப் பலகையிலே உட்கார வேண்டும்" என்று, சற்று முன் குந்தவையும் வானதியும் உட்கார்ந்திருந்த பலகைகளைச் சுட்டிக்காட்டினார்.

பழுவேட்டரையர் அப்பலகைகளையும் அவற்றின் அருகில் சிந்தியிருந்த மலர்களையும் உற்றுப் பார்த்துவிட்டு, "ஜோதிடரே! இல்லை; எனக்கு உட்கார நேரமில்லை. ஏதாவது சாப்பிடுவதற்குக் கொடுக்கக்கூடியது இருந்தால் இலையிலே சுற்றிக் கையிலே கொடுத்து விடுவீர். தஞ்சைக்கு அவசரமாக ஒரு செய்தி அனுப்ப வேண்டும். என் சகோதரன் காலாந்தக கண்டனுக்கு... ஓலையும் எழுத்தாணியும் தருகிறீரா...? வேண்டாம்! ஓலை எழுதிக் கொண்டிருக்க நேரமில்லை. என் முத்திரை மோதிரத்தைக் கொடுக்கிறேன். அதை எடுத்துக்கொண்டு நீர் தஞ்சாவூர் உடனே போக முடியுமா? அல்லது வாசலில் நின்றானே உமது சீடன், நல்ல தடியனாக இருக்கிறான். அவனை அவசரமாக அனுப்ப முடியுமா?" என்று கேட்டார்.

"தங்கள் கட்டளை எதுவோ, அப்படியே செய்கிறேன். நானும் என் சீடனும், இரண்டு பேரும் வேணுமானாலும் போகிறோம். ஆனால், தனாதிபதி! பெரிய மனசு செய்து சிறிது நேரம் இந்த ஏழையின் குடிசையில் அமர்ந்து, இந்த எளியவன் அளிக்கும் அமுதைத் தாங்கள் அருந்திவிட்டுப் போக வேண்டும்!"

"ஜோதிடரே! எதற்காக உம்மை ஏழை என்றும் எளியவன் என்றும் அடிக்கடி சொல்லிக்கொள்கிறீர்? உம்முடைய வீட்டைத் தேடி அரசர்களும் அரசிளங் குமரிகளும் அடிக்கடி வருவதுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஒருவனே உம்மிடம் ஜோதிடம் கேட்க வராதவன். அது தவறு என்பதை உணர்ந்துகொண்டேன். ஒருவேளை உம்மிடம் கேட்டிருந்தால், இம்மாதிரி பயங்கர விபத்துக்கள் ஏற்படாமலிருந்திருக்கலாம்..."

"ஐயா! தங்கள் மொழிகள் எனக்குப் பெரிதும் கவலையைத் தருகின்றன. என்ன விபத்து நேர்ந்தது? யாருக்கு? தங்களை இந்தக் கோலத்தில் பார்த்ததும் நான் திடுக்கிட்டது சரிதான். புயலிலும் வெள்ளத்திலும் சிக்கிக்கொண்டீர்களா? கொள்ளிடம் உடைப்பு எடுத்துக்கொண்டது என்று கேள்விப்பட்டேன். ஒருவேளை, அதனால்...? தனாதிபதி! பழுவூர் இளையராணி சௌக்கியமாயிருக்கிறார்கள் அல்லவா?" என்று ஜோதிடர் கேட்டதும், பழுவேட்டரையர் பயங்கரத் தொனியில் சிரித்தார்.

"இல்லை, இல்லை! பழுவூர் இளையராணிக்கு ஒன்றும் நேரவில்லை. அவள் கொள்ளிடத்தில் முழுகிச் செத்துப் போய்விடவில்லை. இதுவரையில் கடம்பூர் அரண்மனையில் சௌக்கியமாகவே இருக்க வேண்டும். ஆனால் அந்தச் சண்டாளி நாளை இந்த நேரம் வரையில் உயிரோடு இருப்பாளா என்று நான் சொல்ல முடியாது. ஜோதிடரே! நீர் சொல்ல முடியுமா? இராஜ குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாருடைய ஜாதகங்களும் உம்மிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மையா? நந்தினியின் ஜாதகம், நான் கிழ வயதில் அறிவு கெட்டு மணந்துகொண்ட மோகினிப் பேயின் ஜாதகம் இருக்கிறதா?"

ஜோதிடர் மேலும் பதறிப் போனவராய், "தனாதிபதி! இது என்ன சொல்கிறீர்கள்? என்னைச் சோதனை



செய்கிறீர்களா? இளைய ராணியின் ஜாதகம் என்னிடம் இல்லை. அவர் பிறந்த நாளும் வேளையும் தாங்கள் தெரிவித்தால் ஜாதகம் கணிக்க முடியும்" என்றார்.

"வேண்டாம்; வேண்டாம். நந்தினியின் ஜாதகத்தை நானே கணித்துக் கொள்வேன். அவளுடைய ஆயுளை நானே, என் கையினாலேயே, முடிவு கட்டத் தீர்மானித்துவிட்டேன். மற்றவர்களுடைய ஜாதகத்தைப் பற்றித் தெரிந்தால் சொல்லுங்கள். சக்கரவர்த்தியின் ஆயுர்ப்பாவம் எப்படியிருக்கிறது? அவருடைய குமாரர்கள் இருவருடைய ஆயுர்ப்பாவமும் எப்படியிருக்கிறது...? ஆகா! தலையை அசைக்கிறீர்! நீர் சொல்ல மாட்டீர். உம்மை நான் சோதிப்பதாகவே எண்ணுவீர். அல்லது உம்முடைய ஜோதிட சாஸ்திரம் எல்லாமே வெறும் புரட்டோ, என்னமோ, யார் கண்டது...? ஜோதிடரே! ஜாதகம் ஒரு புறம் இருக்கட்டும். சில காலமாக வானத்தில் தோன்றிக்கொண்டிருந்த தூமகேது இன்று காலையில் வானத்திலிருந்து பூமியில் விழுந்து மறைந்ததே, அது உமக்குத் தெரியுமா? தெரிந்தால், அதன் பொருள் என்ன என்று சொல்லக்கூடுமா? அது ஏதேனும் பெரிய உற்பாதத்தைக் குறிப்பிடுகிறதா? சக்கரவர்த்திக்கோ அவருடைய மக்களுக்கோ நேரப் போகிற விபத்தைக் குறிப்பிடுகிறதா? இதைக்கூட நீர் சொல்ல மறுப்பதாயிருந்தால் உம்முடைய ஜோதிடம் வெறும் புரட்டுத்தான்...!"

"தனாதிபதி! அப்படி முடிவு கட்ட வேண்டாம். இராஜாங்க சம்பந்தமான காரியங்களில் ஜோதிடம் பார்க்கக்கூடாது என்பது எங்கள் தொழிலின் பரம்பரை மரபு. இன்று காலையில் தூமகேது விழுந்ததை நான் கண்ணால் பார்க்கவில்லை. ஏதோ ஜகஜ்ஜோதியான வெளிச்சம் தோன்றியதைக் கண்டு ஆச்சரியப்பட்டு உடனே எழுந்து வெளியில் சென்று பார்த்தேன். சில நாளாக வால் குறுகி வந்து கொண்டிருந்த தூமகேதுவைக் காணவில்லை. தூமகேது தோன்றுவதும் விழுவதும் அரசு குலத்தினர்க்கு அதிர்ஷ்டத்தைக் குறிப்பிடுவதாகச் சொல்லுவார்கள். ஆனால் அது ஜோதிட சாஸ்திரத்தைச் சேர்ந்ததல்ல. ஜனங்களின் தொன்றுதொட்ட நம்பிக்கை, அதில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. இன்று காலையிலே கூடச் சக்கரவர்த்தி சௌக்கியம் என்று தெரிந்து கொண்டிருக்கிறேன்..."

"அது நமது அதிர்ஷ்டந்தான். இன்றிரவு சக்கரவர்த்திக்கு ஒன்றும் நேரிடாமலிருக்க வேண்டும். நாளை வரையிலே அவர் சுகமாயிருந்தால், அப்புறம் கவலையில்லை. பொன்னியின் செல்வனைப் பற்றி ஏதேனும் தெரியுமா...?"

"நேற்றிரவு வெகு நேரத்துக்குப் பிறகு இளவரசர் திருவாரூர் வந்து சேர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். தனாதிபதி! பதினாயிரம், லட்சம் மக்கள் அவரைச் சூழ்ந்து வந்து கொண்டிருக்கிறார்களாம். அவருடைய விருப்பத்துக்கு விரோதமாக அவரைத் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்களாம்..."


"ஆகா! அவர்கள் மட்டும் இளவரசரைத் தஞ்சையில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டால் எவ்வளவோ நன்றாயிருக்கும். ஆனால் முடியுமா? லட்சக்கணக்கானவர்கள் சூழ்ந்திருந்தாலும் யமனைத் தடுத்து நிறுத்த முடியுமா? சொல்லும், ஜோதிடரே, சொல்லும்! நீர் ஜோதிடம் சொல்லாவிட்டாலும் நான் சொல்லுகிறேன். சக்கரவர்த்திக்கும் அவருடைய குமாரர்கள் இருவருக்கும் இன்றைக்குப் பெரிய கண்டம் காத்திருக்கிறது. யமதூதன் அவர்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். சக்கரவர்த்தியின் யமன் பழுவூர் மாளிகையைச் சேர்ந்த பொக்கிஷ நிலவறையில் மறைந்திருக்கிறான். அருள்மொழியின் யமன் யானைப் பாகனுடைய அங்குசத்திலே ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தடுத்து நிறுத்திச் சக்கரவர்த்தியையும் பொன்னியின் செல்வனையும் காப்பாற்றுவது உம்முடைய பொறுப்பு. என் முத்திரை மோதிரத்தை எடுத்துக்கொண்டு உம் சீடன் தஞ்சைக்குப் போகட்டும். நீர் திருவாரூர் சென்று இளவரசருக்கு எச்சரிக்க வேண்டும். செய்வீரா! உடனே

புறப்படுவீரா?"

ஜோதிடர் தத்தளித்துப் போனார். பழு வேட்டரையருக்குச் சித்தப் பிரமை பிடித்துவிட்டதா என்ற சந்தேகம் அவர் மனத்தில் தோன்றியது. ஆனால் அப்படியும் நிச்சயமாகச் சொல்லுவதற் கில்லை. கூறுவதெல்லாம் அறிவுக்குப் பொருத்தமாகவே இருக்கிறது. ஆத்திரத்



துடனும் பரபரப்புடனும் பேசினாலும், உண்மையைச் சொல்லுகிறவராகவே தோன்றுகிறது. இந்தப் பேச்சையெல்லாம் இளையபிராட்டியும் கேட்டுக் கொண்டிருப்பார். அவருடைய கருத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். எப்படியாவது இந்தக் கிழவரை இங்கிருந்து உடனே அனுப்பி விட வேண்டும்.



"துர்க்கா பரமேசுவரியின் அருளினால் தங்களுடைய கட்டளையை என்னால் இயன்றவரை நிறைவேற்றி வைப்பேன்!"

இப்படி ஜோதிடர் கூறிய போது உள்ளேயிருந்து பெண்கள் அணியும் பாதச் சிலம்பின் ஒலி கேட்டது.

"ஆகா! துர்க்கா பரமேசுவரி பாதச் சதங்கையை ஒலித்து அருள் புரிகிறாள். இனி, நான் கடம்பூருக்குத் திரும்பலாம். இதோ புறப்படுகிறேன்..."

"தனாதிபதி! பசியாயிருக்கிறது என்றீர்களே? இந்த எளியவன் வீட்டில் அமுது செய்துவிட்டு..."

"வேண்டாம், வேண்டாம்! என் பசி தாகம் எல்லாம் பறந்து போய்விட்டன. நானும் கடம்பூருக்குப் பறந்து போக வேண்டும். ஆலயத்துக்கு அருகில் ரதம் ஒன்று நிற்கிறதே. அது யாருடையது, ஜோதிடரே! அதை நான் எடுத்துச் செல்லப்போகிறேன். கொள்ளிடக்கரை சென்றதும் திருப்பி அனுப்பி விடுகிறேன், ஓடத்தை மட்டும் எடுத்துக்கொண்டு...!"

"ஐயா! அந்த ரதம்... அந்த ரதம்... என் பேரில் கருணை கூர்ந்து அதை எடுத்துப் போக வேண்டாம்..."

"ஜோதிடரே! நீர் வீணாகக் கவலைப் படாதீர்.சோழ நாட்டின் பட்டத்து இளவரசருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக நான் அந்த ரதத்தை எடுத்துப்போகிறேன். துர்க்காதேவியே அதற்குச் சம்மதம் தருவாள். மறுபடியும் பாதச் சிலம்பை ஒலிக்கச் செய்து தேவி அருள் புரிந்தால், சம்மதம் கிடைத்ததாக அறிந்து கொள்கிறேன்... அதோ, கேளும்."

இவ்விதம் பெரிய பழுவேட்டரையர் கூறிக்கொண்டிருக்கையில், இளைய பிராட்டி குந்தவை பக்கத்து அறையின் கதவைத் திறந்துகொண்டு இலேசாகப் பாதச் சிலம்பு ஒலிக்க நடந்து வந்தாள்.

பெரிய பழுவேட்டரையர் அவளைப் பார்த்து வியப்படையவில்லை; திடுக்குறவும் இல்லை.

"தாயே! நான் ஊகித்தது சரிதான், அடுத்த அறையில் நீ இருக்க வேண்டும் என்று கருதினேன். உன் முகத்தைப் பார்த்துப் பேசுவதற்கு எனக்குத் தைரியம் இல்லை. ஆகையினாலேயே உன் காதில் விழட்டும் என்று இவ்வளவு சத்தம் போட்டுப் பேசினேன். ஜோதிடரிடம் நான் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டாய் அல்லவா?"

"ஐயா! மன்னிக்க வேண்டும். நான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். இந்த வீட்டில் தாங்கள் திடீரென்று பிரவேசித்தபோது, தாங்கள்தான் என்பதை என்னால் நிச்சயமாக அறிய முடியவில்லை. அதனால் தங்களுடைய பேச்சை ஒட்டுக் கேட்கும்படி நேர்ந்தது. மன்னிக்க வேண்டும்!" என்றாள் குந்தவை.

"தாயே! நான் உன்னை மன்னிப்பதற்கு ஒரு காரணமும் ஏற்படவில்லை. உன்னிடந்தான் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். மன்னிப்புக் கோரத் தகுதியுடையவனா என்பதே எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. இன்றிரவுக்குள் கடம்பூர் சென்று, பட்டத்து இளவரசருக்கு எதுவும் நேராமல் தடுத்தேனானால், உன்னிடம் மன்னிப்புக் கோருவதற்கு நான் தகுதி பெறுவேன். மூன்று வருஷங்களாக இந்தக் கிழவனின் கண்கள், மோகாந்தகாரத்தினால் மூடியிருந்தன. என் கண்களைத் திறப்பதற்கு நீ எவ்வளவோ பிரயத்தனம் செய்தாய். எத்தனையோ குறிப்புக்கள் சொன்னாய். ஒன்றும் என் காதில் ஏறவில்லை. என் சகோதரன் காலாந்தக கண்டனும் என் கண்களைத் திறக்க முயன்றான். அவன் முயற்சியும் பலிக்கவில்லை. நேற்றிரவு துர்க்கா பரமேசுவரியின் கருணையினால் பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் இருவரின் சம்பாஷணையை ஒட்டுக் கேட்க நேர்ந்தது. அதன் பலனாகவே உண்மையை அறிந்தேன். அந்தச் சண்டாளியை, சதிகாரியை, விஷநாகத்தை, என் அரண்மனையிலேயே வைத்திருந்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்தேன். அவள் என்னைக் குலத் துரோகியாக்கினாள்; இராஜத் துரோகியாக்கினாள். சோழ நாட்டுப் பொக்கிஷத்திலிருந்து பொருளை எடுத்துப் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களுக்குக் கொடுத்தாள். அந்தப் பாதகி நந்தினியை இன்று இரவு கழிவதற்குள் என் கையினாலேயே கொன்றாலொழிய என் நெஞ்சில்

கொழுந்துவிடும் நெருப்பு அணையாது..."

இவ்வாறு பழுவேட்டரையர் கூறிவந்தபோது அவர் சற்றும் எதிர்பாராத ஒரு காரியத்தைக் குந்தவை செய்தாள். திடீரென்று அவர் காலடியில் விழுந்து வணங்கினாள். பழுவேட்டரையர் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றபோது, இளையபிராட்டி எழுந்து நின்று, "ஐயா! எனக்கு ஒரு வரம் கொடுத்து அருள வேண்டும்!" என்றாள்.

"இளவரசி! என்னைச் சோதிக்கிறாய் போலத் தோன்றுகிறது. வேண்டாம்! என்னுடைய பாவச் செயல்கள் எவ்வளவு பயங்கரமானவை என்பதை நன்கு உணர்ந்துகொண்டேன். அவற்றுக்கு என்ன பிராயச்சித்தம் செய்துகொள்வது என்றுதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். அதற்கு முன்னால், இன்றைய கண்டத்திலிருந்து சோழ குலத்தைச் சேர்ந்த மூன்று பேரையும் தப்புவித்தாக வேண்டும். உன் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் இன்று தீங்கு ஒன்றும் நேரிடாமலிருக்க வேண்டும். அதற்கு எனக்கு உதவி செய். இன்று ஒருநாள் போகட்டும். நாளைக்கு நானே உன்னிடம் வந்து 'எனக்குத் தண்டனை என்ன? 'பிராயச்சித்தம் என்ன?'' என்று கேட்பேன்!" என்றார்.

"ஐயா! தங்களுக்குத் தண்டனை கொடுக்கவோ, பிராயச்சித்தம் சொல்லவோ, நான் முற்பட மாட்டேன். தாங்கள் என் பாட்டனாரின் ஸ்தானத்தில் உள்ளவர். என் தந்தையின் போற்றுதலுக்கு உரியவர். உண்மையாகவே, தங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன்..."

"அப்படியானால், உடனே கேள் அம்மா! வெறும் பேச்சுப் பேசுவதற்கு இப்பொழுது நேரமில்லை."

"கொடுப்பதாக வாக்கு அளியுங்கள்!"

"உனக்கும் உன் குடும்பத்துக்கும் நான் செய்துவிட்ட துரோகத்துக்கும் நான் கொடுக்கக்கூடியது எதுவும் ஈடாகாது. நீ எது கேட்டாலும் கொடுக்கிறேன். சீக்கிரம் கேள்!"

"இளைய ராணி நந்தினிதேவியைத் தாங்கள் ஒன்றும் செய்வதில்லை என்று வாக்கு அளிக்க வேண்டும். அதுதான் நான் கோரும் வரம்!"

"அம்மா! இது என்ன விளையாட்டா? விளையாட இதுதானா சமயம்? என் முதுமைப் பிராயத்தில் நான் புத்தி கெட்டுப் போனது உண்மைதான். அதற்காக என்னை முழுப் பைத்தியக்காரனாக்கி விடப் பார்க்கிறாயா? அந்தச் சதிகாரிக்கு நான் தக்க தண்டனை கொடுக்காவிட்டால், மற்றச் சதிகாரர்களை எப்படித் தண்டிக்க முடியும்? என் கையினால் அவளைக் கொன்று விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன். என் மனத்திலுள்ளதையெல்லாம் சொல்லிவிட்டு இந்தக் கிழவனை அவளால் கடைசி வரையில் ஏமாற்ற முடியவில்லையென்பதை எடுத்துக்காட்டிவிட்டு, அவளை என் வாளினாலேயே வெட்டிக்கொல்லுவேன். அதற்குக் குறைந்த தண்டனை எதுவும் அவளுக்குக் கொடுத்தால் நியாயம் செய்தவனாக மாட்டேன். அதற்குப் பிறகு, எனக்கு என்ன நியாயமான தண்டனை என்பதையும் யோசிப்பேன். போ! அம்மா! போ! உன் தந்தையையும் தம்பியையும் இன்று வரப் போகும் கண்டத்திலிருந்து காப்பாற்றுவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்...!"

"செய்கிறேன். ஐயா! ஆனால் என் சகோதரியைப் பாதுகாக்கவும் முயற்சி செய்ய வேண்டாமா? இளையராணி நந்தினி என் சகோதரி. அவருக்குத் தாங்கள் என்ன தீங்கு செய்தாலும், அதுவும் சோழ குலத்துக்குச் செய்த துரோகமாகும்!"

பழுவேட்டரையர் எல்லை கடந்த திகைப்பில் ஆழ்ந்தார். "நான் இன்னமும் கனவு கண்டு கொண்டிருக்கிறேனா?" என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன.

"இல்லை, இல்லை! தாங்கள் கனவு காணவில்லை. தாங்கள் காண்பதும் கேட்பதும் உண்மைதான். சிறிது யோசித்துப் பாருங்கள். பழைய சம்பவங்களை நினைத்துப் பாருங்கள். என் சகோதரன் அருள்மொழிவர்மனைக் காவேரியில் முழுகிப் போகாமல் ஒரு மாதரசி காப்பாற்றியது நினைவிருக்கிறதா? அவள்தான் இளையராணி நந்தினியின் தாயார். இளையராணியைத் தாங்கள் மணம் புரிந்து அரண்மனைக்கு அழைத்துக்

கொண்டு வந்த நாளில், என் தந்தை நினைவிழந்து விழுந்தது நினைவிருக்கிறதா? இளையராணியின் அன்னையைக் காண்பதாக நினைத்தே சக்கரவர்த்தி மூர்ச்சை அடைந்தார். அவள் இறந்து விட்டதாக வெகு காலம் எண்ணிக்கொண்டிருந்தார். ஆகையால் திடீரென்று இளையராணியைப் பார்த்ததும் ஞாபகத்தை இழந்தார்..."

பழுவேட்டரையருக்கு வேறு சில சம்பவங்களும் நினைவுக்கு வந்தன. நள்ளிரவில் நந்தினியை அவர் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் முன்னால் கொண்டு போய் நிறுத்தியதும், அவளைக் கண்டு சக்கரவர்த்தி அலறியதும், அதற்கு நந்தினி கற்பித்துக் கூறிய காரணங்களும் அவருக்கு அப்பொழுது நினைவு வந்தன.

"தாயே! நீ பேசுவது விளையாட்டு அல்ல என்பதை உணர்கிறேன். விதியின் விளையாட்டுத்தான் மிக விசித்திரமாயிருக்கிறது. இளையராணி உன் தமக்கை என்றால், ஆதித்த கரிகாலனுக்கும் அவள் சகோதரியாகிறாள். இந்த உறவு உனக்கு மட்டுந்தான் தெரியுமா? இன்னும் யார் யாருக்கெல்லாம் தெரியும்? சக்கரவர்த்திக்குத் தெரியுமா?"

"சக்கரவர்த்தி இரண்டு நாளைக்கு முன்பு வரையில் என்னுடைய பெரியன்னை இறந்துவிட்டதாகவே எண்ணிக் கொண்டிருந்தார். முந்தா நாள் அந்த மூதாட்டி நேரில் வந்தபோது கூட பேய் என்று எண்ணி விளக்கை விட்டு எறிந்தார். பிறகுதான் நம்பினார்..."

"அதைப் பற்றிக் கேட்கவில்லை, அம்மா! இளையராணி தன் சகோதரி என்பது கரிகாலனுக்குத் தெரியுமா?"

"அவனுக்கு இதற்குள் தெரிந்திருக்க வேண்டும். எனக்கு அவன் வாணர் குலத்து வீரர் ஒருவரிடம் ஓலை கொடுத்து அனுப்பியிருந்தான். அவரிடம் நான் சொல்லி அனுப்பினேன்..."

"ஆகா! வந்தியத்தேவன் வல்லவரையனைச் சொல்கிறாயாக்கும்!"

"ஆம், ஐயா!"

"அவன் கரிகாலனிடம் சொல்லியிருப்பான் என்று தோன்றவில்லை. சொல்லியிருந்தாலும் கரிகாலன் நம்பியிருக்க மாட்டான். எனக்கே நம்பிக்கை உண்டாக வில்லையே? அவன் எப்படி நம்புவான்? இளையராணிக்கு இச்செய்தி தெரிந்திருக்க முடியாது. தெரிந்திருந்தாலும் பயனில்லை. சதிகாரர்கள் வேறுவிதத்தில் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பார்ப்பார்கள். இன்றிரவு அதற்குக் கட்டாயம் முயற்சி செய்வார்கள். அம்மா! நீ தெரிவித்த செய்தி என்னுடைய பொறுப்பை இன்னும் பயங்கரமாக்குகிறது. இளையராணி நந்தினி சகோதரஹத்தி செய்யாமல் பாதுகாக்கும் கடமை எனக்கு ஏற்படுகிறது. நான் உடனே கடம்பூர் போகிறேன். நீங்கள் வந்த ரதத்தை எடுத்துக்கொண்டு போகிறேன். சக்கரவர்த்திக்கும் பொன்னியின் செல்வனுக்கும் ஒன்றும் நேராமல் பாதுகாப்பது உன்னுடைய பொறுப்பு!" என்றார்.

"ஐயா! தாங்கள் கவலைப்பட வேண்டாம். நான் இதோ தஞ்சைக்குப் புறப்படுகிறேன். பழையாறையிலிருந்து வாகனம் தருவித்துக்கொண்டு போகிறேன். பொன்னியின் செல்வனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை. அவன் பிறந்த நாளும் வேளையும் அவனைப் பாதுகாக்கும்!" என்றாள்.

"பெண்ணே! ஜோதிடத்தை நம்பி அஜாக்கிரதையாக இருந்து விடாதே! ஜோதிடர்கள் மனத்திற்குள் உண்மை தெரிந்திருந்தாலும் வெளிப்படையாகச் சொல்ல மாட்டார்கள்! இரண்டு பொருள் தொனிக்கும்படி ஏதேனும் கூறி வைப்பார்கள். காரியம் நடந்தபிறகு 'முன்னமே சொல்லவில்லையா?' என்பார்கள். ஜோதிடத்தை நம்பினாலும் ஜோதிடக் காரர்களை நம்ப வேண்டாம்!" என்று போகிற போக்கில் ஒரு சொல்லம்பைப் போட்டு விட்டுப் பழுவேட்டரையர் வெளியேறினார்.

அவர் அப்பால் சென்று சில விநாடி நேரத்துக்கெல்லாம் ஆழ்வார்க்கடியான் உள்ளே பிரவேசித்தான்.


"ஆம், ஆம்! தனாதிகாரி கூறியதை நான் ஆமோதிக்கிறேன். ஜோதிடத்தை நம்பினாலும் ஜோதிடக்காரர்களை நம்பவே கூடாது!" என்றான்.

(தொடரும்)

பில்ராத்

மருத்துவமனை

முதன்முதலில்
அதிநவீன லேசர் கருவியுடன்
லேப்ராஸ்கோப்பி
சிகிச்சை



வயிறு

சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும் ஓர் முழுமையான

தீர்வு

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- குடல் இறக்கம் (Hernia)
- பித்தப்பை கற்கள் (Gall Bladder Stones)
- கர்ப்பப்பை நோய்
- ஓவரியில் கட்டி எடுத்தல் (Ovarian Cyst Removal)
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

♦♦♦

அறுவை இல்லா

மூல வியாதி

சிகிச்சை

சிறப்பு சிகிச்சை :

❊ லேசர் சிகிச்சை
❊ கிரையோ சிகிச்சை
❊ கதிர் வீச்சு சிகிச்சை

B&H BILLROTH HOSPITAL
24 HOURS SERVICE

43, லட்சுமி டாக்கீஸ் சாலை, செனாய் நகர், சென்னை-600030. போன் : 6440020 / 6441777.

• மருத்துவமனையில் சோனங்கி



ஏது

சமீபத்தில் மும்பையைக் கலக்கிய நிகழ்ச்சிகள் இரண்டு– முதலாவது, வி சானல் ஒலிபரப்பிய 'V dares you' நிகழ்ச்சி. இது டீன் ஏஜர்களுக்கான பிரத்யேக விருந்து. அதில் ஒரு எபிஸோடில் இரண்டு இளம் பெண்கள், பாந்திராவிலுள்ள லிங்கிங் ரோடின் நடுவில் (பட்டப் பகலில், வெட்ட வெளிச்சத்தில்... இத்யாதிகளை சேர்த்துக் கொள்ளுங்கள்) 'ராக்' இசைக் கேற்ப ஸ்டிரிப் டீஸ் நடனம் ஆடியபடியே ஒவ்வொரு உடையாக வீசி எறிந்து ஜிம் பிரீஃப் (gym brief)களில் வந்து நின்றார்கள்... அதாவது, இதற்கு மேல் கழட்டினால் அரோகரா என்ற நிலையில்! இந்த வீர தீரச் செயலுக்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட பரிசு தலா ஆயிரத்து ஐநூறு!

இந்த நிகழ்ச்சி ஓரிரு முறை ஒளிபரப்பான போது யாரும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் ஜூன் நான்காம் தேதி ஒளிபரப்பான போது, குரு பெயர்ச்சியோ, சனி பெயர்ச்சியோ... ஏதோ ஒன்று... படக் கூடாதவர்கள் கண்ணில்பட்டு, விழக் கூடாதவர்கள் செவியில் விழுந்துவிட்டது! ஸீனியர் இன்ஸ்பெக்டர் ஷிரிஷ் இனாம்தாருக்கு, ஃபோன் மேல் ஃபோன்... இவ்வளவு ஆபாசமான நிகழ்ச்சியை எப்படி ஒளிபரப்பலாமென்று! உடனே இனாம்தார் அந்த காஸெட்டுகளை வரவழைத்து, காட்சிகளை தரிசித்து, 'ஆபாசம்தான்' என உறுதிப்படுத்திக் கொண்டபின், இந்நிகழ்ச்சியுடன் சம்பந்தப்பட்ட குழுவினர் அனைவர் மீதும் "Indecent Representation of Women's Act1986" செக்ஷன் 4,6,7 கீழும், "மும்பை போலீஸ் ஆக்ட்"படி செக்ஷன் 110, 117 கீழும் வழக்குப் பதிவு செய்தார். சிலரைக் கைது செய்து, உடனடியாக பெயிலில் வெளியே விட்டாகியும் விட்டது! வி சானல் உடனடியாக இந்த எபிஸோடின் ஒலி–ஒளி பரப்பை நிறுத்திவிட்டாலும், கேபிள் டீவிக்களெல்லாம் ஒரு நாள் முழுதும் தங்கள் செய்திகளில், "ஐயோடா சாமி... என்ன அக்கிரமம் நடக்குது பாருங்க" என்று புலம்பும் சாக்கில் இந்த ஸ்ட்ரிப்டீஸ் காட்சியை மாய்ந்து மாய்ந்து வெளிச்சமிட்டார்கள். எந்த அளவு கெட்டு விட்டோம்(?) என்பதை நிர்ணயிக்க, பொதுமக்களும் விழுந்து விழுந்து பார்த்தார்கள்.

உடனே நமது கற்புப் படையினரும் கலாசாரக் காவலர்களும் வீறு கொண்டெழுந்து ஆளாளுக்கு அறிக்கை விட்டனர். பழைய மந்திரியும், க.படைத் தளபதியுமான பிரமோத் நவால்கர், "நீச்சல் குளத்தில் பெண்கள் நீச்சலுடையில் தோன்றினால் ஆபாசமில்லை; பூனை நடை பயிலும் யுவதிகள் சொற்ப உடையணிந்திருந்தாலும் அதைக் கலைக் கண்ணோட்டத்தில் ரசிக்கலாம். ஆனால், நடுத்தெருவில் கண்ணுக்குப் புலப்படாத உடை அணிந்து ஒரு பெண் தோன்றினால், அவள் எண்ணங்கள் சரியில்லை என்று அர்த்தம். அவளைக் காண்பவர்கள் மனமும் கெடும் என்பதில் சந்தேகமில்லை" என்று ஆபாசத்திற்கு எல்லைகள் வகுத்திருக்கிறார்! சானல் 'வி'யின் தலைமைப் பி.ஆர்.ஓ. மாலதி புரானிக், "ஸ்ட்ரிப் செய்த இரண்டு பெண்களும், விடுமுறைக்கு மும்பை வந்த, புனா யுனிவர்ஸிடியில் பயிலும் அயல்நாட்டுப் பெண்கள்" என்ற தகவலை தெரிவித்து, பதைபதைத்த மனங்களை சற்றே ஆசுவாசப்படுத்தியுள்ளார்.

பிரபல மாடல் தினோ மோரியா "சுற்றியிருந்தவர்களே கவலைப்படாதபோது, டி.வியில் பார்த்தவர்கள் ஏன் குய்யோ முறையோ என்று அடித்துக் கொள்ள வேண்டும்?" என்கிறார் கூலாக! பிபாஷா பாஸுவுடன் இவர் மாடல் செய்த உள்ளாடை விளம்பரம், பிரச்னைக்குள்ளானதை நினைவுபடுத்தினால், "உள்ளாடை விளம்பரத்துக்கு, ஸூட்டும் கோட்டுமா போட்டுக் கொள்ள முடியும்?" என்கிறார் சூடாக.



காமசூத்ரா புகழ் பூஜா பேடியோ, "ஏன் இதை எல்லாம் ஒரு வேடிக்கையாக எடுத்துக் கொள்ள மாட்டேனென்கிறார்கள்? புடைவை கட்டும் பெண்களுக்கு, மினி ஸ்கர்ட்டுக்காரிகள் ஆபாசமாகத் தெரிவார்கள்; எனக்கென்னவோ இடுப்பைக் காட்டிக் கொண்டு புடைவை உடுத்தியிருக்கும் பெண் தான் அதிக கவர்ச்சி காட்டுவதாகத் தோன்றுகிறது" என்கிறார்.



ஆபாசம்?

மும்பை சென்ட்ரலிலுள்ள மராத்தா மந்திர் சினிமா தியேட்டருக்கு எதிரிலுள்ள, படு பிஸியான ட்ராஃபிக் ஜங்ஷன்! காலை 9.40 மணி அளவில் வித்யா பிரபுதேசாய் என்ற ரிசர்வ் பாங்க் டைப்பிஸ்டை, ஸோலங்கி என்ற டெய்லர், மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திவிட்டான்! காரணம்..? அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புதல் தெரிவிக்கவில்லையாம்! அந்தப் பெண் உதவி கோரிக் கதறியும், ஒருவர் கூட உதவ முன்வரவில்லை. இருபது நிமிடங்கள் கழித்து, போலீஸ் வந்து, அருகிலுள்ள நாயர் ஹாஸ்பிடலுக்கும், பிறகு கஸ்தூரிபா ஹாஸ்பிடலுக்குமாக 95 சதவீத தீக்காயங்களுடன் அவளை எடுத்துச் சென்று அல்லாடுவதற்குள் அவள் கதை முடிந்தே விட்டது!

ஸோலங்கி, வித்யாவைக் கொளுத்திய கையுடன், விஷம் குடித்து, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதும், பிசாசாதீனமாக (பின் இவனை எல்லாம் தெய்வாதீனமாக வாக் காப்பாற்றுவார்கள்?) தடுக்கப்பட்டு, அதே நாயர் ஹாஸ்பிடலில் சிகிச்சை பெற்று, கெட்டபடியாக(எதற்கு நல்லபடியாக என்று எழுத வேண்டும்?) தேறிவருவதும் கிளைக்கதை.

இதிலென்ன அதிசயமிருக்கிறது? 1990ல், 10வது பரீட்சை எழுதிக் கொண்டிருந்த ரிங்கு பாட்டீலில் துவங்கி, இன்றுவரை எத்தனை பெண்கள் மும்பையில் தீக்கிரையாகியிருக்கிறார்கள் என்றுதானே நினைக்கிறீர்கள்?

மற்றவர்கள் எல்லோரும் இளம் பெண்கள், 17ல் தொடங்கி, 22 வயதுக்குட்பட்டவர்கள்; இளம் காதலர்களால், காதல் தோல்வியைத் தாங்காது எரிக்கப்பட்டவர்கள்.

ஆனால்... ஸோலங்கியின் வயது 55! வித்யாவின் வயது 41! திருமணமே வேண்டாமென்று, தனியே தன் ஆர்.பி.ஐ. குவார்டர்ஸில் குடியிருந்த வித்யா, நோய்வாய்ப்பட்டிருந்த அப்பாவுக்கு உதவி செய்ய அவரது சார்னி ரோட் வீட்டிற்கு குடி பெயர, அங்கே அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த இந்தப் பேரிளைஞருக்கு, திடீர் காதல் அரும்பிவிட்டது. தன் ஒருதலைக் காதலை பிரகடனம் செய்யவும், வித்யா மறுக்கவும், அதனால் கோபமுற்று அவரைத் தீர்த்துக் கட்டியதும்... ஆபாசமான காதல் கதையாகி விட்டது.

— ஜெயஸ்ரீ ராஜ்



• எதிர்ப்பு ஊர்வலம்...

இளைஞர்கள், முதியோர், யுவதிகள் என்று இருநூறு பேர் மெரீனா பீச்சில் தொண்டை வலிக்க கோஷம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''கொல்லாதே! கொல்லாதே! - பறவைகளைக் கொல்லாதே!'' ''வேண்டாம்! வேண்டாம்! - நெருப்புக் கோழி பண்ணை வேண்டாம்'' என்று.

ஏன் இந்தப் போராட்டம்? பியூட்டி வித்தவுட் க்ருவல்டி அமைப்பின் சென்னை மைய இயக்குனர் டாக்டர் கீதா ஜெயக்குமாரிடம் கேட்டோம். ''நெருப்புக் கோழிகள் தென் ஆப்ரிக்க பாலைவனங்களில் வசிக்கும் மிகப் பெரிய பறவைகள். எழுபத்தைந்து ஆண்டுகள் உயிர் வாழும் இந்தப் பறவைகள் வேகமாக ஓட முடியுமே தவிர பறக்க முடியாது. சுதந்திரமாக வெட்டவெளிகளில் பறந்து திரியும், இவற்றைப் பண்ணைகளில் அடைத்து, வளர்த்து அவற்றின் மாமிசத்திற்காகவும், இறகுகளுக்காகவும் மூன்றாம் வருட முடிவில் கொன்று விடுகிறார்கள். குறிப்பாக அழகுச் சாதனங்கள், அலங்காரப் பொருட்கள் தயாரிக்க இவற்றின் இறகுகளை பிடுங்குகிறார்கள். அதுவும் ஒரு குழந்தையைப்போல இருக்கும் நெருப்பு கோழிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து, பாதி உணர்வு இருக்கும்போதே



ஸ்...காங்கோ

உயிருடன், துடிக்க துடிக்க இறகுகளைப் பிய்த்து எடுக்கிறார்கள். அன்னியச் செலாவணி கிடைக்கும் என்ற ஆசையில் இப்போது தமிழக அரசே நெருப்புக்கோழி வளர்ப்பில் அக்கறை காட்டத் தொடங்கிவிட்டது. நெருப்புக் கோழி குஞ்சுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இது காலப் போக்கில் ஊர்தோறும் இருக்கும் பிராய்லர் கோழிப் பண்ணைகள் போல பெருகிவிடும். கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் நெருப்புக் கோழிப் பண்ணைகளை ஏற்கெனவே துரத்தி அடித்து விட்டார்கள். நாம் அனுமதித்தால் பயங்கர ஆபத்துகளைச் சந்திக்க வேண்டி வரும்" என்றார்.

அப்படி என்ன ஆபத்து?

"நெருப்பு கோழி வளர்ப்பினால் காங்கோ விஷக் காய்ச்சல் விரைவாகப் பரவும். இந்த காங்கோ வைரஸ் நெருப்புக் கோழிகளிடம் உள்ளது. இங்கு பண்ணைகள் வந்தால் காங்கோ காய்ச்சல் தொற்று ஏற்படுவது



• கீதா ஜெயக்குமார்

வைரஸ்!

உறுதி. இந்த வைரஸ் தாக்கிய ஏழாம் நாள் உயிரிழப்பு ஏற்படும். இது தவிர காச நோய், ஆஸ்த்மா, இங்கிலாந்தில் நெருப்புக் கோழி மூலம் ஏற்பட்டு, பல உயிர்களைப் பலி கொண்ட வெறி மாட்டு நோயும்கூட இங்கு ஏற்படலாம். இதை விடக் கொடுமை எழுபத்தைந்து வருடம் வாழக்கூடிய இந்தப் பறவைகளை மூன்று மாதக் குழந்தையைக் கொல்வதுபோல, மூன்றே வருடத்தில் கொல்வதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது" என்று கொதித்தார்.

சில இளம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கடற்கரையில் சவாரி செய்து கொண்டிருந்த ஒரு தாய் குதிரையையும், அதன் குட்டியையும் சொந்தக்காரர்களிடமிருந்து பிடித்துக் கொண்டு வந்துவிட்டனர். முதுகிலும், விலாப்புறங்களிலும் பயங்கர காயங்களோடு அந்தக் குதிரைகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தது கண்டு, நெருப்புக் கோழிக்காகப் போராட வந்த இடத்தில் மற்றொரு குதிரை ஆதரவு போராட்டத்தில் குதித்து விட்டார்கள். மெரீனா கடற் கரையில் சவாரிக்குப் பயன்படுத்தப்படும் எல்லா குதிரைகளும் இப்படிக் கொடூர காயங்களோடு வேலை வாங்கப்படுவதாக பொதுமக்கள் கூறியதும் மேலும் சில இளைஞர்கள் குதிரைகளை மீட்கப் பாய்ந்தோடினர். அதற்குள் குதிரைச் சொந்தக்காரர்களுக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் வாக்குவாதம் வர, ஒரு போலீஸ்படையே அங்கே கூடி சமாதானத்தில் ஈடுபட்டது. ஆனாலும் குதிரைக்காரர்களின் மீது வழக்குத் தொடுப்போம். குதிரைகளுக்குச் சிகிச்சை முடியும் வரை அவற்றைத் தர மாட்டோம் என்று கடைசி வரை மறுத்து விட்டனர்.

யார் ஒருவர் பிராணிகளை மாமிசத்திற்காகக் கொல்ல அனுமதி அளிக்கின்றனரோ, அதைக் கொல்பவர் யாரோ, அதை விற்கவோ வாங்கவோ சொல்பவரோ, அதைச் சமைப்பவரும், பரிமாறுபவரும், உண்பவரும் யாரோ இவர்கள் எல்லோருமே கொலையாளிகள் என்கிறது மனு...


இந்தியத் தண்டனைச் சட்டம் என்ன சொல்கிறது?

- லியோ

படங்கள்: வெங்கடேஷ்

முதல்வரின் தொகுதியான சேப்பாக்கத்தில் தி.மு.க. பிரமுகர்களிடையே நடக்கும் மோதல், கட்சிக்கு ஏகப்பட்ட தலைவலியைக் கொடுத்திருக்கிறது. இந்த நிலை நீடித்தால் வரும் தேர்தலில் தலைவர் போட்டியிடும் போது ஏதாவது பின்னடைவு உண்டாகுமே' என்று கவலைப்படத் துவங்கியிருக்கிறார்கள் மேலிடப் பிரமுகர்கள்!

உட்கட்சி தேர்தல் நடந்தால், கட்சியில் ஜனநாயகம் தழைத்தோங்கும் என்பது பொதுவான விதி. ஆனால் தி.மு.க.வில் நடந்த உட்கட்சி தேர்தல் விசித்திரமான ஒன்று. 'யார் வர வேண்டும்' என்பதை தலைமை அல்லது தளபதி வட்டாரம் தீர்மானிக்கும்; அந்தக்



அந்தக் கடைக்கண் பார்வையைப் பெற்று விட்டவரை எதிர்த்து யாரும் போட்டியிடக் கூடாது. மீறினால் அவ்வளவுதான்!

முதல்வர் தொகுதியில்

கடைக்கண் பார்வையைப் பெற்று விட்டவரை எதிர்த்து யாரும் போட்டியிடக் கூடாது. மீறினால் அவ்வளவு தான்! எழுதப்படாத இந்த நடைமுறை விதியின் அடிப்படையில் சேப்பாக்கம் பகுதி அமைப்பாளராக சுரேஷ்குமார் என்பவர் அடையாளம் காட்டப்பட்டார். இவர் மதிமுகவுக்குச் சென்று வந்தவராம். ஆனால் தொண்டர்களின் ஆதரவு இருப்பதாகச் சொல்லப்படும் எல். ராஜேந்திரன் என்பவருக்குத் தொகுதி செயலாளராக போட்டியிட ஆசை இருந்தது. தலைமை ஆதரவில்லாததால் ராஜேந்திரன் கைவிடப்பட்டார். சுரேஷ்குமார் பகுதி செயலாளரானார். அதன் பிறகுதான் மோதல்!

எல். ராஜேந்திரன் அணியினர் நடத்தும் கூட்டங்களைப் பற்றிய போஸ்டர்களில் பகுதிச் செயலாளர் சுரேஷ்குமார் பெயர் புறக்கணிக்கப்பட்டது அல்லது முக்கியத்துவம் இல்லாத வகையில் போடப்பட்டது. ராஜேந்திரனுக்கு முன்னாள் பகுதிச் செயலாளர் ஜெகதீசனின் ஆதரவு இருந்தது. ராஜேந்திரனின்

நடவடிக்கையினால் புண்பட்டுப் போன சுரேஷ்குமார் தலைமையிடமும், தளபதியிடமும் புகார்ப் பட்டியல் வாசித்து, ராஜேந்திரனை 'கட்டுப்படுத்தி' வைக்கச் சொன்னார்.

ஆனால் ராஜேந்திரன் அணி, தொடர்ந்து சுரேஷ்குமாரை வெறுப்பேற்றி வந்தது. இந்த நிலையில் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சியின் போது ஸ்டாலின் தொகுதிக்கு வந்தார். ராஜேந்திரன் அணி நடத்திய விழா அது. காரிலிருந்து ஸ்டாலினும், அவர் பின்னால் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பரிதியும் இறங்கினார்கள். குனிந்து பவ்யமாக ஸ்டாலினை வரவேற்றார் ராஜேந்திரன். "உன் பெயரைப் பெரிதாகப் போட்டுக் கொண்டு பகுதிச் செயலாளர் பெயரைச் சின்னதாகப் போட்டது ஏன்? என்று அவரைக் கோபத்துடன் கேட்டார் ஸ்டாலின்.



ராஜேந்திரன் ஏதோ சமாதானம் சொல்லப் போக, 'ஒன்றும் பேச வேண்டாம்' என்று வெறுப்புடன் சொல்லி விட்டு மேடைக்குச் சென்றார் ஸ்டாலின். சுரேஷ்குமாருக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பதாக காட்டிக் கொண்டவர் அவர். இதனால் மிகக் கடுப்புக்குள்ளானது ராஜேந்திரன் அணி.

இந்த நிகழ்ச்சிக்குச் சில நாட்கள் பின்னர், கலைவாணர் அரங்கத்தில் கலைஞரின் புத்தக வெளியீட்டு விழா ஒன்று

ஒரு மோதல்!

நடந்தது. இந்த விழாவில் சுரேஷ்குமார் அணியினருக்கும் ராஜேந்திரன் அணியினருக்கும், அரங்கத்தின் வெளியே கைகலப்பே நடந்தது! போலீஸ் தலையிட்டு அமைதி உண்டாக்கியது. இப்போது கழகம் சேப்பாக்கத்தில் இரண்டாகப் பிளந்து செயல்பட்டு வருகிறது.

"முதல்வர் தொகுதியிலேயே கட்சி இப்படியிருந்தால் எப்படி?" என்று மூத்த உடன்பிறப்பு ஒருவரைக் கேட்டபோது, "கட்சி உயிர்த் துடிப்போட இருப்பதற்கு இதெல்லாம் அடையாளம் சார். தலைவர் தொகுதியாயிற்றே... தேர்தலின் போது சமாதானக் கொடி ஏற்றப்பட்டு விடும்" என்றார் நம்பிக்கையோடு!

— கௌசி



"இலங்கை விஷயத்தில நம் கட்சியின் நிலை என்ன தலைவரே?"

"தெளிவாக்கேளு! முந்தாநாள் இருந்த நிலையைக் கேட்கறியா... நேற்றைய நிலையைக் கேட்கறியா... அல்லது இன்றைய நிலையையா?"

– உ. ராஜாஜி

"எவ்வளவு துணிச்சல்...!"

"ஏன்?"

"திருட்டு வி.சி.டி. வெளியீட்டு விழாவுக்கு அழைப்பிதழ் அனுப்பியிருக்காங்க!"

– எஸ். மோகன்



4

"எப்போ கொடுத்தான்?" என்றான் பார்த்திபன்.

பிரகாஷ், "நேற்று" என்றான்.

அன்புள்ள பார்த்திபன்,

உங்களுக்கு ரொம்ப நாளாவே 'lr' எழுத வேண்டும் என நினைத்துக் கொண்டிருந் தேன். உங்கள் வீடும் தோட்டமும் ஆற்றோர மாக ரொம்பவும் அழகான



தென்று பிர காஷ் சொல்லி யிருக்கிறார். உங்கள் வீட்டுக்கெல்லாம் என்னைக் கூப்பிட மாட்டீர்களா? உங்கள் அம்மாவை அறிமுகப்படுத்த மாட்டீர்களா?

Your lovingly,
Anitha.

மேற்பகுதியில் கடிதம் எழுதப்பட்ட தாளின் கீழ்ப்பகுதியில் ஸ்பைடர் லில்லிப் பூவின் படம் வரையப்பட்டிருந்தது. பார்த்தி பனுக்கு அழுகையின் தந்தியிலிருந்து மாறி வேறெதையும் கண்ட முடியவில்லை. தொடர்ந்து அழவே செய்யலாம் என நினைத்த போதும் கண்ணீர்ச் சுரப்பியோ செயல்பாட்டை நிறுத்தியிருந்தது. காற்றும் வெயிலும் நின்று போனது மாதிரி தோன்றி குகை வழியில் நடந்து கொண்டிருப்பதாய் சில கணங்கள் உணர்ந்தான்.

அந்தக் கணங்களே வாரக் கணக்கில் நீடித்ததாயும் உணர்வு மேலிட்டது.

வேப்பமரத்தின் மேல் இரண்டு காக்கைகள் இடையிறாது கரைந்தன. இந்த அழுகையின் போது கடிதம் வந்தடைந்திருக்க வேண்டியதில்லை. உலகம் மய மயப்பானது. குகைப் பாதையில் வெளிச்சம் துலங்க, அந்தகனின் கைத்தடி போலப் பிரகாஷின் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டான். பார்த்திபனின் பரிதவிப்பு பிரகாஷுக்கு வியப்பாகவும் வியப்பில்லா மலும் இருந்தது. புன்னகைத்தான். பார்த்திபனுக்கோ உதடு கோணியிருந் தது.

குகையிலிருந்து வெளியேறிய வெளிச்சத் தருணத்தில் தனது வர்ணத்தில் ஸ்பைடர் லில்லி பூத்து விட்டது.

ஸ்பைடர் லில்லி பற்றிய வாழ்க்கைக் குறிப்பு அலாதியானது. அதன் கிழங்கு விதை பீட்ருட் வடிவத்தில் பூந்தொட்டியின்

மண்ணில் புதைந்து கிடக்கும். ஏப்ரல், மே யில் நல்ல கோடையில் வளரும். கல் வாழையைப் போன்ற தோற்றமுடைய அதன் செடியில் சிவப்பென்று சொல்லத் தக்க நிறத்தில் குண்டூசி நீட்டல்களுடன் அது பூக்கும். பள்ளி, கல்லூரிக்கு வரவிருக் கும் மாணாக்கரை உத்தேசித்து வளர்ந்தது போலிருந்தது அதன் பூக்காலம். கொஞ்ச நாட்கள் விரிந்து விகசித்து பின் வாடும். பூ வாடச் செடி வாடும். வாடும் செடி சருகாகிக் காற்றில் போகும். பின் ஆண்டு முழுக்க அஸ்தமித்து அமிழ்ந்திருக்கும் அதன் பீட்ரூட் வடிவக் கிழங்கு மண்ணுக்குள். ஸ்பைடர் லில்லி பூத்ததும் காய்ந்ததும் பற்றிக் கவலையின்றி ஆண்டு முழுக்க வந்து போவர் மாணாக்கர். லில்லியோ மீண்டும் பூக்கும், அடுத்த கல்வி ஆண்டிலும்.

"தேங்க்ஸ்டா" என்றான் பார்த்திபன்.



"எதுக்கு, லெட்டரைக் கொண்ர்ந்து கொடுத்ததுக்கா?"

"இல்ல. நீதானே அனிதாவை அறிமுகப் படுத்தினே?"

க.சீ. சிவகுமார்

அனிதாவின் அப்பா கரூர் வைஸ்யா வங்கியின் மேலாளராக சின்னதாராபுரம் வந்திருந்தார். குடும்பத்தை இங்கே கூட்டி வருவதற்கு முன் வெள்ளகோயிலிலிருந்து ஈ.டி. பஸ்ஸிலோ வி–4 லோ வந்து கொண்டி ருந்தார். பிரகாஷின் அப்பாதான் அவருக்கு வீடு பார்த்துக் கொடுத்தது. குடும்பப் பெண் கள் ஒருநாள் காரில் வந்தனர். குடும்பப் பொருட்கள் அதே நாள் டெம்போவில் வந்தன. 'சுவாமி விவேகானந்தா' என்றெழு தப்பட்ட டெம்போவின் ஓனரும் டிரை வருமான பெரியசாமியும் பிரகாஷும்தான் பொருட்களை இறக்குவதில் பெரும்

சிர(ம)மேற் கொண்டனர்.

மேனேஜரின் மகளான அனிதா, பிரகாஷுக்கு கிளாஸ் மேட்டாகவும் வந்து ஓரிரு நாளில் பள்ளியில் சேர்ந்தாள். மாணவியரின் எண்ணிக்கையில் பதின்மூன்றோடு ஒன்றாக பதினான்காவதாக ஆனாள்.

வங்கி மேலாளர் நடேசனும் அவரது மனைவி அம்சவல்லியும் மரியாதைக்குரிய நண்பரின் மகனான பிரகாஷை வீட்டுக்கு அழைத்து பஜ்ஜி, போண்டா, காப்பி உணவு வகைகளால் திணறடித்துக் கொண்டிருந்தார்கள்.

மலைச்சியூர் ரோட்டிலிருக்கும் குணா டீ ஸ்டாலில் ஒரு மத்தியானம் டீ குடித்து விட்டு வரும் போது பார்த்திபன் பிரகாஷிடம்,



''நேத்து நடந்த பஸ் எரிப்புக்கு நம்ம எதிர்வீட்டு சாரதிதான் ஐ விட்னஸாம்!''

''அப்ப 'பார்த்த'சாரதின்னு சொல்லுங்க!''

– சேலம் கமலா

"அனிதா... அழகாயிருக்கா இல்லடா'' என்றான். பிரகாஷ், "அப்படியா" என்றதுக்கு மேல் எதுவும் பேசவில்லை.

அன்றைக்குச் சாயங்காலம் பிரகாஷ் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு, "ஏறு சைக்கிளில்'' என்றான் பார்த்திபனிடம். சைக்கிளை பள்ளியிலிருந்து நேராக அனிதாவின் வீட்டுக்கு விட்டான்.

"இறங்கு!"

அத்தனை நாள் தூர இருந்து ரசித்த வாறிருந்த பனிப்பிரதேசம் போல இருந்தது அனிதாவின் வீடு. ''உள்ளே வா'' என முதுகில் நெட்டினான் பிரகாஷ்.

அம்சவல்லி – "இது யாருப்பா? கிளாஸ் மேட்டா?" என்றாள்.

"ஆமாங்க."

"பேரென்ன?"

"பார்த்திபன்."

"வீடு எங்கேப்பா?"

"ஒத்த மாந்துறை ஆத்துப் பாலம் தாண்டினதும் வடக்குமின்னா கீழே இறங்கினா முன்னாடியே தோட்டத்துல வீடு."

அறிமுகம் முடிந்த நேரத்திலேயே சூடு பறக்கும் பஜ்ஜியுடன் அம்சவல்லி வந்தாள். அந்த அம்மா பன்னிரண்டு-ஏ முழுக்க பஜ்ஜி போட்டுத் தரும் திளைப்பிலும் தயாரிப்பிலும்தான் எப்போதும் இருந்தார். உள்ளே நுழைந்த அனிதா, "ஐ... பார்த்தி!" என்றாள். பார்த்திபன் அவளது அழைப்பில் கடைசி இரண்டு எழுத்துக்களை இழந்தது குறித்து மகிழ்ந்தான். அனிதாவின் அழைப்பில் 'நல்வரவு' இருந்தது.

பிளந்த பஜ்ஜியிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது. தீயின் புகைக்கும் தின்பண்டத்தின் புகைக்கும் என்ன வேறுபாடு?

தெரு பலகாரக் கடையின் பெஞ்சில் பார்த்திபனும் பிரகாஷும் அமர்ந்திருந்தனர். தேனீரிலிருந்து பறந்த ஆவி காற்றின் போக்குத் திசை வெளியில் பறந்து நீர்மையடைந்து காணாததானது. தேநீரைப் பருகும் திராணியும் அற்றவன் போல பார்த்திபன் காணப்பட்டான். அந்தத் தேனீர்ப் புகையே சாம்பிராணிப் புகை போல மணந்து கொண்டுமிருக்கலாம் அவனுக்கு. பிரகாஷ், "குடிடா!" என்றான்.

தெரு பலகாரக் கடையின் எதிரிலுள்ள டி.டி.ஸ்கூலிலிருந்து பெண்களும் ஆசிரியைகளும் வெளிப்பட்டனர். மதிய உணவு இடைவேளை. முழுக்கவும் பெண்களுக்கான பள்ளி அது. +2 வரையான கல்வி தவிர ஆங்கிலப் பயிற்சியும் இருந்ததால் 'டீச்சர் டிரெயினிங் ஸ்கூல்' என்று டி.டி.ஸ்கூல் என வழங்கப்படுகிறது. அழகிகளும் பேரழகிகளும் அங்கு படித்து வந்தார்கள்.

வளாகத்திலிருந்து வெளிவருகிறவர்கள் மீது ஆர்வமானான். பார்த்திபன் 'தபோவன'ப் பள்ளியில் பயின்றவன் போல அமர்ந்திருந்தான். இந்தத் தேனீர் முடிவில் தெய்வம் வந்து விடும். எல்லாம் சித்தித்து விடும்.

"டேய், ஃபர்ஸ்ட் இயர் புஷ்பலதா."

"ப்ச்" என்றான் பார்த்திபன். அடிவயிறில்

வெற்றிடம் தோன்றிக் கனல் ஆரம்பித்தது. ஏகம் அனேகமாய் அனிதா கனிந்து விட்டிருந்தாள்.

"காதலாடா?" என்றான் பிரகாஷ்.

"தெரியலைடா."

பிரகாஷ் அந்தக் கடிதத்தைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். டீ மேஜையில் தம்ளர்களை வைத்து விட்டு இருவரும் நடந்தனர்.

"தம்பிகளா? டீக்கு காசு!" பிரகாஷ் காசை எடுத்துத் தந்து விட்டு பார்த்திபனுடன் இணைந்து வடக்கு நோக்கி நடக்க ஆரம்பித்தான். காசு தர மறந்த நிகழ்ச்சி குறித்து சிரித்துக் கொண்டு வந்தான் பிரகாஷ் கொஞ்ச தூரம்.

"நாம ஏன் இப்ப வடக்கே போறோம். ஸ்கூலுக்கா?"

"தெரியலே" என்றான் பார்த்திபன். அவர்கள் யுவஜீவன் இல்லத்துக்கு அருகில் வந்த போது தங்கள் பள்ளியிலிருந்து மாணவிகள் கிளம்பி வருவதைப் பார்த்தனர். அனிதா வருவாள் என்றதும் படபடப்பு அதிகமானது பார்த்திபனுக்கு. வெற்றிடமாய்க் கனன்று கொண்டிருந்த பரபரப்புக்கு இப்போது வடிவம் கிடைத்து விட்டது. இதயத்தின் வடிவமே அது.

ஓரமாய் மரநிழல் பார்த்து ஒதுங்கி நின்றனர் பார்த்திபனும் பிரகாஷும். இந்தக் கடிதத்துக்கும் முன்பே இருந்தது அனிதாதான். கடிதத்துக்கும் முன்பு இருந்த உறவுக்கு என்ன பெயர்? கடிதம் வந்ததால் காதல் வந்ததா? அனிதாவுக்குக் காதல் வந்ததால் கடிதம் வந்ததா? கடிதம்தான் காதலா? – முதலில் அது காதல்தானா? ஊருக்கு வருகிறேன் என்பதில் என்ன காதல் இருக்கிறது? அதை நேரடியாகக் கேட்காமல் கடிதமாய்க் கேட்டதால் காதல் பூடகம் பூணுகிறது. யுவர்ஸ் லவிங்லி – எதற்கு.

லவிங்லி ஏன் ஆங்கிலத்தில் ஸ்நேகம், காதல், பந்து மித்ரப் பல அர்த்தத்தில் ஒலிக்கிறது. பூவின் படம் வரையப்பட்ட ஒரு காகிதத்திலோ தீ எரிந்து கொண்டிருக்கிறது. மாணவிகள் பிரகாஷையும் பார்த்திபனையும் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பார்த்திபன் நிற்பதை அனிதா ஒருகணம் அவதானித்தாள். கண்ணோடு கண் பார்த்து விட பார்த்திபன் தவித்தபோது அவளோ நேர்ப் பார்வையில் சென்றாள். அழகு மிகுந்த ராஜகுமாரி வேகமாகப் போகிறாள். கழுத்தில் கிடக்கும் சங்கிலி தன்னை விரலில் பிணைத்துக் கொள்கிறாள். ஆட்காட்டி விரலில் சுற்றிய சங்கிலியை தளர்த்தி விட்டுச் சுண்டிக் கொண்டு சென்றாள். கையின் அசைவே ஒரு நாட்டியம் போலிருக்கிறது அனிதாவுக்கு. கழுத்தில் ஓடிய சிறு வரிகளில் பார்த்தியின் உயிர் ஓர் எறும்பு போலத் தேய்ந்து நசுங்கியது. அனிதா போய் விட்டாள்.

பார்த்திபன் அசலாகவே காய்ச்சல் கண்டவன் போலிருந்தான். சனியும் பிடித்தாற்போல தொண்டை வேறு வறண்டிருந்தது. மூட்டு மூட்டுகளில் முறிந்து எலும்பும் சதையுமான குப்பலாக விழுந்தது போல உணர்ந்தான். போகிற போக்கில் அவள் ஒரு



"உன் மருமக என்ன பிரச்னை பண்றா?"

"அவளுக்கு 'சுயாட்சி' வேணுமாம்!"

– தஞ்சை ஆதி

பார்வையும் பார்த்து விட்டுப் போயிருந்தால் அந்தக் குவியல் தீயும் பற்றி எரிந்திருக்குமாயிருக்கும். தீப்பற்றச் செய்ய இடையில் ஒரு குவி ஆடி அதன் கதிர்த் திசையில்.

மனம் எதை நோக்கிக் குவிகிறது? காதலை நோக்கியா? எந்தப் பெண்ணுடனும் மீதான காதலா? அனிதா மீதான காதலா?

கனிமொழியும் கவிதாவும் கடிதம் தந்திருந்தாலும் அவன் ஆட்படுவது இதே போன்ற உணர்ச்சிகளுக்குத்தானா? அவர்கள் மீது காதல் வந்திருக்குமா? இந்தக் கணம் அனிதா மீது மையல் தோன்றி விட்டதா என்ன?

இரண்டு நெற்றிப் பொட்டுகளுக்கிடையில் ஒரு ஊது குழலைச் செருகி வைத்

தது போலத் தோன்றி காற்றுப்பாய ஆரம்பித்தது. தலை வலித்தது. அவள் தன்னைக் காதலிக்கிறாள் – ஒரு பெண் தன்னைக் காதலிக்கிறாள் என நம்பும்போது ஊது குழலில் பக்கத் துளைகள் விழுந்து புல்லாங்குழலாகிறது.

வேணுகானமெனப் பீறிடும் இசை ஊற்றென குமிழியிட்டு அமிழ்தக் குழம்பு கசிந்து மூளையில் மேலாகப் படலமெனப் படர்கிறது. செயல் மறந்து காற்று வெளியிடையே அனிதாவை எண்ணிக் களித்தான்.

''சரி வா... ஸ்கூல் கிரௌண்டுக்காச்சும் போவோம்'' என்றான் பிரகாஷ். மைதானத்தில் கற்கள் தனிமை வெயிலில் இருந்தன. மரங்கள் காற்று வெம்மையில் சூழப்பட்டிருந்தன. ஒரு பூவரசு மரத்தின் கீழ் மட்டும் முப்பது வயசுக்காரன் ஒருவன் அமர்ந்திருந்தான். அதே மரத்தடிக்கு இருவரும் சென்றனர். இவர்களைப் பார்த்த அவன் உற்சாகமாக,

''நாங்க செய்யாததை நீங்க செஞ்சுட்டீங்கப்பா'' என்றான்.

''என்ன செஞ்சோம்?''

''ஸ்டிரைக்.''

''நீங்க பழைய ஸ்டூடண்டா?''

''ஆமா. ஓல்ட் ஸ்டூடண்ட். எண்பத்தெட்டுல இங்கே படிச்சேன். இதோ இந்த மரம் நானே என் கையால நட்டது.''

அவன் நட்ட மரவடி நிழலமர அவனே வந்திருக்கிறான். அவனை இனி அடிக்கடி பார்க்கப் போவதை இருவரும் அறிந்திருக்கவில்லை.

''உங்க பேரு என்னங்க?'' என்றான் பார்த்திபன்.

''தங்கராஜ்.''

''எந்த ஊருங்கண்ணா?''

ஒரு பிரியத்தில் பையன்களுக்கு அண்ணா வேறு ஒட்டிக் கொண்டது.

''கூனம்பட்டி.''

''ஓ... தென்னிலைக்கிட்ட இருக்கிற கூனம்பட்டியா?''

''ஆமா.''

''சரி வர்றம்ங்கண்ணா.''

''போய்ட்டு வாங்க. நாளைக்கு மத்தியானம் பார்க்கலாம்.''

''நாளைக்கு மத்தியானம் ஸ்கூல் இருக்குமே?''

''நாளைக்கு மத்தியானம் ஸ்கூல் இருக்காது'' என்றான் தங்கராஜ் தீர்மானமாக.

(தொடரும்)

மிமிக்ரி மேதை!



சாதாரண ஒரு மிமிக்ரி பார்ட்டியால் எத்தனைக் குரலை மிமிக்ரி செய்ய முடியும்? ஒரு ஐம்பது, எழுபது! ம் அவ்வளவுதான். ஆனால் செந்தில்குமார் இதையெல்லாம் தாண்டி எங்கேயோ போய்விட்டார். அவர் மிமிக்ரி செய்யும் குரல்கள் மொத்தம் 175. பிரபலங்கள் மட்டுமின்றி விலங்குகள், டிராபிக் சத்தம் என்று இவர் கணக்கில் எக்கச்சக்கக் குரல்கள்!

எங்க படிச்சீங்க செந்தில் இவ்ளோ குரல்களை?

''படிக்கவா...? இதுக்கெல்லாம் ஸ்கூல் இல்லை சார். எங்க அண்ணன் தொடர்ந்து ஐம்பது மணி நேரம் ஓவியம் வரைஞ்சு கின்னஸ் சாதனை பண்ணினார். அதைப் பார்த்து எனக்கும் ஏதாவது சாதிக்கணும்னு வெறி. கொஞ்சமா மிமிக்ரி திறமை இருந்ததால அதையே கப்புனு புடிச்சு டெவலப் பண்ணிட்டேன்'' என்கிறார் திருவள்ளூர் பொதட்டூர்பேட்டையைச் சேர்ந்த இந்த செந்தில்குமார்.

இதுவரை மூவாயிரம் நிகழ்ச்சிகள் செய்திருக்கிறார். இதில் வரும் வருமானத்தின் ஒரு பகுதியை தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுத்து வருகிறாராம். அடுத்த இலக்கு கின்னஸ் சாதனைதான் என்கிறார் நம்பிக்கையாக!

- ஏக்

ஸ்ரீ ராம பக்த ஹனுமான்

துயர் தீர்க்கும்
பயம் போக்கும்
பலம் சேர்க்கும்
கதைகள்



கல்கி

6.8.2000 இதழ்
தொடங்கிச்
சொல்கிறார்



கல்யாணபுரம்
ஆராவமுதன்



வெற்றிக் கொடி கட்டு

தலைக்கு ஒரு லட்சம் ரூபாய் கட்டினால் துபாயில் வேலை + துபாய் செல்ல விசா, இரண்டையும் வாங்கித் தருவதாக 'காரண்டீ' செய்கிறது ஒரு கம்பெனி. அதை நம்பி, சொத்து பத்து நகை நட்டு என்று தங்களது 'பாலன்ஸ் ஷீட்'களின் சொத்துக்களையே கரைத்து பணத்தைப் புரட்டித் தருகிறது ஒரு விவசாயி கும்பல். கம்பெனியோ பட்டை நாமம் சாத்த, ஸ்தம்பித்துப் போய் விடுகிறார்கள் அப்பாவி ஜனங்கள். மேற்படி ஏமாந்த ஜனத்தொகையின் இரண்டு முக்கியமான பிரஜைகள் வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த பார்த்திபனும் முரளியும்.

வீட்டில் விஷயம் தெரிந்தால், நான் நீ, என்று போட்டி போட்டுக் கொண்டு தூக்கில் தொங்கி விடுவார்கள் என்கிற நிஜம் பயமுறுத்த, துபாய் சென்றது சென்றதாகவே இருக்கட்டும் என்று இருவரும் தங்களது வீடுகளையும் பொறுப்புகளையும், 'இன்டர்சேஞ்' செய்து கொண்டு புருடாக்கள் சகிதம் சமாளித்து, இறுதியில் அஃப்கோர்ஸ், வெற்றிக் கொடி கட்டுகிறார்கள்.

டைரக்டர் சேரன், தமது எல்லாப் படங்களிலும் மெசேஜ் ஆஸ்பெக்ட் பக்காவாக இருக்கும் என்று ஒரு பேட்டியில் சொன்ன ஞாபகம். பரவாயில்லை, மனுஷர் சொல்வதைத்தான் செய்கிறார், செய்வதைத்தான் சொல்கிறார்.

நடிப்பைப் பொறுத்தவரை பார்த்திபன் + மனோரமா டீம் 'முரளி+மீனா+மாளவிகா' டீமை மானாவாரியாக ஓவர்டேக் செய்து விடுகிறது. டைரக்டர்வாள், 'ஷாட் பூட் த்ரீ' போட்டு டீம்களைப் பிரித்து விட்டாரோ?

பார்த்திபனும் வடிவேலுவும் காமெடி எக்ஸ்பர்ட்ஸ். அவர்களின் காமெடி நன்றாக இல்லை என்றால்தான் ஆச்சரியம்.

படத்தின் 'மேன் ஆஃப் தி மாட்ச்' கண்டிப்பாக சார்லிதான். சிறுகச் சிறுக சேர்த்த பணம் தொலைந்ததிலிருந்து அதிர்ச்சி, கோபம், வேதனை, விரக்தி என்று எல்லா உணர்ச்சிகளையும் எத்தனை ஆழமாகக் காண்பிக்கிறார்?

தாங்க்யூ கிருஷ்ணா, தாங்க்யூ ஜீஸஸ், தாங்க்யூ அல்லா... தாங்க்யூ தேவா!

'சென்டிமென்ட்'ஐ வச்சுத்தான நமக்கு வாழ்க்கையே ஓடுது' என்று படத்தில் ஏதோ ஒரு இடத்தில் முணுமுணுக்கிறார் பார்த்திஸ். இது வெறும் வசனம் இல்லை, தயாரிப்புக் குழுவின் ஆணித்தரமான நம்பிக்கை!

— கிருஷ்ணா சிதம்பரம்

□ ரூ. 50 பரிசு பெறுபவர்:
பி. வேலுச்சாமி,
ஏ. இடையப்பட்டி,
தொப்பாநாயக்கன்பட்டி அஞ்சல்,
வையம்பட்டி - 621 315.

✱ ரூ. 25 பரிசு பெறுபவர்:
அ.பா. ராசன்,
23, ராஜாஜி ஒன்பதாவது தெரு,
திருமங்கலம்,
மதுரை மாவட்டம்.

● ச. தங்கமணி,
மருத்துவதுணி நகர்

? இந்திய துணைக் கண்டத்திலேயே யாரும் செய்யாத செயல்களைச் செய்தவர்தான் ஜெயலலிதா என்கிறாரே தினகரன்?

! அதிலென்ன சந்தேகம்? யாரால் முடியும் இத்தனை ஊழல்!

● க.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? 'கிரிக்கெட் சூதாட்டத்தை விசாரிப்பதால் ஒரு பயனும் கிடைக்காது. ஏதோ ஒரு சபலத்தில் கிரிக்கெட் வீரர்கள் பணத்துக்கு இரையாகி விட்டார்கள்– 'மறப்போம் மன்னிப்போம்' என்று விட்டுவிடுவதுதான் விவேகம்' என்று சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி கூறியிருப்பது அதிர்ச்சியாக இல்லையா?

! அவர் இன்னமும் வழக்கறிஞராக இருக்கிறார்; அமைச்சராக மாற வேண்டும். அல்லது அமைச்சரவையிலிருந்து வெளியேற வேண்டும். சபலத்தில் சிக்கியவர்களை யெல்லாம் மன்னிப்பது எனில் நாட்டில் சிறைச்சாலைகளே இராது.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'தமிழீழம் மலர்ந்தால் தெற்காசியாவில் அமைதி ஏற்படும்; மலரப்போகும் தமிழீழமே இந்தியாவின் முதல் நட்பு நாடு என்று கருணாநிதி துணிந்து அறிவிக்க வேண்டும்' என டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறாரே...?

! டாக்டரின் டயக்னாஸிஸே தப்பு என்னும்போது சிகிச்சை எப்படி சரியாக இருக்கும்!

● அ.பா.ராசன், திருமங்கலம். ✱

? மே.வங்க உள்ளாட்சித் தேர்தலில் கம்யூனிஸ்ட் தோல்வியுற்றது இந்தியாவில் கம்யூனிஸம் தோல்வியுற்றிருப்பதன் அடையாளம்தானே? இன்றைய இந்தியப் பொருளாதாரக் கொள்கையின் வெற்றியாக அதைக் கொள்ளலாமா...?

! தாராளமயமாக்கல் கொள்கையை சீனாவும் ரஷ்யாவும் ஏற்றுக் கொண்ட பிறகு இங்குள்ள கம்யூனிஸ்டுகள் ஏற்பதற்கென்ன? எனவே உள்ளாட்சித் தேர்தல் தோல்விக்குப் பொருளாதாரக் கொள்கை காரணம் அல்ல; ஆளுங் கட்சிக்கு எதிரான அதிருப்தி வோட்டு அது.

● பி. வேலுச்சாமி,
கொப்பாநாயக்கன்பட்டி. □

? வீரப்பன், அர்ஜுனன் குழந்தைகளுக்குப் படிப்பு செலவை த.மா.கா. ஏற்கும் என்று மூப்பனார் அறிவித்துள்ளாரே...?

! மனிதாபிமானமே என்றாலும் வேண்டாத வேலை. தொடர்ந்து ஆட்டோ சங்கர் குடும்பம், அகரம் நாராயணன் குடும்பம் எனப் பட்டியல் நீண்டால் த.மா.கா, கு.கு.மு.காவாகி விடும் (குற்றவாளிகள் குடும்ப முன்னேற்றக் காங்கிரஸ்).

● என்.கே. மூர்த்தி,
கும்பகோணம்-1.

? இந்த நூற்றாண்டின் சிறந்த நடிப்பாற்றலுக்கான விருதை ஜெவுக்கு வழங்கலாமா...?

! விருதுப் பத்திரத்தில் கையெழுத்துப் போடும்போது நாலு பேரை சாட்சிக்கு வைச்சுக்குங்க.



• கொள்கை...



•.... காற்றில்!

● வைகை வளவன், மதுரை-17.

? விடுதலைப்புலிகளுக்கு வெண்சாமரம் வீசும் ம.தி.மு.க. நடத்தும் மாநாட்டுக்குத் தமிழக முதல்வரும் இந்திய உள்துறை அமைச்சரும் வருவது நியாயமாகத் தெரிய

வில்லையே தலைவா...?

! கூட்டணி ஆட்சியின் அரசியல் நிர்ப்பந்தங்கள் கொள்கையைக் காற்றில் பறக்கவிடச் செய்கின்றன.

● சீதா ரத்னம், சென்னை -49.

? 2.7.2000 கல்கி இதழில் 'வரிவசூலில் அமெரிக்க பாணிதான் பலன் தரும்' என்ற பதில் உள்ளதே. அது என்ன வழி?



• எளிமை

! வரியைக் குறைவாக நிர்ணயிப்பது. ஒழுங்காகக் கட்டாதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது. (எடுத்தவுடனே சிறைவாசம்தான்! வரி ஏய்ப்பு அங்கே தேசத் துரோகம்)

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை-84.

? 'இந்தியாவில் நான் ஒருபோதும் பிரதமராக முடியாது. ஆனால் காஷ்மீரை பாகிஸ்தானுடன் சேர்த்திருந்தால் நான் பாக். பிரதமராகியிருப்பேன்' என்று ஃபாரூக் அப்துல்லா கூறியிருக்கிறாரே..?



• டாக்டரின் டயக்னாஸிஸ்!

! நல்ல வேளை அவர் பாக். பிரதமர் ஆகவில்லை! பாக். பிரதமர்களுக்கு அடுத்தடுத்து நேர்ந்துள்ள கதி தெரியாதா!

● எஸ். அருள்மொழி, தென்காசி.



• தொண்டரின் கொள்கை!

? 'ஆண்களாக இருக்கும் முதலமைச்சர்களுக்குத் தனிப்பட்ட முறையில் குடும்பம், வாழ்க்கை, கேளிக்கை, கோலாகலம் எல்லாம் உண்டு - ஆனால் எனக்கு அப்படி தனிப்பட்ட வாழ்க்கை இல்லை. மக்களுக்காகவே உழைத்திருக்கிறேன்' என்கிறாரே ஜெயலலிதா?



• வக்கீலின் வக்காலத்து

! மக்கள் என்பதற்கு சசிகலா குடும்பம் என்று அர்த்தம்.

● ஜி.எம்.கே. ரங்கராவ், சென்னை - 47.

? காஷ்மீர் பிரச்னையில் மத்யஸ்தம் செய்ய நான்கு சங்கராச்சார்யர்களுள் ஒருவர் தயார் என்று கூறப்பட்டுள்ளதே... நான்கு சங்கராச்சார்யர்கள் யார் யார்?

! காசி, காஞ்சி, பூரி, துவாரகா.

● எம். பாஸ்கர், திண்டுக்கல்.

? கலர் டீ.வி. ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக வாதிட்டவர்களை ஆணி வைத்த செருப்பால் அடிக்க வேண்டும் என்று காளிமுத்து கூறியிருப்பது பற்றி...?

! செருப்பால் அடிப்பது என்பது கட்சியின் கொள்கைகளுள் முக்கியமான ஒன்று என்பது ஏற்கெனவே நிரூபணமானதுதானே- புதுசில்லை!

● கல்லார் ரஹ்மத், நாகை.


? கெட்டவர்கள் வாழ்கிறார்கள், நல்லவர்கள் சீக்கிரம் போய்விடுகிறார்கள். ஏன் இப்படி?

! எப்பவுமே இப்படித்தான் நடக்கும்னு சொல்ல முடியாது போனாலும் அல்பாயுசில் உத்தமர் ஒருவர் மறையும்போது இப்படி நினைக்கத்தான் தோன்றுகிறது. சமீபத்தில் தமது 54வது வயதில் காலமான சென்னை நகர கல்கி ஏஜெண்ட் நாராயணன் செட்டியார் அத்தகைய ஒருவர். வசதியாக வாழக்கூடிய நிலையிலும் எளிமையாக வாழ்ந்து காட்டிய அடக்கமான மனிதர். ஏஜென்ஸியில் பண விஷயத்திலே அவர் கறாராக இருந்தது பெரிசில்லே. ஏதோ வித்ததுல கமிஷன் கழிச்சு பாக்கியை நிறுவனத்துக்கு அனுப்பினோம் என்று இல்லாமல், கல்கி நிறுவனப் பத்திரிகைகளிடம் உண்மையான ஈடுபாடும் நம்பிக்கையும் வைத்து பெருமிதத்துடன் செயல்பட்டவர். ஒவ்வொரு வாரமும் கல்கியைப் படித்து விட்டு தாம் ரசித்தவற்றைச் சொல்வார். நல்ல பத்திரிகையை இன்னும் நிறையப் பேர் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் உழைத்து கணிசமான வெற்றி கண்டார். இப்படிப்பட்ட ஆர்வலர்கள் காரணமாகத்தான் பத்திரிகை உலகம் எலக்டிரானிக் மீடியாவுடன் போட்டி போட்டுக் கொண்டு நிமிர்ந்து நடக்க முடிகிறது.

நூற்றாண்டின் சிறந்த நடிகை விருது 'ஜெ'வுக்குத்தானே?



• செயற்கரிய செயல்கள்



வட்ட மேஜை

வாசகரே வாழ்க!

✉ 'அய்யோ கலாமேனா' கட்டுரை படித்தேன். தமிழ் நிறைந்த நெஞ்சங்கள் மட்டுமே படித்துப் பெருமகிழ்ச்சியடைந்த அமரர் கல்கி அவர்களின் பொன்னியின் செல்வன் வரலாற்றுப் புதினத்தை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து, உலக மக்கள் அனைவரும் அறிய வாய்ப்பை ஏற்படுத்திய மொழி பெயர்ப்பாளர், ஓவியர் ஆகியோரை சிறப்பிக்கும் வகையில் செய்திகளை வெளியிட்ட உங்களுக்கு மனம் திறந்த பாராட்டுகள்.

ப. இலட்சுமி, திருவேங்கடம்

✉ வாசகர் கடிதங்களை தபால் பெட்டி மாதிரியே "லே அவுட்" செய்து வெளியிட்ட விதம் வித்தியாசமாக இருந்தது.

தெய்வசிகாமணி, சென்னை-5

✉ எனக்குச் சொந்த ஊர் லால்குடி. என்றாலும் 'லால்குடி' குடும்பத்தாரைப் பற்றி ஓரளவு கல்கி மூலம் தான் தெரிந்து கொள்ள முடிந்தது. மனத்திற்கு மகிழ்ச்சியையும், பெருமையையும் அளித்தது.

இராஜேந்திரன், லால்குடி

✉ 'புலிகள் ஆதரவு மாநாடா' - சூடான, சுவையான, சூப்பரான அறிவு பூர்வமான கருத்துகளின் வெளிப்பாடான தலையங்கம். ம.தி.மு.க. சீர்தூக்கிப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

வை.வெங்கடேசன், விழுப்புரம்

✉ 'பிரச்னை மனிதர்கள்' கட்டுரையில் வெளிநாடுகளில் இந்தியர்கள் படும் அவஸ்தைகளை விளக்கியதோடு, அவர்களின் சிறு தவறுகளையும் சுட்டிக் காட்டிய விதம் அருமை.

ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.

✉ 'நடக்கும் என்பார் நடக்கும்' பகுதியில் முன்னாள் டி.ஜி.பி. வைகுந்த் பிக்பாக்கெட்டினால் பணம் இழக்கக்கூடும் என்று கூறியிருப்பது சரியான காமெடி!

சி. இரவிச்செல்வன், கல்பாக்கம்.

✉ டூப், ரீல், மாய்மாலத்தை அழகாக உதாரணப்படுத்திய தராசின் பதிலில் அசந்தே போனோம்! ரசனையோடு கேள்வி கேட்டிருந்த வாசகருக்கும் ஒரு பாராட்டு!

யமுனா ரெங்கநாதன், சென்னை-97

✉ என்னம்மா கண்ணு படத்துல நம்ம எம்.ஜி.ஆர். ஆடிய டான்ஸைப் பத்தி சொல்லாம விட்டுட்டியே... நியாயமா கண்ணு?

ஆர்.பிரகாஷ், பொன்மலை

✉ மேடைக்கு அடியில் புலிவால் தெரிவதைப்போல் கார்ட்டூன் போட்டுக் காட்டியிருப்பது நல்ல நயம். கல்கியா... கொக்கான்னேன்!

கங்கா கணேசன், பொறையாறு

✉ என்னம்மா கண்ணு பட விமர்சனத்துக்கு ஒரு ஷொட்டு! நேர்மையான உனது அணுகுமுறைக்கு சபாஷ்!

வி.சிவா, மதுரை 10

✉ கார் ரேஸ் என்றதும் ஞாபகத்திற்கு வருபவர் நரேன் கார்த்திகேயன்தான். அப்படியிருக்க, கார் ரேஸில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் புதியவரான பார்த்திவா சுரேஸ்வரனை வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது கல்கி. வெல்டன்.

க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

Royal flame
GAS STOVE

நீங்களும்
செழிப்பான
ராயல் குடும்பம் ஆக வேண்டுமா?
வாங்குங்கள்
ராயல் ஃபிளேம் கேஸ் ஸ்டவ்



- எளிதில் பராமரிக்கக்கூடியது
- கேஸ் சேமிக்கும் வகையில் உயர்ந்த தொழிற் நுட்பம்
- தரமானது
- ISI நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டது
- நியாயமான விலையில் கிடைக்கிறது

அனைத்து கேஸ் விநியோகஸ்தர்களிடம் கிடைக்கும்

சில 'மேட்ச் பிக்ஸிங்' பார்ட்டிகளிடம் (அதாங்க, கல்யாணத் தரகர்) ''உங்க அனுபவங்களைச் சொல்லுங்களேன்'' என்றோம். 'சி.பி.ஐக்குத் தெரிவிக்கக் கூடாது' என்று சத்தியம் வாங்கிக்கொண்டு சொன்னார்கள்...

போதை மாப்பிள்ளை!

நரசிம்மன், சென்னை -24

எனது இரண்டு தங்கைகளுக்கு, வரன் தேட ஆரம்பித்தார் என் அப்பா. இரண்டு நல்ல வரன்கள் கிடைத்தன. ஆனால் மூத்த தங்கை திருமணம் இப்போது வேண்டாம் எனக் கூறிவிட்டாள். அந்த வரனை விட்டு விட அப்பாவுக்கு மனமில்லை. உடன் தனது நண்பரின் மகளுக்கு அந்த வரனை முடித்து



விட்டார். அதிலிருந்து நண்பர்களும், உற வினர்களும் நல்ல வரன், ராசியான வரனுக்கு அப்பாவை அணுக ஆரம்பித்து விட்டார்கள். என்னை, பெண் வீட்டிற்கும் பையன் வீட்டிற்கும் தகவல்கள் சொல்லிவர அனுப்புவார்.

அப்பாவுக்குப் பிறகு நான் பகுதிநேரத் தொழிலாக இதைச் செய்து வருகிறேன். எனது அனுபவத்தில் நான் சந்தித்த நெருக் கடியான திருமணத்தைப் பற்றிச் சொல் கிறேன். பெண்ணுக்கு முப்பது வயதாகி விட்டது. நல்ல அழகு. ஆனால் ஆயில்ய நட்சத்திரம், கடக ராசி. ஜாதகத்தைப் பார்ப் பவர்கள் எல்லாம் ஓடுகிறார்கள். என்னிடம் ஜாதகம் ,வந்து ஐந்து வருடமாகி விட்டது. இது எனக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தி விட்டது. ஒரு முடிவுக்கு வந்தேன். பெண் ணின் தந்தையை அழைத்து, பெண்ணின் கட்டைவிரல் ரேகையை பதித்து எடுத்து, அதன்மூலம் கணிக்கப்படும் ஜாதகத்திற்கு வரன் பார்ப்போம் என்றேன். சம்மதித்தார்.

ரேகை எடுத்து கணித்ததில் மகம் நட்சத்திரம் சிம்ம ராசியும் வந்தது. ஜாதகப் பலனோ ஓஹோ என்றிருந்தது. ஜாதகத்தைப் பார்த்த வரன்களுக்குள் ஓரே போட்டா போட்டி. இறுதியில் மெடிக்கல் ஷாப் வைத்திருந்த வரனுக்குப் பேசி முடித்தோம். விடிந்தால் கல்யாணம். முதல்நாள் இரவு நண்பர்களுடன் சேர்ந்து அளவுக்கு அதிக மாக மது அருந்திய மாப்பிள்ளைக்கு போதை தெளியவே இல்லை. ஒரிஜினல் ஜாதகம்தான் வேலை செய்கிறதோ என்று எனக்கு ஒரே பயம். மறுநாள் விடிந்ததும்

மாப்பிள்ளை தள்ளாடிக் கொண்டே இருக்க, முகூர்த்த நேரம் நெருங்கியது. "எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம்'' என்று மாப் பிள்ளை போதையில் உளறி உளறி தள்ளாட, பெண் வீட்டுக்காரர்களுக்கு, பயங்கர டென்ஷன்.

அலங்காரத்துடன் இருந்த மணப்பெண், திடீரென மாப்பிள்ளை அறைக்குள் பிரவேசித்தாள். "என்னைப் பெண் பார்க் கும்போது உங்களுக்கு எங்கே போச்சு புத்தி? நினைச்சு நினைச்சுப் பேசுறீங்களே... உங்களுக்கு முன்னாடி எனக்கு இந்த கல் யாணம் வேண்டாம்ன்னு நான் சொல்லி யிருந்தால் என்னை சும்மா விடுவீங்களா?'' என்று கேட்டாளே ஒரு கேள்வி. மாப்பிள்ளைக்கு அந்தக் கணமே போதை தெளிந்து விட்டது. பையன் பூம்பூம் மாடு மாதிரி வந்து அமைதியாக தாலி கட்டினான். ஒரே ஒரு விஷயம். இந்த கல்யாணத்திற்கான தரகுப் பணத் திற்கு இன்னும் அலைந்து கொண் டிருக்கிறேன்.




மேட்ச் ஃபிக்ஸிங்

ஒருதலை லவ்!

ராஜாமணி, திருநெல்வேலி

எங்கள் ஊர் திருமணங்களில் வரதட் சணைக்குத்தான் முதல் மரியாதை. தரகர் களாகிய எங்களுக்கு சவரன் அடிப்படை யில் கமிஷன் கிடைக்கும். அதாவது பெண் ணுக்கு நூறு பவுன் என்றால் பத்து பவுன் எங்களுக்கு கமிஷன். பையன் கல்லூரி லெக் சரர். பெண்ணோ இடைநிலை ஆசிரியை. ஐம்பது பவுன் இரண்டு லட்சம் பேசி முடித்துவிட்டோம். ஆனால் விபரீதம் மாப் பிள்ளை உருவத்தில் வந்தது. பையனோடு வேலைபார்த்த சக பெண் லெக் சரர் பையனை ஒருதலையாக காதலித்திருக்கிறாள். இது மாப் பிள்ளை பையனுக்குத் தெரிய வில்லை. திருமணம் நிச்சயமான செய்தியை இவர் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள... அந்த பெண் லெக்சரர் தற்கொலைக்கு முயன்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இதற் குள் லெக்சரர்கள் இருவருக்கும் மோசமான தொடர்பு இருந்ததாகக் கல்லூரியில் செய்தி பரவ, அது பெண் வீடு வரை வந்து விட்டது. பெண் வீட்டார் மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். எனக்கு கமிஷன் போனாலும் பரவாயில்லை, நமது தொழிலின் நாணயம் கெட்டுவிடக் கூடாதே என்று என்ன செய்யலாம் என்று யோசித் தேன். உடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அந்தப் பெண் லெக்சரரைச் சந்தித்து உண்மையான விவரம் தெரிந்து

கொண்டேன். நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணை அழைத்து வருகிறேன். அவரிடம் உண்மையைச் சொல்லுங்கள் என்றேன். அவரும் சரி என்றார். பெண் வேலை செய்யும் கல்லூரிக்குச் சென்று அப்பா அவசரமாக அழைத்து வரச் சொன்னார் எனக் கூறி டாக்ஸியில் நேரே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சம்பந்தப்பட்ட இரு பெண்களையும் சந்திக்க வைத்து விட்டேன். பெண், மாப்பிள்ளையின் நேர்மை அறிந்து திருமணம் செய்தால் அவரைத்தான் செய்வேன் என்று அடம் பிடிக்க தொடங்கிவிட்டான்! பெண் வீட்டாரும் வேறு வழியின்றி ஒத்துக் கொண்டனர். ஆனால், மருத்துவமனை சென்று அடிக்கடி லெக்சரரை பார்த்து வந்த பையனுக்கு அவர் மீது அனுதாபக் காதல் வந்து விட, இனி கட்டினால் லெக்சரர்தான் என்று தலைகீழாக நின்று தவம் செய்யாத குறைதான்.



அப்புறம் என்ன? எனக்கு கிடைக்க இருந்த 'கமிஷன்' கட்டாகிவிட்டது!

டிரிக் மேரேஜ்

சுயம்புலிங்கம், திருச்சி

எனக்கு ஜாதி மதத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லை. ஜாதகத்திலும் நம்பிக்கையில்லை. கமிஷனைப் பற்றி கவலைப்பட மாட்டேன். நான்கு வருடத்திற்கு முன்பு பையனும் பெண்ணும் என்னைத் தேடி வந்தார்கள். பொதுவாக அப்பாக்கள் மட்டுமே தேடி வரும் என்னை ஒரு இளம்ஜோடி தேடி வந்திருக்கிறதே என்று எனக்கு ஆச்சர்யம். இருவரும் காதலர்கள். மதம் ஒன்றாக இருந்தாலும் ஜாதிகள் வேறு. இருவரது அப்பாக்களுமே கண்டிப்பானவர்களாம். இதனால் காதலை மறைத்தே வைத்து விட்டார்கள். ஆனால் பையனின் தாய் மாமனுக்கு மட்டும் இவர்களது காதல் தெரியுமாம். ஆனாலும் வீட்டுச் சம்மதத்துடன் இந்தக் கல்யாணம் நடக்க வேண்டும் என்றார்கள். அவர்களின் புத்திக் கூர்மையும், தைரியமும் எனக்குப் பிடித்திருந்தது. மளமளவென்று காரியத்தில் இறங்கினேன்.

பெண்ணின் போட்டோவையும் பையன் போட்டோவையும் வாங்கிக்கொண்டு, சம்பந்தப்பட்ட இருவரது ஏரியாவிற்கும் சென்று அவர்களது பெற்றோர்களின் நடவடிக்கைப் பற்றித் தெரிந்து கொண்டேன். பெண்ணின் தந்தை, பாண்டிச்சேரி அன்னையின் தீவிர பக்தர். அவர் வாரத்தில் இரண்டுநாள் தியான வகுப்பிற்கு செல்கிறார் என்று கேள்விபட்டு, நானும் வகுப்பில் கலந்து கொண்டேன். அடிக்கடி சந்தித்ததில் பழக்கம் ஏற்பட்டது. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று அவர் என்னைக் கேட்க, தெரிந்த குடும்பத்திற்கு மட்டும் வரன்களைப் பார்த்துக் கொடுக்கிறேன். கமிஷன் வாங்குவதில்லை என்றேன்... மறுநாளே அவரது பெண்ணின் போட்டோவைக் கொடுத்தார். அடுத்த இரண்டு வாரம் கழித்து 'ஒரு அருமையான வரன் வந்திருக்கிறது என்று புகைப்படத்தைக் காட்டினேன். அவருக்குப் பிடித்துப் போய்விட, மகனிடம் காண்பித்திருக்கிறார். 'மகன் வெட்கப்படுகிறான்' என்று மறுநாள் ஓடோடி வந்தார். இந்த வரனை முடித்துக் கொடுங்கள் என்றார்.

"மன்னிக்கணும். இந்தப் பையனின் ஜாதியை சொல்ல மறந்துட்டேன்" என்று நடித்தேன். சரி வேறு வரன் பார்த்துக் கொள்ளலாம் என்றார். பையனின் வீட்டிற்குச் சென்றேன். பையனின் அப்பாவைச் சந்தித்து "சுப்ரமணி இருக்காரா?" என்றேன். "நீங்க யாரு?" என்றார். நான் கல்யாணத் தரகர். சுப்ரமணி உங்க பையனுக்கு பெண் பார்க்கச் சொல்லியிருந்தார் என்று கூறி, பெண்ணின் போட்டோவுடன் மேலும் ஐந்து பெண்களின் போட்டோவையும் கலந்து கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். சுப்ரமணி வேறு யாருமல்ல. பையனின் தாய்மாமன்தான். அவரிடம் பேசி ஏற்கெனவே அவர் ஒத்துழைப்பை வாங்கி விட்டேன். பையனின் அப்பா சுப்பிரமணிக்கு ஃபோன் செய்து வரன் பார்க்கச் சொன்னாயா என உறுதி செய்துகொண்டு, பையனிடம் போட்டோக்களை காட்டியிருக்கிறார்கள். பையன் தனது காதலி போட்டோவைப் பார்த்து பச்சைக் கொடி காட்ட, அப்போதே பையனின் அப்பா எனக்கு போன் செய்தார். 'சாரி சார் அந்தப் பெண் வேறு ஜாதி. உங்களுக்கு தவறுதலாக அந்த போட்டோவை கொடுத்துவிட்டேன்' என்றேன்... கோபமாக டோஸ் விட்டார்.. போட்டோவின் பின்னால் பெயரையும், அவளது வீட்டு முகவரி தொலைபேசி எண்ணையும் மட்டும் எழுதியிருந்தேன். பையனும் பெண்ணும் சோகமாகவும், வேதனையாகவும் இருப்பதுபோல், சாப்பிடாமல் நடித்திருக்கிறார்கள். இதைப் பார்த்த பெற்றோர்கள் ஒரு மாதிரி ஆகிவிட்டார்கள். பெண்ணின் அப்பா, பையனின் அப்பாவை அலுவலகத்தில் பார்த்துப் பேசியிருக்கிறார். ஜாதிப் பெயர் தானே வேறு வேறு. அரசாங்க ரெக்காடு படி பேக்வார்டு கிளாஸ்தானே என அவரிடம் பேச, சமாதானம் அடைந்து விட்டார்கள். இருவரது மிடில்கிளாஸ் ஸ்டேட்டஸும் கூட அவர்கள் சமாதானம் அடைவதற்கு முக்கிய காரணம். கடைசியில் கல்யாணப் பத்திரிகை கொடுக்க மட்டும் தான் பெண்ணின் அப்பா என்னிடம் வந்தார். பையனின் அப்பா என்னை எங்கே பார்த்தாலும் செல்லமாக முறைப்பார். இதுதான் கல்யாணச் சந்தை!

— **சக்காத்தாழ்வார்**

குறிப்பு : அனைத்துப் பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன.

அருள்வாக்கு



ஆத்மா இல்லாமல் எந்த இயக்கமும் இல்லை. ஆனாலும் ஆத்மா எதனோடும் நேராக ஸம்பந்தப்படவில்லை. இதைத்தான் மாயை என்பது, எத்தனை யோசித்தாலும் இது புரிபடாது. எதிலும் ஸம்பந்தப்படாவிட்டாலும் ஸம்பந்தப்பட்டாற்போல மாயா விலாஸத்தால் ஆத்மா இருந்து கொண்டுதான் இத்தனை கூத்தையும் நடத்துகிறது!


வெளிச்சம் இல்லாமல் ஒரே இருட்டாயிருந்தால் எந்தக் கார்யமும் செய்ய முடிவதில்லை. விளக்கு ஏற்றி வைக்கிறோம். அதன் வெளிச்சத்தில் ஒருத்தன் புராணம் படிக்கிறான், இன்னொருத்தன் ஏதோ மனதைக் கெடுக்கும் நாவல் படிக்கிறான். வெளிச்சத்தின் துணையினால் பல பேர் பலவிதமான நல்லதும் கெட்டதுமான கார்யங்களைச் செய்கிறார்கள். அதனால் இத்தனைக்கும் விளக்குதான் ஜவாப்தாரி என்று சொல்வதா? ஆனாலும் அந்த தீபம் இல்லாவிட்டால் இந்தக் கார்யம் எதுவும் நடக்க முடியாது. இப்படித்தான் ஆத்மாவின் நேர் தூண்டுதல் அல்லது கர்த்ருத்வம் இல்லாமலே அதன் ஸாந்நித்ய விசேஷத்தால் மட்டும் மனஸ் வேலை செய்வதும், சரீரத்தை வேலை வாங்குவதும் என்று உபமானம் சொல்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



நோய்நாடி

● குந்தளா ஜெயராமன்



''பெண்ணுக்கு வரன் பார்த்தாச்சு. மாப்பிள்ளைக்கு ஜெனோம் டெஸ்ட் செய்தாச்சு.வருங் காலத்தில் அவருக்கு இதயநோய் வர வாய்ப்பில்லைன்னு தெரிஞ்சிடுச்சு. வர தையிலே கல்யாணம்'' என்று ஒரு தந்தை சந்தோஷம் பொங்கக் கூறலாம்.

''நான் உங்களைக் காதலிச்சது உண்மைதான். ஆனால் இப்போ நீங்க ஆரோக்கியமா இருந்தாலும் இன்னும் பத்திருபது வருடங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட சான்ஸ் உண்டுன்னு தெரிஞ்சிடுச்சே. அதனாலே நோ மேரேஜ், ஸாரி'' என்று ஒருத்தி கண்ணீரைச் சுண்டி விட்டபடி விடை பெறலாம்.

உடனடியாக இல்லையென்றாலும் இன்னும் சில வருடங்களில் இந்தப் பேச்சுக்கள் சாத்தியம்தான். அதற்கான அஸ்திவாரம் போடப்பட்டு விட்டது.


இது தாவரம், இது மிருகம், இது மனிதன் என்பதை எது நிர்ணயிக்கிறது? ஜெனோம் தான். இந்த அறிவியல் பிரிவில்தான் ஒரு மாபெரும் சாதனை நடந்திருக்கிறது. அதுவும் அடுத்த வருடம்தான் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இப்போதே நடந்திருக்கிறது!

ஜெனோம் என்றால் என்ன? இதோ ஒரு எளிமையான விளக்கம். மனித உடலில் 23 ஜோடி குரோமோசோம்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் டிஎன்ஏ என்ற பொருள் இருக்கும். (மரபணுக்கள் – அதாவது ஜீன்ஸ் – இதில்தான் உள்ளன) இவை மொத்தமும் சேர்ந்துதான் ஜெனோம்.


சுருள் வடிவத்தில் காணப்படும் ஒவ்வொரு டிஎன்.ஏவும் சுமார் ஐந்தடி நீளம் கொண்டது. அகலமோ ஒரு தலைமுடியினுடையதைவிடக் குறைவு.


மரபணுக்களில் ஆயிரக்கணக்கான அடிப்படைப் பொருட்கள் உண்டு. இவற்றை A, T, C, G என்று பிரித்திருக்கிறார்கள். இவை எந்த வரிசையில் அமைந்துள்ளன என்பதைத்தான் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள் (ஒரு மனித ஜெனோம் சுமார் ஐம்பதாயிரம் மரபணுக்களைக் கொண்டது என்பது நினைவிருக்கட்டும்).

'சந்திரனில் மனிதன் காலடி வைத்ததற்குச் சமமான கோலாகல விஞ்ஞான சாதனை இது!' என்கிறார்கள் விஞ்ஞானிகள். பல வியாதிகள் (புற்றுநோயிலிருந்து இதயக் கோளாறுகள் வரை) மரபணுக்களில் உள்ள குறைபாடுகளாலோ அல்லது அவற்றின் எண்ணிக்கை கொஞ்சம் கூடக் குறைய இருப்பதாலோதான் ஏற்படுகின்றன. நோய்க்குக் காரணமான மரபணு எது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது முதல் வேலை. அந்தக் குறைபாடு கொண்ட மரபணுவை ரிப்பேர் செய்வது அடுத்தக் கட்டம். இந்தக் கண்டுபிடிப்புகளின் மூலம் கருவில் இருக்கும் குழந்தையின் உடலில் உள்ள குறைபாடுகளையும் கண்டறிய முடியும்.



யார் இந்த ''வரிசைப்படுத்தும் சாதனை''யைச் செய்தது? தனியார்துறை அரசுத் துறை இரண்டுமே தான்! அமெரிக்காவைச் சேர்ந்த வெண்டர் என்ற விஞ்ஞானியின் இந்த வெற்றிகரமான ஆராய்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது சொலரா என்ற தனியார் நிறுவனம். அதே சமயம் உலக சுகாதார அமைப்பின் உதவியோடு தொடங்கப்பட்ட ''மனித





மரபணு நாடி...

ஜெனோம் பிராஜக்ட்'' என்பதில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் பிரபல அறிவியல் மையங்களும் பங்குவகித்தன.

தொடக்கத்தில் போட்டியாக விளங்கிய இருதுறையினரும் பல்வேறு பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு இணைந்து வெற்றி அங்கீகாரத்தையும், ஆராய்ச்சி விவரங்களையும் பெற-தர ஒப்புக்கொண்டுள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் உதவியோடு யானைக் காலை உண்டாக்கும் கிருமிகளின் ஜெனோமை நிர்ணயிப்பதில் ஈடுபட்டிருக்கிறார் தேசிய பொறியியல் அகாடமியில் உறுப்பினராகவும் பயோ டெக்னாலஜி பிரிவு ஆராய்ச்சியாளருமான டாக்டர் குந்தளா ஜெயராமன். சமீபத்திய சாதனைக் கண்டுபிடிப்பு இந்தியாவுக்கு எந்தவிதத்தில் உதவும் என்று அவரிடம் கேட்டோம்.

"மனிதர்களைப் பொறுத்தவரை மரபணுக்கள் 80 - 90 சதவீதம் ஒரே மாதிரி உள்ளவைதான். மீதியில்தான் மாறுதல். குறிப்பிட்ட பகுதியில் வைரஸ் காய்ச்சல் அதிகம் பரவுகிறதென்றால் அந்த வைரஸின் முழு அமைப்பையும் அறிய முடியும். அதன் பிறகு இதை அழிக்கும்படியான மருந்தைக் கண்டுபிடிப்பது சுலபம்.

"சர்வதேச ஜெனோம் திட்டத்தின் விவரங்கள் இப்போது இலவசமாகவே இண்டர்நெட்டில் கிடைக்கின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கம்ப்யூட்டர் என்ஜினியர்கள் புத்திசாலித்தனமாக செயல்பட்டு தகுந்த 'ஸர்ச் என்ஜின்'களை உருவாக்கினால் எக்கச்சக்கமாகப் பணம் சம்பாதிக்கலாம்.

"இருந்தாலும் இந்தியாவைப் பொறுத்தவரை தாவரங்களிலிருந்து இந்த ஜெனோம் ஆராய்ச்சியைத் தொடங்கலாம் என்று படுகிறது. கீழாநெல்லி எப்படி மஞ்சள் காமாலையைத் தடுக்கிறது? நெல்லிக் காயில் எந்தப் பகுதியில் எப்படி வைட்டமின் சி சத்து ஒளிந்திருக்கிறது? மிளகு, சுக்கு போன்றவற்றில் மருத்துவ குணங்கள் எப்படிக் காணப்படுகின்றன? இதையெல்லாம் - தாவரங்களின் மரபணு ஆராய்ச்சிகளின் மூலம் - கண்டுபிடித்தால் அந்தக் குறிப்பிட்ட சத்துப் பகுதி

யைப் போன்றே செயற்கையாக உருவாக்கி உட்கொள்வதன் மூலம் அந்தப் பலனைப் பெறலாம்.

ஏவுகணைகளுக்கும் அணுசக்திக்கும் ஒதுக்கும் அளவுக்கு சமமான தொகையை நம் அரசு பயோடெக்னாலஜி ஆராய்ச்சிகளுக்கு ஒதுக்கினால் நாம் என்னென்னவோ சாதிக்க முடியும்."

கிட்டத்தட்ட எல்லா அறிவியல் கண்டுபிடிப்புகளிலுமே பாதகமான விளைவுகளும் உண்டு. லிப்ட் அல்லது கார் உபயோகிப்பதால் செலவாகாத கலோரிகளால் தொந்தியும் இதயநோயும். தொலைபேசி – ராங்கால்கள். தொலைக் காட்சி – தேவையற்ற மற்றும் ஆபாசமான நிகழ்ச்சிகள். ஜெனோம் சோதனைகளிலும் வேண்டாத்தகாத விளைவுகள் உண்டு.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு மிகச் சிறந்த வேலைக்கு விண்ணப்பித்து, எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளையும் வெற்றிகரமாகத் தாண்டிய பிறகு உங்கள் ரத்தத்தை சிறிது எடுத்து பரிசோதனை செய்து பார்த்து விட்டு, "வருங்காலத்தில் எப்போதாவது உங்களுக்கு டிப்ரஷன் வர வாய்ப்பு உண்டு. எனவே இந்த வேலை உங்களுக்குக் கிடையாது" என்று சொன்னால் உங்களுக்கு எப்படி இருக்கும்?

மனைவி மற்றும் குழந்தைகளின் வருங்கால பாதுகாப்பை முன்னிட்டு ஆயுள் இன்ஷூரன்ஸ் எடுத்துக் கொள்ள முடிவு செய்கிறீர்கள். ஆனால் இன்ஷூரன்ஸ் நிறுவனம், "எங்கள் டாக்டரின் மருத்துவ பரிசோதனைப்படி பார்த்தால் உங்களுக்கு வருங்காலத்தில் நீரிழிவு நோயோ, யானைக்கால் வியாதியோ வர சான்ஸ் இருக்கிறது. எனவே உங்களை இன்ஷூர் செய்ய இயலாமைக்கு வருந்துகிறோம்" என்று கூறிவிட்டால்?

எவ்வளவு காலம் உயிரோடு இருக்கப் போகிறோம் என்பது தெரியாமல் அதே சமயம் எப்போதோ வருங்காலத்தில் குறிப்பிட்ட வியாதியால் நாம் துன்பப்பட வாய்ப்பு உண்டு என்ற நிலை நமக்கு மட்டுமல்ல நமது உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுக்கும்! எவ்வளவு பேர் நடைப்பிணமாக வாழுவார்களோ!

நமக்குத் தெரியாமலே நம் எதிரிகள் (மருத்துவமனைகளின் மூலம்தான் என்று வைத்துக் கொள்வோமே) நமது ரத்தத்தை பரிசோதித்து, அதில் ஏதாவது வருங்கால உடல் குறைக்கான வாய்ப்பு இருந்தால் அதை வெளிப்படுத்தி நம் வருங்காலத்தையே பாழடிக்கும் அபாயமும் உண்டே.

இத்தனை வேண்டத்தகாத விளைவுகளும் ஏற்படக்கூடும். என்றாலும் இந்தக் கட்டங்களைத் தாண்டினால்தான் இலக்கை அடைய முடியும். அதாவது ஒருவருக்கு வருங்காலத்தில் ஏற்படக்கூடிய நோய் இன்னது என்பதை அறிந்தால்தான், அது நேராதபடி மரபணுவை சற்றே மாற்றியமைக்க முடியும். ஆனால் வருங்கால நோயைக் கண்டறியும் கட்டத்துக்கும், மரபணுவைத் துல்லியமாக மாற்றும் வித்தையை அறிவியல் உலகம் கைவரப் பெறும் கட்டத்திற்கு இடையே உள்ள வருடங்கள் கணிசமானவையாக இருக்கும். அப்போது திண்டாட்டம்தான்!

ஒருவரின் அந்தரங்கம், ஜெனோம் பரிசோதனைகளின் மூலம் பகிரங்கமாக்கப்படக்கூடாது என்பதற்குச் சட்டம் இயற்றலாம். அதே சமயம் குறிப்பிட்ட வியாதி நம்மைத் தாக்க வாய்ப்பு உண்டு என்றால் இப்போதிலிருந்தே அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

மொத்தத்தில், போகிற உயிரைப் பிடித்து தடுத்து நிறுத்தக்கூடிய முன்னேற்றம்! இதையே ரிவர்ஸ் கியரில் பயன்படுத்தக் கூடிய குயுக்தி மனிதர்கள் உலகில் இருக்கிறார்கள் என்பதால்தான் இந்த ஆராய்ச்சியின் பரிமாணங்கள் அச்சுறுத்தலாகவும் தென்படுகின்றன.

— ஜி.எஸ்.எஸ்.

"தலைவருக்கு எதிராகக் கையெழுத்து வேட்டை நடத்தினீர்களே... என்ன ஆச்சு?"
"பூரா கையெழுத்துமே ஃபோர்ஜரினுட்டார்!"

- அம்பை தேவா



இந்த வருடம் ஐந்து தேசியத் திரைப்பட விருதுகள் தமிழ் சினிமாவுக்குக் கிடைத்திருக்கிறது. அதில் ஒன்று "சேது!"

முதல் படத்திலேயே தேசிய விருதை எட்டியிருக்கும் சேது இயக்குனர் பாலாவைச் சந்தித்தோம்.

கிரஹாம்பெல் காலத்துப் ஃபோனில் நண்பர்களின் வாழ்த்துகளுக்கு சில நேரம் சிரித்தும், தலையாட்டியும் பதிலளித்துக் கொண்டிருந்த அவர், 'இந்த விருது எதிர்பார்த்ததுதான்" என்றார்.

"படத்தில் விக்ரமும், சிவகுமாரும் நன்றாக நடித்திருந்தார்கள். அவர்களுக்கும் விருது கிடைக்குமென்று நம்பினேன். கிடைக்கவில்லை" என்றவரிடம் - வாழ்த்து சொல்லிவிட்டு கேட்டோம்:

''குறிப்பிட்ட ஒரு



இயக்குனர் பாலா



"விருது எதிர்பார்த்ததுதான்!"

நடிகையை தொடர்ந்து கதை நேரத்தில் நடிக்க வைக்கும் பாலுமகேந்திரா, முப்பது வருடமாக மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தவிக்க விடுகிறார். மற்றவர்களைப் புரிந்து கொள்ள முடியாத இவர், உணர்வுப் பூர்வமாகத் தொடர் எடுப்பதை ஒப்புக் கொள்ள முடியாது" என ஒரு வாரப்பத்திரிகையில் கொதி நிலையில் எழுதியிருந்தீர்கள். வளர்ந்து வரும் நேரத்தில் இதெல்லாம் தேவையா? இல்லை விளம்பரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பா?

"சத்தியமாக அப்படியொரு எண்ணம் அறவே இல்லை. எனது அந்தப் பேட்டியின் பின்னணியில் ஒரு தாய் இருக்கிறார். அவரது வேதனை இருக்கிறது. அவரது கண்ணீர் இருக்கிறது. எதையுமே காலத்தோடு கட்டிக்காட்ட வேண்டும். நான் எதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்று விரும்பினேனோ, அந்தத் தொனி கொஞ்சம் குறைந்துவிட்டது. இதை யாரும் தவறாக புரிந்து கொண்டுவிடக் கூடாது. அதை புரிய வைப்பேன்" என்கிறார்.

"தமிழ்சினிமாவில் உங்களுக்கான இடம் எது என்பதை முடிவு செய்து விட்டீர்களா?" என்றதும் கொஞ்சம் யோசித்து பதில் சொல்லத் தொடங்குகிறார். "முதலில் நாம் எடுக்கிற படம் வெற்றி பெற வேண்டும். அதற்காக கொஞ்சம், வியாபார அம்சங்கள் இடம் பெறுவதில் எந்த கௌரவக் குறைச்சலும் இல்லை. அதற்காகக் கீழே இறங்கிப் போய் முகம் சுளிக்க வைக்கும், காட்சிகளோ, பாடல்களோ கூடாது என்று நினைக்கிறேன். குடும்பத்தோடு படம் பார்ப்பவர்கள், எப்போது தர்மசங்கடமான காட்சி வருமோ என்றுபயந்து கொண்டே படம் பார்ப்பதில் 'எனக்கு உடன்பாடில்லை. எனவே எனக்கான இடம் 'தரமான படங்களை அளவான கமர்சியலோடு தருவதுதான்."

"சேதுவுக்குப் பிறகு ஏன் இத்தனை இடைவெளி. கதை பஞ்சமா?"

கோடம்பாக்கம் பல்கலைக்கழகத்தில் பாலுமகேந்திரா பள்ளிக் கூடத்தில் படித்த யாருக்கும் இதுபோன்ற பிரச்னைகள் இருக்காது. இடைவெளிக்குக் காரணம் எனது நிதானம்! வருடத்திற்கு ஒரு படம்- அது வெற்றிப்படமாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறேன். அடுத்தப்படம் 'நந்தா'. விரைவில் படப்பிடிப்பு துவங்க இருக்கிறோம்'' என்றவரைத் தொடர்ந்து தொலைபேசி தொந்தரவு செய்ய, விடைபெற்றோம்.

— ஜெயந்த்



பாலிவுட் காதல்

ரியல் லைஃபில் ஜோடி சேரப் போகிறவர்கள் இவர்கள்! – அதாவது போவதாக எதிர்பார்க்கப்படுபவர்கள்.

ஹிர்த்திக் – சுசேன்:

சுசேன், ஃபெரோஸ்கானின் மகள்; ஹிர்த்திக்கிடம் 'கஹோ நா ப்யார் ஹை' என்று கெஞ்சாமலேயே அவரது காதலை வென்றவர். இருவரும் 'காரோபார்' படக் காஸெட் ரிலீசுக்குக் கிளம்பியபோது... காரில் அமர்ந்தவாறே க்ளிக்கப்பட்டது... அது சரி.. பின்னாலே யாருடைய கை அது? எனி வில்லென்ஸ்...?

ப்ரீத்தி ஜிண்டா – மார்க் ராபின்சன்:

க்யா கெஹனாவின் வெற்றிக்குப் பின், குழி விழும் கன்னத்தினாள் ப்ரீத்தி (தங்கக் கொலுசல்லே..? மாரனின் மயிலல்லே..) ஒரே குஷி மூடில் இருக்கிறார். கூடவே பாய் ஃப்ரண்ட் மார்க் ராபின்சன்; ப்ரீத்தியின் படம் ரிலீசான தியேட்டர்களிலெல்லாம், மக்களின் 'ரியாக்ஷனை'ப் பார்க்க மார்க் படை எடுக்கிறார் என்றால், மார்க் தரும் பார்ட்டிகளுக்கெல்லாம்... என்னதான் ஷூட்டிங் இருந்தாலும்... ப்ரீத்தி ஆஜர்! இந்த ஜோடிக்கு நூற்றுக்கு நூறு மார்க் போடுகிறார்கள் பாலிவுட் ஜோஸியர்கள்!

மிலிந்த் ஸோமன் – தபு:

ஸோமனின் வாழ்வில் மது சாப்ரேவுக்குப் பிறகு யார் யாரோ வந்து போனால்தான் என்ன? ஒரு மாதிரி பர்மனென்ட்டாக தபுவைப் பிடித்துவிட்டார் போலிருக்கிறது. 'தார்கிப்' படத்தில் இருவரும் ஜோடி சேர்ந்திருப்பதில் 'ரொமான்ஸ்' இன்னும் கெட்டிப்படுகிறதாம். தபுவுக்கு இது முதலா, முதலும் முடிவுமா... என்பது தான் தெரிய மாட்டே னென்கிறது!

– ஜெ.ஆர்.

ஸ்ரீ ஜ்வாலா ந்ருஸிம்ஹ பைரவ தன்வந்த்ரி ப்ரயோக

ஸ்ரீ ஜ்வாலா ந்ருஸிம்ஹ ஸம்புடித பீஷண பைரவ தன்வந்த்ரி ப்ரயோக மஹா யக்ஞம் ஆந்திர மாநிலத்தின் கரீம் நகர் மாவட்டத்தில் மஹா தேவ்பூர் மண்டலியில் உள்ள ஸ்ரீ காலேஷ்வரத்தில் வருகின்ற ஆகஸ்டு 5, 6 மற்றும் 7ம் தேதி (2000)களில் சாயா அதர்வண வேத விற்பன்னரும் பீடத்தின் தலைவருமாகிய மேன்மை தங்கிய **ஸ்ரீ வி. வி. ஸ்ரீதர் குருஜி** அவர்களால் லோக கல்யாணத்திற்கென நடத்தப்படவுள்ளது. மேலும், அகால மரணத் தவிர்ப்பு, ஆபிசார ப்ரயோகங்களுக்கு முறிவும் மாற்றுதலும், குடும்ப பந்த வளர்ச்சிக்காகவும், பித்ரு தோஷத்தால் நித்ய வாழ்வில் எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு பெறவும் இம்மஹா யக்ஞம் நடத்தப்பெறவுள்ளது.



ஸ்வர்ணாகர்ஷண பைரவரை யக்ஞத்தில் பூஜிப்பதின் வாயிலாக நல்லிணக்கமும் அமைதியும், யாவருக்கும் பொருள் செறிவும் (Material Prosperity) கிடைக்க வழிபாடு நடத்தப்படும்.

ஸ்ரீ காலேஷ்வரம் ஓர் பைரவ க்ஷேத்திரம், இச் க்ஷேத்திரத்தில் காலேஷ்வரர், முக்தேஷ்வரர் என்ற இரண்டு சிவலிங்க மூர்த்தங்கள் ஒரே பாணவட்டத்தில் அமையப் பெற்றுள்ளது ஓர் சிறப்பு அம்சமாகும். பிரதான கோவிலில் லிங்கத்தின்மீது செய்யப்படும் பால் அபிஷேகம் அருகிலுள்ள கோதாவரி நதியில் சங்கமித்தல், கோயிலிலிருந்து கோதாவரி நதிக்கு பாதாள நீர்வழிப்பாதை உள்ளதை உரைக்கும் ஓர் அதிசயம்.

தொடர் வரிசையில் **44வது** யக்ஞமாக ஆகஸ்டு 3ந் தேதி (2000) அன்று ஆதி முக்தேஸ்வரர் கோவிலில், (பிரதான கோவிலிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில்) ஸ்ரீ குருஜி அவர்கள் இவ்யக்ஞத்தை நடத்தவுள்ளார். ஆகஸ்டு 5ம் தேதி மஹா சங்கல்பம், ப்ராரம்ப பூஜை, அஸ்த்ர ப்ரயோகமும், ஆகஸ்டு 6ந் தேதி யாகசாலை பூஜை, ப்ரதிஷ்டை முதலியனவும், ஆகஸ்டு 7ந் தேதி தொடர் வரிசையில் **45வது** மஹா யக்ஞமும் நடைபெறும்.

தொடர்ந்து நாள்பட்ட வியாதிகளிலிருந்து (Chronic Diseases)

ஸம்புடித பீஷண மஹா யக்ஞம்

நிவாரணம் பெற இத்தன்வந்த்ரி மஹாயக்ஞம் பெரிதும் பயன்படும். சிகிச்சைக்கான பெருமுயற்சியாக பல்வேறு மூலிகைப் பொருட்கள் தன்வந்த்ரி மந்த்ர உச்சாடனத் துடன் இவ்யக்ஞத்தில் வேயப்படும்.

செயற்கைத் தடைகளான சாதி, சமயம், மதம், மொழி அன்றி நாடு, நகரம் ஆகியவற்றின் தளைகளில் ஸ்ரீ குருஜி அவர்கள் நம் பிக்கையற்றவர். விரும்பி வருகைபுரியும் அனைவருக் கும் தனித்துக் கலந்து கொள் ளும் வாய்ப்பு தரப் படும். ஆடவர் வேட்டியும், பெண்டிர் சேலையும் அணிதல் அத்யாவசியம்.



இவ்யக்ஞத்தில் கலந்து கொண்டு திருவருளையும், குரு வருளையும் ஒருங்கேப்பெற எல்லா பக்தர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தங்க இடவசதி அமைத்துத் தருதலில் எல்லா முயற்சிகள் மேற் கொண்டிருப்பினும், பக்தர்களின் தங்குத் தேவையான சுய முயற்சி களும், ஏற்பாடுகளும் ஊக்குவிக்கப் படுகிறது.

யக்ஞத்தின் சமயம் நாராயண சேவை அளிக்கப்படும். இச்சீரிய பணிக்கு உடனிருந்து உதவிபுரிய விழையும் தாராள சிந்தையுள்ளவர் கள் தங்களால் இயன்ற பண உதவி யையோ, பொருதவியையோ "ஸ்ரீ ஜ்வாலா டிரஸ்ட், சென்னை" என்று எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

சங்கல்பம் செய்து கொள்ள ரூ.101/- அனுப்பு வோர்க்கு ஓர் சிறிய டாலரும், பிரசாதமும்

ரூ.251/-அனுப்பு வோர்க்கு ஓர் பெரிய டாலரும், பிரசாத மும்

ரூ.501/-அனுப்பு வோர்க்கு ஓர் திரிசூல மும்; பிரசாதமும்

ரூ.1001/- அனுப்பு வோர்க்கு ஓர் சிறிய டாலரும், பெரிய டாலரும், ஓர் திரிசூலமும் மற்றும் பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும்.

இத்துடன் ரூ.25/-ஐ சேர்த்து அனுப்பினால், ரிஜிஸ்டர் தபாலில் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்புவோர்க்கு U/S 80-G வருமான வரி விலக்கு சலுகை உண்டு.

ஸ்ரீ ஜ்வாலா டிரஸ்ட்,


செயலாளர், A.சந்த்ர சேகர்,

M/s. B.M. சில்க் சாரீஸ்,

எண்.5, வடக்கு மாட வீதி, மைலாப்பூர்,
சென்னை - 600 004. ✆ : 4940291
லோகா : ஸமஸ்தா : ஸுகினோ பவந்து

குறிப்பு : இந்த மஹா யக்ஞத்தில் பங்கு கொள்ளவிரும்புவோர் (For Train Booking) தொடர்பு கொள்ள வேண்டிய எண் : திரு. ராமச்சந்திரன், செல்போன் : 9840033803

ADVT.



மேலே பறந்து கொண்டிருந்த விமானத்தின் காக்பிட்டில் நடப்பது தெரியாமல் பயணிகள் சகஜமாக இருந்தனர். கீழே பெரும் கட்டடங்கள் எறும்புகள் போலவும், மனிதர்களே இல்லாதது போலவும் தோற்ற மளித்த விந்தையை ரசித்துக் கொண்டிருந்தனர் ஜன்னலோர இருக்கை கிடைத்தவர்கள்.

தனக்குள் எழுந்த பதற்றத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்த சுவாதி நிலைமையைச் சீராக்க முயற்சித்தாள்.

"சார், பைலட்டைத் தூக்கி அந்தப் பக்கமாகப் படுக்க வையுங்க." உடனடியாக ஃப்ளைட் என்ஜினியர் அவள் சொன்னதைச் செய்தார்.


"அவர் சட்டையைத் தளர்த்துங்க. அந்த ஆக்ஸிஜன் மாஸ்க்கைப் பொருத்துங்க. மூச்சு சீரா வரலேன்னா, செயற்கை சுவாசம் கொடுங்க, க்விக்."

தனக்கு அவளிட்ட உத்தரவுகளை மின்னல் வேகத்தில் செயல்படுத்தியபோதே, பைலட்டின் இடத்தில் தோரணையுடன் சுவாதி உட்கார்ந்து கொண்டதையும், கலவரமில்லாமல் இயக்கியதையும் கண்டு மனதில் ஒரு சபாஷ் போட்டுக் கொண்டார் அந்த என்ஜினியர்.

சில நிமிடங்களில் ராம்நாத்தின் சுவாசம் சீரானது. ஆனால் களைப்பு தொடர்ந்தது. ஒரு திடீர் வேகக் காற்று எங்கிருந்தோ கிளம்பி வந்து விமானத்தின் சீரான முன்னேற்றத்தைத் தடுத்து அதன் பாதையைத் திருப்பியது.

'சரியான இலக்கு நோக்கிச் செல்கிறோமா?' சுவாதிக்கு ஏற்பட்ட கவலை மேலும் பெரிதாகும்படி வேறு சில சூழல்கள். எதிர்பாராது மழை கொட்டத் தொடங்கியது. கூடவே பனிப்படலம். பூமி சரியாகத் தெரியவில்லை.

'பொறு மனமே கலவரப்படாதே' என்று தனக்குத்தானே உத்தரவிட்டுக் கொண்டாள். ஒருவழியாக பம்பாய் விமான நிலையம் நெருங்கிவிட, கட்டுப்பாட்டு அறை



25

யிலிருந்து சிக்னல் கிடைக்கத் தொடங்கியது.

"என்னது பைலட் ராம்நாத்துக்கு மாரடைப்பா? நீங்களே விமானத்தை மேனேஜ் செய்கிறீர்களா? கவனம் தேவை. மெதுவாக ரன்வேயில் இறங்குங்கள். விமானத்தை வலது பக்கமாக இருபது டிகிரி திருப்புங்கள்."

தன் காலடியில் இருந்த வலது பெடலைத் துல்லியமாக சுவாதி அழுத்த, ரட்டர் வலதுபுறமாக நகர்ந்தது. விமானமும். எனினும் முதல் சுற்றில் சரியாக இறங்க முடியவில்லை. பனி!

இந்நேரம் விமானப் பணிப்பெண்களுக்கு அபாயம் ஓரளவுக்கு உறைத்து விட்டது. காக்பிட்டுக்குள் நுழைந்த சீனியர் ஏர் ஹோஸ்டஸ் நிலைமையைக் கண்டு பதறினாள். 'இதுவரை இந்த இளம்பெண் விமானத்தை ஓட்டி நான் பார்த்ததேயில்லையே, ஜீஸஸ், எங்களைக் காப்பாற்று' என்றபடி சக தோழிகளிடம் தயார் நிலையில் இருக்கும்படி கூறினாள்.

பனிமூட்டம் மாபெரும் எதிரியாகத் தோன்றியது ராவணனாக! அம்மாவைப் பார்க்க முடியாமல் செய்யக்கூடிய அரக்கனாக! சுவாதி தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள். "இந்த ஜடாயுவை வெல்ல முடியாது, ராவணா. என் அம்மாவைப் பார்க்காமல் நான் இறக்க மாட்டேன். அதற்கு எதிராக வரும் எந்த ராவணனையும் மன்னிக்க மாட்டேன்."

மீண்டும் ஒரு சுற்று சுற்றிவிட்டு விமானத்தை இறக்க முயன்றபோதுதான் சற்று தூரத்தில் இருந்த அந்தக் கட்டடம் அவள் பார்வையில் பட்டது. ஒன்று, அதற்கு வெகு அருகில் சென்று மயிரிழையில் தப்பி விமானம் நிற்கப் போகிறது. அல்லது அந்தக் கட்டடத்தின் மீது பெரும் சக்தியுடன் உரசி தீப்பற்றி எரியப் போகிறது. அப்படியானால் பேரழிவுதான்.

இனி வேறெதுவும் செய்ய முடியாது. 'பல உயிர்களின் மறைவுக்குக் காரணமாகத் தன்னை யாரும் சொல்லக் கூடாது' மனத்துக்குள் வேண்டிக் கொள்ளத் தொடங்கினாள் கடவுளை – தன் தாயை.

கட்டடத்தை விமானம் வெகுவேகமாக ஒருவித ஆக்ரோஷத்துடன் நெருங்கியது.

"ஐயோ, ஆன்ட்டி என் கால்கள் தரையிலேதான் பதிஞ்சிருக்கு. நான் முழுசா உயிரோடுதான் இருக்கேன்" என்று சுவாதி புன்னகையுடன் சொன்னதைக் கோமளா பொருட்படுத்துவதாக இல்லை. கண்களில் நீர் வழிய அவளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். "எப்படிப்பட்ட கண்டத்திலேயிருந்து தப்பிச்சு வந்திருக்கே. ராஜ்குமார் வடபழனிக்குப் போயிருக்கார் உன் பேரிலே அர்ச்சனை செய்ய" என்றாள்.

"ஏன், நாளைக்குப் போனால் நானும் அவரோடு போயிருப்பேனே?"

"அதெப்படிம்மா நீ அதுக்குள்ளே கோவிலுக்குப் போக முடியும்?" என்று சட்டென்று கோமளா கேட்டபோது அவள் குரலில் சுருதிவிலகல். பிறகு டக்கென்று, "உன்னைப் பேட்டி காண எவ்வளவு பேர் வருவதாக இருக்காங்க தெரியுமா? நண்பனுக்கு மட்டும் சில எக்ஸ்க்ளூஸிவ் பகுதிகளை வச்சுடு" என்றாள்.

சுவாதிக்கு பிரமிப்பு தீரவில்லை. இரு தினங்களுக்கு முன்புதான் பம்பாயில் டைம்ஸ் ஆஃப் இந்தியா, அப்சர்வர், இந்தியன் எக்ஸ்பிரஸ் என்று பல நாளிதழ்களின் நிருபர்கள் அவளைப் பேட்டி கண்டிருந்தனர்.

கட்டுப்பாட்டு அறையிலிருந்த அதிகாரிகளும், பிற பைலட்டுகளும் அவளை மாறி மாறிக் கைகுலுக்கியதில் லேசான வலி கூட ஏற்பட்டிருந்தது – இன்பவலி.

'இளம்பெண் – முதல் ஃப்ளைட்டிலேயே திடீர்த் திருப்பங்கள் – சாகசத்துடன் ஒரு மாபெரும் விபத்தைத் தவிர்த்தது. இவ்வளவு போதாதா? எல்லா நாளிதழ்களிலுமே முதல் பக்கத்தில் அன்று சுவாதியின் புகைப்படம் இடம்பெற்றிருந்தது.

நாளிதழ்களைப் பொறுத்தவரை தவிர்க்கப்பட்ட விமான விபத்து பற்றிய விவரங்கள் அப்போதைக்குப் போதுமானதாக இருந்தன. ஆனால் வார, மாத இதழ்களிலிருந்து தன்னைக் காண இன்றிலிருந்து வரவிருக்கும் நிருபர்களுக்குத் தன் வாழ்க்கை வரலாறு முக்கியமாகப் படும் என்பது சுவாதிக்குத் தெரிந்திருந்தது. 'விவாகரத்து பெற்ற பெற்றோர் – அப்பா இறந்து போக, அம்மாவைத் தேடி வந்து இன்னமும் அவளைச் சந்திக்க முடியாத அவலம்' – பத்திரிகைகளுக்கு இவை எவ்வளவு அற்புதமான தகவல்கள்!

ஆட்டோவில் ஏறி தின நண்பன் இதழுக்குச் சென்ற போது டிரைவர் கூட அடையாளம் கண்டுகொண்டார். வண்டியை ஓட்டியபடியே அவளை ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்து, "அட பைலட் அம்மாவா? இவ்வளவு பெரிய சாதனை படைச்சவங்க என் ஆட்டோவிலே ஏறியிருக்கீங்களே. நான் இதற்கு எப்படி ஈடு செய்யப் போறேன்?" என்று உணர்ச்சிவசப்பட்டார்.

"வேறே எதுவும் வேண்டாம் சார். பார்த்து வண்டியை ஓட்டினாலே போதும். 'ஒரு பெரும் விமான விபத்தை தவிர்த்த சுவாதி என்ற இளம்பெண், ஆட்டோ விபத்தில் மரணமடைந்தார்' என்கிற மாதிரி ஆக்கிடாதீங்க" என்று புன்னகையுடன் சொல்ல, ஆட்டோ டிரைவர் ஒரு அசட்டு சிரிப்புடன் முன்னிலும் கவனத்துடன் வண்டியை ஓட்டத் தொடங்கினார்.

பணம் வாங்க மறுத்த அவரிடம் ஒரு சின்னப் போராட்டத்துக்குப் பிறகுதான் கட்டணத்தைக் கொடுக்க முடிந்தது.

சுவாதீனமாக ராஜ்குமாரின் அறைக்

"டெக்னாலஜி முன்னேறுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கலே!"

"விடப்பா! சூடு வைக்க முடியாத புதிய மீட்டரை அரசாங்கம் ஆட்டோவில் பொருத்திட்டதையே எப்பப் பார்த்தாலும் நினைச்சுக்கிட்டு...!"

— உ. ராஜாஜி



குள் நுழையப் போனபோது அம்மாவின் பெயர் அடிபடவே தன்னிச்சையாக சுவாதியின் கால்கள் நின்றன.

"சத்யா விஷயத்தை சுவாதியிடமிருந்து இன்னும் அதிக நாட்களுக்கு மறைக்க முடியும்னு தோணல்லே" என்றது ராஜ்குமாரேதான்.

"அதிக நாட்களா? நீங்க வேறே! பத்திரிகைகளெல்லாம் இப்போதே சுவாதியின் தனி வாழ்க்கையைப் பற்றித் தோண்டித் துருவ ஆரம்பிச்சுட்டாங்க. முழு விவரத்தையும் அவங்க தெரிஞ்சுக்க நேரமாகாது. நாமே இதை சுவாதியிடம் சொல்லி விடுவது தான் நல்லது" இது சங்கீதா.

இருவருமாக வெளியே வந்தபோது அங்கே முகம் வெளுத்துப் போய் நின்றிருந்த சுவாதியைப் பார்த்துத் திடுக்கிட்டனர்.

"என்ன ஆச்சு எங்கம்மாவுக்கு? ஒரு வேளை என்னைப் பார்க்காமலேயே அவங்க இறந்துட்டாங்களா?"

ஆறுதலாக அவள் தோளைத் தட்டிய ராஜ்குமார், "அப்படிச் சொல்ல முடியாது சுவாதி. நீதான் நாம் சாந்தி நர்ஸிங் ஹோமுக்குப் போன போது உங்கம்மாவைப் பார்த்தியே."


"என்ன உளர்றீங்க?" என்று வீறிடலாகக் கத்தியபோதே அவள் மனம் அந்த நர்ஸிங்ஹோமில் தான் கண்ட நோயாளிகளின் முகங்களை வெகு வேகமாக புரட்டிப் பார்த்தது. அவற்றில் எந்த முகத்திலும் அம்மாவின் சாயல் இல்லை.

ராஜ்குமார் குரல் கமறக் கூறினார். "இதய மாற்று சிகிச்சை செய்துகிட்ட காப்டன் விஷ்ணுராமின் மனைவி, மாற்று நுரையீரல் பொருத்தப்பட்ட நந்தகோபால், உன் புடவையைப் பாராட்டிய புது விழி பொருத்தப்பட்ட சிறுமி – இவங்களிட்டேயெல்லாம் உங்கம்மா உயிரோடு இன்னமும் இருக்காங்க சுவாதி" என்றார்.

(தொடர்ந்து பறக்கும்)

அவங்களுக்கு இல்லை சட்டம்!

வீட்டுக்கு முன்னால் கொஞ்சம் காலியிடம் இருக்கிறது. அதில் ஆஸ்பெஸ்டாஸ் வைத்து கிரில் போட்டு ஒரு வராந்தா மாதிரி செய்தால்...? கார்ப்பரேஷன் அபராதம் கட்டச் சொல்லும். இது மாதிரியான கஷ்டங்கள் நமக்கு மட்டும்தான். அரசியல் கட்சிகளுக்கு இல்லை. அவர்கள் தங்கள் கட்சி அலுவலகங்களை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கட்டிக் கொள்ளலாம். இடிக்கலாம். ஆமாம். டெல்லியில் நம்பர் 24, அக்பர் ரோட்டில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் உள்ள காலியிடங்களில் புதிது புதிதாய் அலுவலகங்கள் முளைத்த வண்ணம் உள்ளன. அயல் நாட்டு விவகாரங்களை அலசும் அறை, பொருளாதார விஷயங்களை விவாதிக்கும் அறை என்று நீளவாக்கில் நீண்டு கொண்டே போகிறது. பி.ஜே.பி. கட்சி அலுவலகமும் கொஞ்சம் கூட சளைத்தது இல்லை. சிறுபான்மையினரின் நலன்(!) பற்றிய பிரிவு, விவசாயிகள் பிரிவு அடங்கிய கட்டடத் தொகுப்பு மெயின் பில்டிங்கோடு சம்பந்தப்பட்டதே இல்லை. அதுவாவது போகட்டும். 1998–ல் ஆட்சிக்கு வந்த பிறகு அங்கு மிக பிரம்மாண்டமாய் எழுந்துள்ள ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் கான்பரன்ஸ் ஹால்தான் கண்களை உறுத்துகிறது.



விசாரித்ததில் பி.ஜே.பி. துணைத் தலைவர் ஜே.பி. மாத்தூர் அளித்த விளக்கம்: "பில்டிங் சட்டங்கள் எங்களுக்குப் பொருந்தாது. அரசு சம்பந்தப்பட்ட இடங்களுக்கெல்லாம் தனி அந்தஸ்து உண்டு. பாராளுமன்றத்துக்கு மட்டும்தான் கட்டுப்பட்டது. நாங்கள் அரசாங்கம். அப்படித்தான் இருக்கும்." கட்சி அலுவலகங்கள் எப்படி அரசாங்கம் ஆயின? என்று புரியவில்லை. காங்கிரஸ் வட்டாரத்தில் விசாரித்ததில் நமக்கேன் வம்பு என்று எவரும் வாயைத் திறக்க மறுக்கிறார்கள்!

– மெலட்டூர் நடராஜன்



M ஆங்கிலமே

"மணி 7.30 ஆகப் போவுது. இன்னும் தூங்கிக்கிட்டிருக்கான். அவனை எழுப்பு."

"Mummy காலைல அஞ்சு மணிக்கு என்னை எழுப்பிடுங்க. நெறய படிக்க வேண்டியிருக்கு."

"6 – 7.30 முகூர்த்தம். மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை எழுப்புங்க. மணி அஞ்சு ஆயிடுச்சு."

இது போல தூங்கிக்கிட்டிருக்கறவங்களை எழுப்ப "wake up"ங்கற வார்த்தையை use பண்ணலாம்.

"அவனை எழுப்பு"னு சொல்லும்போது wake up himனு சொல்றது சரியில்ல. wake பக்கத்துல himங்கற வார்த்தையைச் சேர்த்து இந்த 'up'ங்கறதை கடைசியில கொண்டு வந்து 'wake him up'னு சொல்லணும்.

இதே போல "என்னை அஞ்சு மணிக்கு எழுப்புங்க"னு சொல்லும்போதும் wake up meனு சொல்லாம wake me up at 5 O' clockனு சொல்லுங்க.

சரி எல்லாத்தையும் இன்னொரு வாட்டி சொல்றேன்.. கவனிங்க.

Wake him up – அவனை (அவரை) எழுப்பு.

Wake me up – என்னை எழுப்பு.

Wake them up – அவர்களை எழுப்பு.

இதே போல இன்னும் இரண்டு வார்த்தைங்க இருக்கு. ஒண்ணு 'ring up' ரெண்டாவது 'pick up'.

'நான் உனக்கு போன் பண்றேன்' என்பதை I will ring you up'னு சொல்லலாம்.

'அவன் எனக்கு போன் பண்ணினான்' என்பதை 'He rang me up'னு சொல்லுங்க.

இதே போல நீ அங்கேயே wait பண்ணு நான் அங்கே வந்து உன்னை 'Pick up' பண்ணிக்கறேன் என்பதை "wait there, I will come and pick you up"னு சொல்லுங்க.

I will pick up youனு சொல்றது சரியில்லை. I will pick you upனுதான் சொல்லணும்.

என்ன.... புரியுதா?

"ஏய்... ரவி... நாங்க பேசிக்கிட்டிருக்கோம் இல்ல. இவ்வளவு சத்தமா வச்சுக்கிட்டு நீ டீ.வி பாத்துக்கிட்டிருக்கியே, இவர் என்ன பேசறார்னு காதுலயே விழலை" டீ.வி.யை

விழுப்புரம் வந்ததும் எழுப்புங்க

சார், நான் விழுப்புரத்துல இறங்கணும் என்னை எழுப்பி விடுங்க என்று சக பயணியிடம் இங்கிலீஷில் சொல்ல Sir, 'I am to get down at Villupuram. Please wake me up' என்று சிலர் சொல்வதுண்டு.

நீங்கள் கவலையில்லாமல் தூங்கி விழுப்புரத்தில் இறங்குவதற்காக உங்களுடன் பயணம் செய்யும் பயணி உங்களுக்காக விழித்திருக்க வேண்டுமா என்ன?

இது போன்ற சந்தர்ப்பங்களில் Sir, will you please wake me up at Villupuram, if you are awake? என்று சொல்வதுதான் நல்லது.

"தாங்கள் விழித்திருந்தால் என்னை விழுப்புரம் வந்ததும் எழுப்புகிறீர்களா?" என்பது இதன் அர்த்தம்.

வி. ராஜகோபாலன்



அணைச்சுத் தொலை! என்று தம்பியிடம் கத்துவோம்.

இது போன்ற சந்தர்ப்பங்களில் இங்கிலீஷ்ல கத்தணும்னு நீங்க ஆசைப்பட்டா ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி முதல்ல தெரிஞ்சுக்கணும்.

Lightஐப் போடு, Fanஐ அணை என்று நாம் சொல்றோம். இதை இங்கிலீஷ்ல சொல்லும்போது

Lightஐ போடு என்பதற்கு 'on' என்ற வார்த்தையையும், fanஐ அணை என்பதற்கு 'off' என்ற வார்த்தையையும் use பண்ணணும்.

'போடு'ங்கறதை அப்படியே மொழி பெயர்த்து 'put the light'னு சொல்றது தப்பு

அருகில் வா!

இல்லியா?

சரி,

விளக்கைப் போடு, அதாவது lightஐ போடு என்பதை 'switch on the light'னு சொல்லணும்.

விளக்கை அணை எனும்போது 'switch off the light'னு சொல்லணும்.



விளக்கு என்று இங்கே நாம் குறிப்பிடுவது Bulb அல்லது 'tubelight'

எண்ணெய் ஊற்றி நாம் எரிய விடும் விளக்கு அல்ல. இது போன்ற விளக்கை 'lamp' என்று சொல்வோம் அல்லவா?

விலகியிருப்பது நல்லதுங்க!

ஒன்றிலிருந்து விலகியிருப்பதைத் தெரிவிக்க "off" என்ற வார்த்தை பயன்படுகிறது. 'Politics' என்ற வார்த்தைக்கு அரசியல் என்று ஒரு அர்த்தமும் உண்டு.

தற்பொழுது நாட்டில் நிலவும் நிலைமையைப் பார்த்தால் அதிலிருந்து விலகியிருப்பதே நல்லது என்று தோன்றுகிறது அல்லவா?

இதை இங்கிலீஷில் தெரிவிக்க It is better to keep off politics என்று சொல்லலாம்.

பூங்காக்களில் 'keep off the grass' என்ற அறிவிப்புப் பலகையை கவனித்திருப்பீர்கள். புல்தரை மீது நடக்காதீர்கள் (விலகிச் செல்லுங்கள்) என்பது இதன் அர்த்தம்.

விளக்கை ஏற்று என்று சொல்லும்போது switchங்கற வார்த்தையை use பண்ணாம 'Light the lamp'னு சொல்லணும்.

சரி, 'டீ.வியை அணைத்து விடு' என்று சொல்லும்போது 'switch off the T.V' என்று சொல்லுங்கள்.

டீ.வியை போடு எனும்போது 'Switch on the T.V' என்று சொல்லுங்கள்.

ஆனால் அதை (T.V யை) 'அணைத்துத் தொலை! என்று சொல்லும்போது

'Switch off it'ன்னு சொல்றது தப்பு. 'Swich it off'ன்னுதான் சொல்லணும்!

மத்த விஷயங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

ஜூலை 12 முதல் 18 வரை
அக்னி சர்மா பக்கம்

நகை வாங்கும் யோகம்!

மேஷம் :

பெரும்பாலான கிரகங்கள் சாதகமா இருக்கறதால நீங்க கவலைப்படவேணாம். எந்த ஒரு இடத்துலயும் உங்களுக்கே முதல் மரியாதை! தவிர, புதுசா தொடங்கற காரியங்கள் எதுவானாலும் டைடல் பார்க் மாதிரி ஓங்கி வளரும். அரசு விவகாரங்கள் அனுகூலமான பலன் தரும். கொடுக்கல் வாங்கல்ல கவனம் அவசியம். பணப் பிரச்னை இருக்காது. பெண்களுக்கு நகை வாங்கும் யோகம் இருக்கு.

பேச்சுல நிதானம் தேவை!

ரிஷபம் :

வீண் அலைச்சல், கடும் உழைப்பு, அசதி கூடும். மனசுல ஏதாவது குழப்பம் இருந்துட்டே இருக்கும். உடல் நலத்துல எச்சரிக்கையா இருங்க. பல காரியங்கள் செய்ய முடியாம தடைப்படும். பேச்சுல நிதானம் அவசியம். ஆனா கலைஞர்களுக்கு இந்தப் பிரச்னைகள் இருக்காது. ராகு கொஞ்சம் சாதகமா இருக்கறதால எதையும் சமாளிக்கும் துணிச்சல் உண்டாகும்.

எச்சரிக்கை அவசியம்!

மிதுனம் :

எந்தப் பணியிலும் சிறு சங்கடங்கள் குறுக்கீடுகள் இருக்கும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடறது நல்லது. வழக்கமா செய்யற காரியங்களே இழுபறியா இருக்கும்ங்கறதால எச்சரிக்கை அவசியம். சிலருக்கு வயிறு, தோளில் பிரச்னை ஏற்படலாம். ஸ்புட்போர்ட் காதலர்களுக்கு சிறு விபத்து இருக்கும். மரியாதையா பஸ் உள்ள போயிடுங்க. வஸ்துப் பணியாளர்கள் கணக்குல எச்சரிக்கையா இல்லாட்டா, சிக்கல் ஏற்படற வாரம் இது.

பாராட்டு மழை!


கடகம் :

புத்திசாலித்தனம் வெளிப்படும். நீண்ட நாள் கனவுகள் நனவாகிற நேரம் இது. புதிய முயற்சிகளை தாராளமா தொடங்கலாம். பொருளாதார ரீதில நல்ல வளமாவே இருப்பீங்க. சில சுபகாரியங்கள் நடக்கவும் சந்தர்ப்பம் கூடி வரும். கலைஞர்களுக்குப் பெயர், புகழ், பாராட்டு மழைல நனையற நேரம் இது. பயணங்கள் சில இருக்கும். பர்ஸை பத்திரமா வெச்சிக்கங்க!

காதலுக்குப் பச்சைக்கொடி!

சிம்மம் :

இது வரைக்கும் தொழில்ல இருந்துவந்த எதிர்ப்புகள் குறைய ஆரம்பிக்கற நேரம் வந்தாச்சு. நினைச்சதை முடிக்கறதுல தடங்கல் எதுவும் வராது. வீட்டுல குதூகலம் கூடும். ஒரு முக்கியமான சுப நிகழ்ச்சி நடக்கும். விருந்தாளிங்க வந்துட்டே இருப்பாங்க. செலவுதான். ஆனா சந்தோசமா செய்வீங்க. அரசு ஊழியர்களுக்கு ப்ரமோஷனோ, வேறே ஏதாவது சலுகையோ கிடைக்கும். பெண்கள் காதல் அல்லது திருமணக் கனவு கண்டு கிட்டிருந்தா இப்ப பச்சைக் கொடிதான்!



வெளிநாடு சான்ஸ்!

கன்னி :

வாழ்க்கை வசதிகள் கூடும். வீட்டு உபயோகப் பொருட்கள் நிறைய வாங்குவீங்க. சிலருக்குத் தொலைதூரப் பயணம் ஒண்ணு இருக்கும். வீடு, மனை வாங்க யோகமும் உண்டு. கட்டிடக் கான்ட்ராக்டர்கள், கல்யாண புரோக்கர்களுக்கு வருவாய் கூடும். எழுத்தாளர்களுக்கு இலேசான கற்பனை வறட்சி இருக்கும். சிலர் பூர்வீக சொத்துகளை விக்கற முயற்சில ஈடுபடுவாங்க. சிலருக்கு எதிர்பாராத வெளிநாடு சான்ஸ் அடிக்கவும் வாய்ப்புண்டு.

சங்கடங்கள் ஏற்படும்!

துலாம் :

எதையும் பலமுறை யோசித்து செயல்பட வேண்டிய வாரம். உடல் நலன் சீரா இருக்காது. வீண் அலைச்சல், பணச் சங்கடங்கள்

ஏற்படும். பொருள் இழப்பும்தான். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. உடன் பிறந்தவங்களால சில சங்கடங்கள் ஏற்படலாம். தொழில்ல மறைமுக எதிரிகள் கை கொஞ்சம் ஓங்கியிருக்கும். அதிகம் பேசாம, செயல்ல தீவிர கவனம் காட்டறது ரொம்ப நல்லது..

விருது வருது

விருச்சிகம் :

சொகுசு பஸ் மாதிரியான வாழ்க்கை சார் உங்களுக்கு. உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய திட்டங்கள் பல தோன்றும். கலைஞர்களுக்கு விருதுகள் சேரும். பணப் பற்றாக்குறையே வராது. கணவன் மனைவி உறவு சீரா இருக்கும். சிலருக்கு நிலம் வாங்கற யோகம் இருக்கு. சினிமாக் காரங்களுக்கும் பழைய பாக்கிகள் வசூலாகும். பெண்களுக்கு ஆன்மீக நாட்டம் அதிகமா ஏற்படும்.

சிறு உபாதைகள் வரலாம்!

தனுசு :

பெரும்பாலான கிரகங்கள் சாதகமா இல்லை. எதிலும் கவனமா இருக்க வேண்டியது அவசியம். குறிப்பா, புதிய மனிதர்களிடம் ஜாக்கிரதையா நடந்துக்கிங்க. பிசினஸ் பார்ட்னரால சிறு தொந்தரவுகள் ஏற்படலாம். விட்டுக் கொடுத்து நடந்துக்கணும். வீடு, மனை வாங்க இது சமயமில்லை. கொஞ்சம் தள்ளிப் போடுங்க. கேஸ் எதுவும் இருந்தா, வாய்தா வாங்கப் பாருங்க. சிலருக்கு ஜுரம், தலைவலி மாதிரி உபாதைகளும் வரலாம்.

மகர ராசிக்காரரான பாடகர் ஸ்ரீனிவாஸுக்கு பிரமாதமான நேரம் வந்திருக்காம்.

நடக்குமென்பார் நடக்கும்!

புகழ், செல்வம் சேரும்

மகரம் :

பிரமாதமான நேரம் வந்திருக்கு. கடகடன்னு உங்க பெண்டிங் வேலைகளை எடுத்து முடிக்கப் பாருங்க. குடும்பத்து மனஸ்தாபங்கள் தீரும். புதிய வேலை வாய்ப்புகள் சிலருக்குத் துவங்கும். பயணத்தால ஆதாயம் உறுதி. கலைஞர்களுக்கும் கணக்கு வாத்யார்களுக்கும் புகழும் செல்வமும் சேரும். கம்ப்யூட்டர் விஞ்ஞானிகளுக்கு வெளிநாடு போய் வர வாய்ப்புக் கிடைக்கும். பணப் பிரச்னை இல்லாத வாரம்.

எதிர்ப்புகள் அடங்கும்!

கும்பம் :

காரியங்களை வேகமா செய்து முடிப்பீங்க. எதிர்ப்புகள் அடங்கியிருக்கும். தெய்வபலம் கூடி இருக்கறதால முகத்துல தனிப் பொலிவு உண்டாகும. ஆன்மீக யாத்திரை போற வாய்ப்பு சிலருக்கு வரும். அரசுப் பணியாளர்களுக்கு அரியர்ஸ் இருந்தா வந்து சேரும். மாணவர்கள் படிப்புல ஜொலிப்பாங்க. விளையாட்டு வீரர்களுக்கு வெற்றி உறுதி. வெளி இடங்கள்ல சாப்பிடறதைத் தவிர்க்க முடிஞ்சா உடம்புக்கு ரொம்ப நல்லது.

வீட்ல விஷேசம் வருது!

மீனம் :

சோம்பலுக்கு இடம் கொடுக்காதிங்க. செய்ய வேண்டிய காரியம் நிறைய இருக்கு. வீட்டுல ஒரு விசேஷம் நடக்கப் போவுது. கலைஞர்களுக்கு இப்ப அதிர்ஷ்டம் அடிக்கற நேரம். அரசுத்துறை, வர்த்தகம், காண்ட்ராக்ட் வேலை செய்யறவங்களுக்கு வளமான நேரம். பெண்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். நீண்ட நாள் கனவு ஒண்ணு இப்ப நனவாகும். சிலருக்கு கடல் கடந்த பயண வாய்ப்பும் இருக்கும்.

''ஒரு சேலை வாங்க அஞ்சு பேர் வந்து ஆறு மணி நேரம் அலசினாங்க...''

''அப்புறம் எதை வாங்கினாங்க?''

''பக்கத்துக் கடையில கேட்டால்தான் தெரியும். அப்புறம் அங்கேதான் போயிருக்காங்க!''

— பர்வதவர்த்தினி



''இந்த அட்ரஸ் எங்கேன்னு பார்த்துச் சொல்ல முடியுமா?''

''நேரா நடந்து, லெப்டுல போய், ரைட்ல கட் பண்ணி, சந்துக்குள்ள போங்க, அங்கிருந்து லெப்ட்ல கட்டாகி 25ம் நெம்பர் வீட்டுல என் ஃப்ரெண்ட் இருக்கான்... அவனைக் கேட்டா கிளியராச் சொல்வான்!''

— ஜூனியர் சக்தி



''ஏண்டா... ஹோம்ஓர்க் செய்துட்டு வரலே...?''

'''அம்மா சொல்ற ஹோம்ஓர்க்குகளை செய்யவே நேரம் போதலை'ன்னு அப்பா கோபப்படறார், சார்!''


— மிஸ்டர் எக்ஸ்



''சத்து குறைஞ்சு போச்சுன்னு ஒரு வாரமா டாக்டர்கிட்ட போனீங்களே என்னாச்சு?''

''இப்ப சொத்து குறைஞ்சு போச்சு...!''

— டி.என். சத்யா முருகவேல்



சோக சுந்தரியாக சுஜிதா!

'கரெக்ட்! இது தலைவலி மாத்திரை தான். ஆனா... சாதாரணமா வர எல்லா மாத்திரைக்கும்.... ஸாரி... ஸாரி...'

மறுபடியும் ஆரம்பம்: கரெக்ட்! இது தலைவலி மாத்திரைதான்... ஆனா... ஒரு தடு மாற்றம்.

ரிபீட் : கரெக்ட்! இது தலைவலி...

''இந்தாம்மா வித்யா! இது தலைவலி மாத்திரைன்னு இங்கே இருக்கிற எல்லாருக்கும் தெரியும். கரெக்டா, டயலாக்கை முழுக்கச் சொல்லு'' என்றார் டைரக்டர் பரத்.

இன்னும் இரண்டு தடவை டேக் வாங்கியபின், வித்யாஸ்ரீ



• 'மலர்கள்' தொடரில்...

சரியாக வசனத்தைச் சொல்லி முடித்தார்.

''கரெக்ட்! இது தலைவலி மாத்திரை தான். ஆனா, சாதாரணமா வர, எல்லா தலைவலிக்கும் தர்ற மாத்திரை இல்லை. நீ சொன்னியே 'விதி'! அதுக்குக் கைகண்ட மருந்து இது'' இதுதான் வசனம்.

இடம் : அப்பு ஹவுஸ். ராஜ் டி.வி.யில் மத்தியான வேளையில் ஒளிபரப்பாகும் மெகா தொடரான மலர்கள் படப்பிடிப்பு.

விளக்குகள் அணைந்தன. டிபனுக்காக பிரேக். ஜாங்கிரி, எலுமிச்சை சேவை, காப்பி. சாப்பிட்டபடியே பேசினார் டைரக்டர் பரத்.

இவர் முந்தாள் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்காரர். விசு, மௌலி போன்றவர்கள் தமிழ் நாடக உலகைக் கலக்கிக் கொண்டிருந்த காலத்தில், மேடையேறியவர். இவரது புதியதோர் உலகம் செய்வோம், நெஞ்சங்கள் வாழ்த்தட்டும், தொடரும் அத்தியாயம் எல்லாம் சதம் போட்ட நாடகங்கள். இவரது முதல் நாடகமான புதியதோர் உலகம் செய்வோம், ஆனந்தக் கண்ணீர் என்ற பெயரில், சிவாஜி நடிக்க சினிமாவாக வந்தது.

இப்படி சினிமா பிரவேசம் நடந்தபின், பேங்க், சினிமா என் டபுள் ஆக்ஷன் சரிப்பட்டு வராமல், சினிமாவுக்கு முழுக்குப் போட்டு விட்டார்.

87ல் தூர்தர்ஷனில் தொடர்களுக்கு முக்கியத்துவம் கிடைத்த தருணம் சின்னத் திரைக்கு வந்தவர், இது வரை இருபத்து ஒன்பது தொடர்கள் இயக்கி விட்டார். குறிப்பிடத்தக்கவை:



• சுஜிதா



• பரத், "ந்தானம்

தமிழ்ச் சிறுகதைகள், வேர்கள், சூரியவம்சம், மீண்டும் கௌரவம் (சிவாஜி, பிரபு நடித்த ஒரே டீ.வி. தொடர்), பிறகு இப்போது இயக்கும் மலர்கள்.

"மலர்கள், ராஜம் கிருஷ்ணனின் கதை. பத்திரிகையில் தொடராக வெளிவந்த போதே அதை ரசித்துப் படித்தவன் நான். டீ.வி.யில் ஒரு மெகா தொடர் பண்ண சப்ஜெக்ட் தேவைப்பட்டபோது, உடனே நினைவுக்கு வந்தது மலர்கள்தான். ராஜம் கிருஷ்ணனின் கதையை மாற்றாமல், அதே நேரம் மெகா தொடர் என்பதால், ஆங்காங்கே சில சம்பவங்கள், சில கேரக்டர்கள் சேர்த்திருக்கிறேன். இன்று மத்தியானத் தொடர்களில் மிக பாபுலரான ஒன்று 'மலர்கள்' என்கிறார்'' பரத்.

கதையின் பிரதான பாத்திரம் சித்ரா என்ற சோக சுந்தரி. கிராமத்துப் பெண். சித்ராவாக நடிப்பவர் சுஜிதா.

"எனக்கு இது ரொம்ப சவாலான கதா பாத்திரம். ரொம்ப இன்வால்வ் ஆகி நடிக்கிறேன்'' என்கிறார் சுஜிதா. பதினோராம் வகுப்பு வரை பள்ளிக்கூடம் சென்று கொண்டிருந்தவர், இப்போது ஸ்கூல் போவதில்லை. மாதத்துக்குப் பதினைந்து நாள் லீவு என்றால், எந்த ஸ்கூலில் அனுமதிப் பார்கள்? எனவே, பிரைவேட் ஆக பிளஸ் டு பரீட்சை எழுதப் போகிறார்.

''சினிமா பக்கம் போகும் எண்ணமில்லையா சுஜி?"

"காற்றுக்கென்ன வேலி என்று ஒரு படம். ரொம்ப கஷ்டப்பட்டு நடித்திருக்கிறேன். அதன் ரிலீஸுக்காகக் காத்திருக்கிறேன். இரண்டு மலையாளப் படங்களில் நடித்து முடித்து விட்டேன். இரண்டும் ஹிட்!"

ஸ்கிரிப்ட் : **கௌதம் ராம்**

கேமரா : **யோகா**

மீசை வைத்த புத்தர்!

முசிறியிலிருந்து தாத்தையங்கார் பேட்டை செல்லும் வழியில் 16கி.மீ. தொலைவில் உள்ளது மங்கலம் என்னும் கிராமம். அந்தக் கிராமத்தில் அரவாண்டியம்மன் கோயில் மிகப் பிரசித்தம். மூலஸ்தானத்துக்கு அருகே வெளி மண்டபத்தில் ஆறடி உயரத்திற்கு இங்கே ஒரு கற்சிலை. சிலையின் முகத்தில் சற்றே மெலிதான நீண்ட மீசை நம் கண்களில் படுகிறது.

ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள அந்தச் சிலை ஆறடி உயரப் பீடத்தில் பொருத்தப்பட்டுள்ளது. பீடத்தின் ஐந்தடி உயரம் தரைக்குள் இருப்பதாக கூறுகிறார் கோயில் பூசாரி எம். முருகேசன்.



தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தத்துவ மையத்தில் 'சோழ நாட்டில் பௌத்தம்' என்கிற தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார்.

பிரிக்கப்படாத தஞ்சை—திருச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய சோழ நாட்டில், மங்கலம் கிராமத்தில் இருக்கும் இச்சிலை கிடைத்தற்கரிய மீசையுடன் கூடிய புத்தர் சிலை என்கிறார் ஆய்வாளர் ஜம்புலிங்கம்.

ஆனால், தலைமுறை தலைமுறையாக கோயிலில் அச்சிலையை வழிபட்டு வரும் கிராமத்து மக்கள் 'இது ஒரு புத்தர் சிலை' என்பதையே கவனத்தில் கொள்ளவில்லை.

வாணிபத்தில் நஷ்டமேற்பட்டு அதைச் சரிகட்டுவதற்காக கோயிலுக்குள் களவாட வந்தவர், நகைகளைக் கொள்ளையடித்து விட்டுத் திரும்பும் சமயம், அரவாண்டியம்மன் சபித்துவிட, கல்லாய்ச் சமைந்து போனார் என்னும் செவி வழிச் செய்தியை நம்மிடம் கூறுகின்றனர் கிராமத்துப் பெரியவர்கள். 'செட்டியார் ஸ்வாமி' என்றே இன்றளவும் வழிபட்டுப் போகின்றனர் பக்தர்கள்!

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



பதினாறு வயதினிலே!

திரையுலகிலிருந்து ஓரங்கட்டப்பட்டு விட்டதால், சினிமாக்காரர்கள் மீது ஏகக் கடுப்பில் இருக்கிறார் போலிருக்கிறது இசையமைப்பாளர், நடிகர் (சங்கர்) கணேஷ். பழிவாங்குவதற்குத் தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தபோது வசமாய் சிக்கிக் கொண்டு விட்டார் பாரதிராஜா. அவர் மகன் மனோஜு"ம், நடிகை மீனாவும் பாடியுள்ள, 'பதினாறு வயதினிலே' என்கிற இசை ஆல்பம் வெளியீட்டு நிகழ்ச்சியில்தான் தமது பழிதீர்க்கும் படலத்தை அரங்கேற்றினார் கணேஷ்!

இறைவணக்கம் என்று அவர் பாடிய பாட்டைக் கேட்டு, கருமாரி முதல் கந்தப் பெருமான் வரை 'யப்பா ஆளைவிடு' என்று பெரிதாய்க் கும்பிடு போட்டு விட்டு சென்னை மாநகர எல்லையை விட்டே ஓடியிருப்பார்கள்!

நல்ல காலம்! சாய், உமா ரியாஸ் இருவரும் மேடைக்கு வந்து, அனைவரையும் காப்பாற்றினார்கள். பானுப்ரியா, கமல், பூர்ணம் என்று இருவரும் மிமிக்ரியில் அசத்த, நிகழ்ச்சி களைகட்டியது.

அஜீத் அர்த்தத்துடன் பேசினார். தமிழ் டீ.வி. சேனல்களில் திரும்பத் திரும்ப சினிமாப் பாட்டுக்கள், காட்சிகளையே பார்க்கிற போது ரொம்ப சலிப்பாய் இருக்கிறது; இதுபோன்ற பாப் ஆல்பங்களுக்குத் தனி நேரம் ஒதுக்கினால் புதிய திறமைகள் வெளிப்படும் என்றார்.

மனோஜ் பாடுவார் என்பது தெரியும். (தாஜ்மஹாலில் ரஹ்மான் இசையமைப்பில் பாடியிருக்கிறார்) மீனாவுக்கு இத்தனை அழகாய்ப் பாடத் தெரியுமா? என்று அனைவரும் ஆச்சர்யப்பட்டார்கள். பல்லவிகள் போட்டுப் பழகிய இசையமைப்பாளர் தேவா, பல் வலியுடன் பேசியது குறிப்பிடத்தக்கது.

மனோஜ் ஆங்கிலத்தில் பேச ஆரம்பிக்க, ராதிகா, தமிழில் பேசும்படி சொன்னார். "இங்கிலீஷ்ல பேசினா கேட்க மாட்டாங்களா என்ன?" என்று தமிழில் கேட்டபின், ஆங்கிலத்தில் பேசிய மனோஜ் I thank my mom and dad என்று முடித்தார்.

சென்டிமென்டலாக, இசை ஆல்பத்துக்கு 'பதினாறு வயதினிலே' என்று பெயரிட்டிருக்கிறார்களாம். மனோஜ் பாடி இன்னொரு ஆல்பம் விரைவில் வெளிவரப்போகிறதாம்.

இவ்வளவு பெரிதாக விழா எடுத்தும், மீனா மிஸ்ஸிங்! ஏன் என்று காரணம் சொல்லப்படவில்லை.

— கௌதம்



மகளிர் ஸ்பெஷல்!



'தி கேர்ள்ஸ் ஆர்கெஸ்ட்ரா'! இருபது யுவதிகள் சேர்ந்து ஆரம்பித்திருக்கும் புதிய இசைக் குழு இது! இவர்களில் ஆறு பேர் பாடகிகள். மீதி பதினான்கு பேர்களும் புல்லாங்குழல், தபேலா, டிரம்ஸ் என்று பல விதமான இசைக் கருவிகளை வாசிக்கிறவர்கள். இவர்களின் அரங்கேற்றம் சென்னை காமராஜர் அரங்கில், பாடகி எஸ். ஜானகி குத்து விளக்கு ஏற்றி வைக்க நடைபெற்றது.

இருபது பெண்கள் இருந்தாலும், இரண்டு ஆண் பாடகர்களும் அவ்வப்போது மேடையில் தோன்றி கூடப் பாடினார்கள். லேட்டஸ்ட் ஹிட்கள் தவிர, பழைய பாடல்களையும் நன்றாகப் பாடியது ஒருபுறம் என்றால், வழக்கமாய் ஆண்கள் குரலிலேயே கேட்டுப் பழகிய சில பாடல்களை கணீரென்று பெண்கள் குரலில் கேட்டதும் ரசிக்கும்படியாகவே இருந்தது.

மேடையில் அத்தனை இசைக் கலைஞர்களும் இசை முழங்க, பாடகியை மட்டும் காணவில்லை. எங்கிருந்தோ, எலந்தப் பழம்... பாட்டு வந்தது. அப்புறம்தான் தெரிந்தது. பாடகி சுரேகா, கார்டுலெஸ் மைக்குடன் பார்வையாளர்கள் மத்தியில் நடந்தபடியே பாடிக் கொண்டிருக்கிறார் என்று. கடைசியில் மேடையேறி பாட்டை முடித்தபோது ஒரே கைத்தட்டல்தான்.

மொத்தமும் பெண்களாலான இசைக் குழு ஆரம்பிக்கும் எண்ணம் பற்றி இக் குழுவினை ஆரம்பித்துள்ள மதுவிடம் கேட்டோம்.

"பாடகிகள் கிடைப்பதில் சிரமம் இல்லை. இசைக் கருவிகள் வாசிப்பதில் அனுபவம் கொண்டவர்கள் கிடைப்பதுதான் ரொம்ப கஷ்டமாக இருந்தது. கல்லூரிகள், பள்ளிக் கூடங்களுக்குக் கடிதம், இசைப் பள்ளிகளில் தேடல் என்று அலைந்து திரிந்து, மற்றவர்களைக் கண்டுபிடித்து விட்டாலும் தபேலா வாசிக்கத்தான் ஆள் கிடைக்கவில்லை. கடைசியில், சென்னையின் தபேலாக் கலைஞர்கள் அத்தனை பேரையும் சந்தித்து, அவர்களிடம் தபேலா கற்றுக் கொண்ட பெண்கள் யாராவது உண்டா என்று விசாரித்து இருவரையும் கண்டுபிடித்தோம்."

"நிகழ்ச்சிக்கு ரெஸ்பான்ஸ் எப்படி?"

"பிரமாதம்! இதுபற்றிக் கேள்விப்பட்டு தமிழகமெங்கும் இருந்து விசாரிக்கிறார்கள்!" என்கிறார்.

– பாரதி

படங்கள் : யோகா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chef PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka



"உஜாலாவின் உன்னத வெண்மை விஞ்ஞான ரீதியிலான சாதனை."

INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் ஆய்வுக் கூடத்தில் தொடர்ந்து நன்கு சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட உஜாலாவின் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் (I.W.S.)™ இது தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளிலும் ஆழ்ந்து ஊடுருவிவெண்மையின் வெளிச்சத்தை துணிகளில் உடனடியாய் வெளிக்கொணர்கிறது. துணிகள் மீண்டும் துவைக்கும்போது, அழுக்குடன் முழுவதும் வெளியே தள்ளப்பட்டு விடுகிறது. நாட்கள் பல ஆனாலும் துணிகளின் இயல்பான வண்ணம் மாறாமல் புதிது போலவே பாதுகாக்கிறது. ஸ்கின் இரிட்டேஷன்-ஓரல் டாக்சிசிடி சோதனைகளில் பாதுகாப்பானது என ஆதாரபூர்வமாக கண்டறியப்பட்ட தயாரிப்பு உஜாலா ஒன்றே.

1983 முதல் அனேக கோடி உள்நாடு-வெளிநாடு வாடிக்கையாளர்களுக்கு முழுதிருப்தியை உஜாலா வழங்கிக் கொண்டிருக்கிறது. பாரத நாடெங்கும் பல மாநிலங்களில் உள்ள ஜோதி லேபின் விஞ்ஞான தொழில் நுட்ப மேன்மை மூலம் கடும் தரக்கட்டுப்பாடு முறைகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உஜாலாவும் உங்களை அடைகிறது.

விஞ்ஞான ஆதாரமற்ற முறையில், இரசாயன நிறுவனங்கள் தயாரிக்கும், நூலிழைகளை பலவீனப்படுத்தும், வண்ணம் குறைக்கும் மூலப்பொருட்கள் ஏதும் இதில் இல்லை. தரங்குறைந்த, கலப்பட இரசாயனக் கலவைகள் உங்களின் துணிகளுக்கு சேதம் ஏற்படுத்த இடம் அளிக்காதீர்கள்.

உஜாலா என கேட்டு வாங்கும் போது விஞ்ஞானபூர்வமற்ற ஏதேனும் ஒரு போலி தயாரிப்பை நீங்கள் பெறவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.



வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.